
கல்கி
KALKI
ஜுலை 25, 1954
அண
4
குடிசைத் தொழில் மலர்


க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
என் மனைவி என் ஆடைகளை மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்கிறாள். அவள் ஸன்லைட் சோப்பைத்தான் உபயோகிக்கிறாள். ஸன்லைட் சோப்பின் அதிசீக்கிரம் வேலை செய்யும் செழிப்பான நுரை ஆடைகளிலுள்ள அழுக்கை அடித்துத் துவைக்காமலே அகற்றிவிடுகிறது. அதனால் துணிகள் நீடித்திருக்கின்றன.
ஸன்லைட் சோப்பால் துணிகளை சலவை செய்வது மிகவும் சுலபம் அதனால் பொழுதுபோக்கிற்கு சாவகாசம் கிடைக்கிறது. ஸன்லைட் சோப்பின் சுறுசுறுப்பான நுரை அழுக்கை விரட்டி, உங்கள் துணிகளை நந்தவனம்போல் பிரகாசமாகச் செய்கிறது.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளைக் காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது
S. 230-50 TM
இந்தியாவில் தயாரித்தது


கல்கி ✣ குடிசைத் தொழில் மலர்

மலர் 13 இதழ் 52

ஜய ௵ ஆடி 10

பொருளடக்கம்

அட்டைச் சித்திரம்	மணியம்	...
நகரங்களுக்கு அபாயம்!	...	... 3
கிராமங்களுக்கு அபயம்!	...	... 4
ஐ. நா. தீப்பெட்டி! (கார்ட்டூன்)	ரகு	... 5
வந்தனை செய்வோம்!	...	... 6
மாநில மக்களின் மாபெரும் வெற்றி	...	... 9
மதுராந்தகம் மகாநாடு	(நமது நிருபர்)	... 10
சிறுவகைத் தொழில்கள்	டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்	... 15
சும்மா இருக்குமா?	சாமா	... 16
சென்னைக் கவர்னரின் செய்தி	...	... 19
வீட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு	வைகுந்தலால் மேத்தா	... 21
குடிசைத் தொழில் வளர்ச்சி	எம். பக்தவத்ஸலம்	... 23
இந்தியாவில் தீக்குச்சித் தொழில்	சி. கே. நாராயணசாமி	... 28
'கேப்' தொழிற்சாலை (போட்டோ)	...	... 32
சக்கரவர்த்தித் திருமகன்	ராஜாஜி	... 34
மனக் குரங்கு	குமாரி மணியன்	... 39
புகழ் பூத்த அமெரிக்கர்	...	... 44
கடல் முத்து (பாப்பா மலர்)	சீதா	... 47
இருளே ஓடு!	சாமா	... 48
வீட்டுத் தொழில் வளர்ப்போம்......	பகீரதன்	... 50
அடுத்த வீட்டுத் தென்னை	எஸ். என். பழனிசாமி	... 75
தீப்பெட்டி இல்லாமலே நடக்கும்......	சாமா	... 81
கோகிலா	ரமண்லால் தேசாய்-ரா.வீ.	... 83
சிறுமியின் காணிக்கை	...	... 90
தீக்குச்சியின் பிறப்பு	வி. ராஜாமணி	... 93
காவேரியின் கண்ணீர்	எம். எஸ். மணி	... 99
தீப்பெட்டித் திருமகள்	...	... 105
பொறுப்பு வந்தது	பி. வி. ஆர்.	... 107
பொரிக்கக் கூடங்கள்!	...	... 112



கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
—பாரதியார்

இதழ் 52

நகரங்களுக்கு அபாயம்!

அமெரிக்கா தேசத்தின் பணச் செருக்கைப் பற்றி நெடுநாளைக்கு முன்னர் சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டிருக்கிறார். இன்று வரை அந்தப் பணச் செருக்கு வளர்ந்து வந்திருப்பதைக் காண்கிறோம். சென்ற ஜூன் மாதத்தில் வெளியான ஒரு பிரபல அமெரிக்கப் பத்திரிகையில் காஷ்மீரைப் பற்றிப் படங்களுடன் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதன் தலைப்பு என்ன தெரியுமா?

"காஷ்மீர் இப்போது அமெரிக்கரை விரோதிக்கிறது: ஆனால்
அமெரிக்கரின் பணத்தை மட்டும் விரும்புகிறது!"

பாகிஸ்தான் தகராறில் அமெரிக்க மத்தியஸ்தம் வேண்டாம் என்று காஷ்மீர் சொல்கிறதாம்! ஆனால், அமெரிக்க யாத்திரீகர்களை வரவேண்டாம் என்று தடுக்கவில்லையாம். அவர்கள் கொண்டு வந்து செலவழிக்கும் பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் அவ்விதம் தடை செய்யவில்லையாம்! இதற்காகத்தான் மேற்படி தலைப்பு!

இந்தியர்களை வரவேண்டாம் என்று இங்கிலாந்து தடை செய்ய வில்லை; ஏன், அமெரிக்கரும் தடை செய்யவில்லை. இந்தியாவின் பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் அந்த நாடுகளில் இந்தியர்கள் பிரயாணம் செய்வதை அந் நாட்டார் தடை செய்யவில்லையா?

எனவே, அமெரிக்கரின் பணச் செருக்குத்தான் மேற்கண்டவாறு தலைப்புப் போடச் செய்தது என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

இத்தகைய பணக்கார அமெரிக்கா நாட்டில் எவ்வளவோ பெரிய நகரங்கள் இருக்கின்றன. அவற்றுள் எல்லாம் பெரியது நியூயார்க் நகரம். இந்த நகரத்தில் உள்ள சில மாளிகைகள் எண்பது அடுக்குகளும் அவற்றுக்கு மேலும் உள்ளன.

"கோண்டல்கள் விட்டு மதி முட்டுவன மாடம்!"

என்று இராவணன் ஆட்சியில் இலங்கையிலிருந்த மாளிகைகளைக் கம்பர் வருணிக்கிறார். அந்த வர்ணனைக்கு இன்று உரியனவாக Sky Scraper என்று பெயர் பெற்று நியூயார்க் மாளிகைகள் விளங்குகின்றன.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு யாத்திரை சென்ற ஒருவர் (இப்போதுதான் எத்தனையோ பேர் போகிறார்களே!) நியூயார்க் நகரம் சென்றார். அந்த நகரத்தின் எண்பது அடுக்கு மாளிகை ஒன்றைப் பார்க்கச் சென்றார்.

அந்த மாளிகையை அவருக்குக் காட்டுவதற்காக அழைத்துப் போனவர், அதன் பல விசேஷ அம்சங்களையும் காட்டி வர்ணித்துக் கொண்டு போனார்.

"இந்த மாளிகையில் மொத்தம் மூவாயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களுக்கு வேண்டிய சகல வாழ்க்கை வசதிகளும் இந்த மாளிகைக்குள்ளேயே இருக்கின்றன. பலவிதக் கடைகள் இருக்கின்றன; ஹோட்டல்கள் இருக்கின்றன; பள்ளிக்கூடமும் கலாசாலையும் இருக்கின்றன; சினிமாக் கொட்டகை, நாடகக் கொட்டகைகள் இருக்கின்றன; நடனச்சாலை இருக்கிறது; முடிவெட்டும் சாலைகளும், சலவைச் சாலைகளும் இருக்கின்றன; நீந்தும் குளங்கள் இருக்கின்றன; டென்னிஸ் பந்து ஆடவும், கால் பந்து ஆடவும் இடங்கள் இருக்கின்றன; மருத்துவ சாலைகள் இருக்கின்றன; பிரசவ வைத்திய சாலையும் இருக்கிறது! இதைக் கேளுங்கள்! இந்த மாளிகையில் பிறக்கும் ஒரு குழந்தை இவ்விடம் விட்டு வெளியில் போகாமல் வாழ்க்கை முழுதும் நடத்தி விடலாம்!!" என்றார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த இந்தியர், "சரிதான்; ஆனால் வாழ்க்கை முடிவில் இறந்து போனபிறகு புதைப்பதற்கோ, எரிப்பதற்கோ இடம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"அதுமட்டும் இல்லை!" என்று பதில் வந்தது.

"எப்படியும், கடைசியாக ஒரு நாள் இந்த மாளிகையிலிருந்து புறப்பட்டுத்தானே ஆகவேண்டும்? ஆகையால், இப்போதே கிளம்பி விடுகிறேன்!" என்றார் இந்தியர்.

மேற் குறிப்பிட்ட வரலாறு அமெரிக்காவில் நகர வளம் எப்படிப் பெருகி யிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அமெரிக்காவைப் போலவே இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் முதலிய தேசங்களிலும் நகரங்கள் வளம் பெற்றிருக்கின்றன. அந் நாடுகளில் பெரிய ராட்சஸ இயந்திரங்களின் உதவி கொண்ட ஆலைத் தொழில்கள் அபரிமிதமாகப் பெருகி யிருக்கின்றன. ஆலைத் தொழில் பெருக்கம் நகரங்கள் பிரம்மாண்டமாக வளர்வதற்குக் காரணமாகிறது.

இவ்வாறு நகர நாகரிகம் செழித்துள்ள தேசங்கள் எல்லாம் இப்போது பெரும் பீதியில் ஆழ்ந்திருக்கின்றன. அணு குண்டையும், ஹைட்ரஜன் குண்டையும் கண்டு பிடித்து முதலில் செய்தவர்கள் அமெரிக்கர்கள்தான். ஆயினும், அமெரிக்காவிலேதான் மேற்படி குண்டுகளைப் பற்றிய பீதியும் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. ஒரே ஒரு சிறிய ஹைட்ரஜன் குண்டு நியூயார்க் நகரில் விழுந்து விட்டால், ஆயிரக் கணக்கான வானளாவிய மாளிகைகள் உள்ளதும் கோடானு கோடி பணம் படைத்ததுமான அம்மாநகரம் ஐந்து நிமிஷ நேரத்தில் இருந்த இடந் தெரியாமல் போய் விடுமாம்! அந்த நகரத்தில் வசிக்கும் எண்பது லட்சம் மக்களின் கதியைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை யல்லவா! எனவே, ருஷியாவிடத்திலும் 'அணுகுண்டு' 'ஹைட்ரஜன் குண்டு'கள் இருக்கின்றன என்ற செய்தி அமெரிக்கர்களுக்குப் பீதியை உண்டாக்கி யிருக்கிறது.

இங்கிலாந்து முதலிய நகர நாகரிகத்தை வளர்த்துள்ள நாடுகளிலும் இந்தப் பீதி பரவி வருகிறது. அதன் காரணமாக இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்ற மகா யுத்தத்தின்போது ஏற்பட்டிருந்த அந்நியோன்ய உறவுக்குக்கூட இப்போது பங்கம் ஏற்பட்டிருக்கிறது. வின்ஸ்டன் சர்ச்சிலும் ஐஸன் ஹோவரும் அபிப்பிராய பேதம் கொள்ளும்படி நேர்ந்திருக்கிறது.

இங்கிலாந்தில் அமெரிக்கர் யுத்த தளங்கள் ஏற்படுத்திக் கொள்ள ஆங்கில சர்க்கார் முன்னம் வசதி செய்து கொடுத்தார்கள். இங்கிலாந்தின் பாதுகாப்புக்கு அமெரிக்க யுத்த தளங்கள் பெரிதும் உதவும் என்று நம்பினார்கள்.

இப்போது அந்த எண்ணம் மாறி விட்டது. அமெரிக்கா யுத்ததளங்கள் இங்கிலாந்தில் இருந்தால், அடுத்த மகாயுத்தம் ஆரம்பமாகும் போது, முதலில் ருஷியாவின் அணுகுண்டு – ஹைட்ரஜன் குண்டுப் பிரயோகத்துக்கு இங்கிலாந்து உள்ளாக நேரும் என்று ஆங்கிலேயர் அஞ்சுகிறார்கள்.

இப்போது பஸிபிக் சமுத்திரத்தில் ஹைட்ரஜன் குண்டு சோதனை செய்ததின் பலனாகச் சில தீவுகள் அடியோடு மறைந்து விட்டன!

அம்மாதிரி கதி இங்கிலாந்துக்கும் ஏற்பட்டு விடலாம் அல்லவா!

ஆகையினாலேயே, அந்நிய நாட்டுக் கொள்கையில் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் அபிப்பிராய வேற்றுமை அடிக்கடி உண்டாகிறது. சமீபத்தில் சர்ச்சில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது அந்நாட்டில் அவர் எவ்வித உற்சாகத்தையும் உண்டுபண்ண முடியவில்லை!

ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் முதலிய நகர வளம் மிக்க நாடுகளும் அணுகுண்டு - ஜலவாயு குண்டுகளின் அபாயத்தை எண்ணிப் பயந்து நடுங்கிக் கொண்டுதா னிருக்கின்றன.

கிராமங்களுக்கு அபயம்!

இந்தியாவிலுள்ள நாம் அணுகுண்டு ஜலவாயு குண்டுகளுக்கு அவ்வளவாகப் பயப்படாமல் இருக்கிறோம்.

இங்கே நகர நாகரிகம் இன்னும் அவ்வளவாக வளம் பெறவில்லை.

இந்தியாவில் பத்து லட்சம் ஜனங்களுக்கு மேல் வசிக்கும் நகரங்கள் நான்குதான் இருக்கின்றன.

இந்தியாவின் முப்பத்தைந்து கோடி மக்களில் முப்பது கோடிப் பேர் பட்டிக்காடுகளில் உள்ள ஓட்டு வீடுகளிலும் ஓலைக் குடிசைகளிலும் வசிப்பவர்கள்.

மிச்சமுள்ள ஐந்து கோடி மக்களில் இரண்டரைக் கோடிப் பேர் மதுராந்தகம், மன்னார்குடி, சிவகாசி, தென்காசி போன்ற சிறிய பட்டணங்களில் வசிக்கிறார்கள்.

பெரிய நகரங்களில் வசிப்பவர்கள் மொத்தம் இரண்டரைக் கோடிக்கு மேல் இராது.

பெரிய அணுகுண்டு ஒன்று செய்வதற்கு மூந்நூறு கோடி ரூபாய் செலவாகிறதாம்!

ஜலவாயு குண்டுவுக்கு இன்னும் அதிகச் செலவாகும்! ஆயிரம் கோடிகூட ஆகலாம்.

அவ்வளவு பணச் செலவு பண்ணிச் செய்த விலை உயர்ந்த அணுகுண்டு, ஜலவாயு குண்டுகளைக் கேவலம் ஓட்டு வீடுகள், ஓலைக் குடிசைகளின் பேரில் போட்டு வீணாக்குவார்களா!

நியூயார்க், சிக்காகோ, லண்டன், பெர்லின், பாரிஸ், டோக்கியோ முதலிய நகரங்களின் மீது போட்டால்தான் கோடிக் கணக்கான ரூபாய் மூலதனத்துக்குத் தகுந்த லாபம் கிடைக்கும்!

அமெரிக்கர்களும் சரி, ருஷியர்களும் சரி இந்தப் பொருளாதார அம்சத்தை ஊன்றிக் கவனியாமல் விடுவார்களா!

** ** **

தீர்க்கதரிசியாகிய மகாத்மா காந்தி, அணுகுண்டு அபாயம் ஏற்படாதிருந்த காலத்திலேயே, இந்திய நாகரிகம் கிராம நாகரிகமாக வளர வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.

கிராமங்கள் வளம் பெற வேண்டும், கிராம வாழ்வு சிறந்திட வேண்டும், கிராமக் கைத் தொழில்கள் செழித்திட வேண்டும் என்று இடைவிடாமல் போதித்து வந்தார்.


மற்றத் தலைவர்களின் மனத்தில் இது நன்றாய்ப் பதிய வேண்டும் என்பதற்காகக் காங்கிரஸ் மகா சபையைக் கிராமப் புறத்தில் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினார். அவ்வாறே பல காங்கிரஸ் மகாசபைகள் கிராமங்களில் நடந்தன.

தாமும் சேவக்கிராமம் என்னும் மிகச் சிறிய கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே சிறு குடில் கட்டிக் கொண்டு வசித்து வந்தார்.

அயல் நாட்டிலிருந்து வந்தவர்களுக்கெல்லாம் அது யாத்திரை ஸ்தலமாகி வந்தது. ஆனால் அந்தக் கிராமம் பட்டணமாவதற்குக் காந்தி மகாத்மா இடங் கொடுக்கவில்லை.

இந்தியாவில் நகரங்கள் பெருகுவதையோ தொழில்கள் இயந்திர மயமாவதையோ காந்தி மகான் சிறிதும் விரும்பவில்லை. இவற்றினால் விளையக்கூடிய கேடுகளை ஆயிரம் முறை அழுத்தமாக எடுத்துச் சொல்லி வந்தார்.

ஐ. நா. தீப்பெட்டி!



இந்தியா சுதந்திரம் பெற்று மகாத்மா காந்தியும் அமரரான பின்னர், அவருடைய போதனைகளில் பலவற்றை நாம் மறந்து வந்திருக்கிறோம்; அவ்விதம் மறப்பதில் நம் தலைவர்கள் நமக்கு வழி காட்டி வந்திருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தினரும் அரசியல் தலைவர்களும் பெரிய பெரிய இயந்திர சாதனங்களைக் கொண்ட தொழில்களை வளர்ப்பதிலேயே அதிகமாகக் கவனம் செலுத்தினர்கள்.

இவையெல்லாம் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமாக வேண்டியவைதான்.

இரும்பு உருக்கும் ஆலைகள், மின்சார உற்பத்திச் சாலைகள், ரயில் என்ஜின்களையும் ரயில் வண்டிகளையும் செய்யும் தொழிற்சாலைகள், மோட்டார் — சைக்கிள் உற்பத்திச் சாலைகள், ஆகாச விமானம் கட்டும் சாலைகள் — இவையெல்லாம் வேண்டியவைதான்.

ஆனல் இவையெல்லாம் சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்துக்கு முக்கியமான சாதனங்கள் ஆக முடியாது.

நகரங்கள் எவ்வளவு சிறந்தாலும் இயந்திர ஆலைத் தொழில்கள் எவ்வளவு வளர்ந்தாலும் இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியாது; இந்திய மக்களின் பயங்கர வறுமையைப் போக்கவும் முடியாது.

இந்தியாவின் மக்களில் இப்போது 100க்கு 85 பேர் வீதம் கிராமங்களில் வசிக்கிறார்கள். அடுத்த இருபது வருஷத்திற்குள் நகரங்கள் எவ்வளவு பெருகினாலும் 85 பேரில் 5 பேர்தான் நகரங்களுக்குப் போக முடியும். மிச்சமுள்ள 100க்கு 80 பேர் கிராமங்களிலேதான் வசித்தாக வேண்டும்.

இந்தியாவில் வேலை செய்யக் கூடிய பிராயத்தினர் இப்போது 25 கோடிப் பேர் இருக்கிறார்கள். இவர்களில் இன்று இயந்திர ஆலைத் தொழில்களில் வேலை செய்கிறவர்கள் ஐம்பது லட்சம்பேர். இந்திய சர்க்கார் போட்டிருக்கும் பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் பரிபூரணமாக நிறைவேறினாலும் இன்னும் ஐம்பது லட்சம் பேருக்குத்தான் வேலை கிடைக்கும். மொத்தம் ஒரு கோடிப் பேர்களுக்குமேல் பெரிய ஆலைத் தொழில்களில் வேலை பெற முடியாதென்பது நிச்சயம்.

ஓர் உதாரணம் பாருங்கள். ஸிந்த்ரி என்னுமிடத்தில் பல கோடி ரூபாய்கள் மூலதனம் போட்டு இந்திய சர்க்கார் ரசாயன உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். இதனால் நாடு அடையக் கூடிய நலன்களைப் பற்றி எவ்வளவோ பிரசாரம் செய்யப்படுகிறது. இங்கே உற்பத்தியாகும் உரம் தேசமெங்கும் பிரசார முழக்கத்துடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறவர்கள் மொத்தம் எவ்வளவு பேர் தெரியுமா! மூவாயிரம் பேர்தான்!

இயந்திர - ஆலைத் தொழில்கள் பல கோடி ரூபாய் மூலதனத்தில் எவ்வளவு பெரிய அளவில் அமைத்தாலும், அங்கே வேலை செய்வோர் சொற்ப தொகையினராகவே இருக்க முடியும்.

இந்தியாவில் 100-க்கு 80 பேர் வீதம் ஜனங்கள் கிராமங்களிலேயே வசித்தாக வேண்டும்.

இந்தியாவில் வேலை செய்யத் தகுதி வாய்ந்த 25 கோடிப் பேருக்கு வேலை கொடுத்தாக வேண்டும்.

ஆகையால், இந்திய சுதந்திர சர்க்கார் கிராமங்களை வளப்படுத்துவதில் பூரண கவனம் செலுத்த வேண்டும். லட்சக் கணக்கான கிராமங்களில் வசிப்பவர்களுக்குத் தொழில் தேடிக் கொடுப்பதில் பெரிதும் சிரத்தை எடுக்க வேண்டும்.

கிராமவாசிகள் பெரும்பாலும் இப்போது விவசாயத்தினால் பிழைத்து வருகிறார்கள். ஆனால் விவசாயத்தில் சாதாரணமாக இப்போது வருஷத்தில் பாதி நாட்களுக்குத்தான் வேலை இருக்கிறது. மற்ற நாட்களில் செய்யக் கூடிய கிராமக் கைத்தொழில்களைக் கண்டு பிடித்து அமைத்து வளர்ப்பதில் ஊக்கம் கொள்ள வேண்டும்.

காந்தி மகாத்மா தமது தீர்க்க தரிசனத்தினால் உணர்ந்து, ஆத்ம ஒளியினால் கண்டு, நமக்குக் காட்டிவிட்டுச் சென்ற கிராம முன்னேற்ற வழிகளைக் கடைப் பிடிக்க முயல வேண்டும்.

இந்திய அரசாங்கத்தாரும் நம் அரும் பெரும் தலைவர்களும் கிராமங்களை அடியோடு மறந்து விட்டார்கள் என்று நினைக்கும்படி இருந்தது.

நல்ல வேளையாக, சமீபத்தில் கிராமங்களைப் பற்றியும் கிராமக் கைத்தொழில்களைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

கிராமவாசிகளுக்கு 'அபயம்' அளித்திருக்கிறார்கள். இதுவரையில் செய்திருப்பது சொற்பம்; இனிச் செய்ய வேண்டியது மிக அதிகம்.

செய்வதைத் துரித காலத்தில் திறமையுடன் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

வந்தனை செய்வோம்!

காந்தி மகானுடைய கிராமக் கைத்தொழில் இலட்சியத்தைத் தமிழ் நாட்டில் சிலர் காரியத்தில் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

இந்திய சர்க்கார் இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ள காரியத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திக் காட்டி யிருக்கிறார்கள்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியாரின் வாக்கின்படி, நமது வந்தனத்துக்கு அவர்கள் பல வகையிலும் உரியவர்களா யிருக்கிறார்கள்.

சிவகாசி—சாத்தூர்ப் பகுதிகளில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்திய சர்க்காரும் இந்தியப் பொது மக்களும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.

கிராம வாசிகள் தத்தம் வீடுகளில் செய்வதற்கு உகந்த சிறிய கைத்தொழில்களை எப்படி வெற்றிகரமாக நடத்துவது என்பதை இவர்கள் செய்து காட்டி நிரூபித்திருக்கிறார்கள்.

•• •• ••

நமது நாட்டுக்கு உகந்த வீட்டுத் தொழில்—சிறிய கைத் தொழில்,—எந்த விதமாக இருக்க வேண்டும் என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு தேங்காயின் கொட்டாங்கச்சியில் சித்திர விசித்திரமான வேலைப்பாடுகளை அமைத்திருக்கிறேன் என்று ஒருவர் கொண்டு வந்து காட்டினால், அவருடைய கைத்திறமையையும் கற்பனைத் திறனையும் நாம் பாராட்டலாம்.

ஆனால் அது கிராமக் கைத்தொழிலும் ஆகாது; வீட்டுக் கைத்தொழிலும் ஆகாது.

தந்தத்தில் அபூர்வமான வேலைப்பாடுகள் அமைத்து யானை, குதிரை செய்யக் கூடிய திறமையாளர்கள் இருக்கிறார்கள். செம்பு, பித்தளையில் அற்புதமான சிலை வடிவத்தை அமைக்கக் கூடிய கலைஞர்கள் இருக்கிறார்கள்.

இவையெல்லாம் கை விரலால் எண்ணக்கூடிய ஒரு சிலருக்கே வேலை கொடுக்க முடியும். இவற்றை வாங்குவதற்கு மாஜி மகாராஜாக்கள், ஜமீன்தார்கள், அல்லது இந் நாட்டில் இன்னும் உள்ள கலை உணர்வு வாய்ந்த கோடீசுவரர்கள், அல்லது பணத் திமிர் கொண்ட அமெரிக்கர்கள்—இவர்களைத் தேடிப் பிடித்தாக வேண்டும்.

கைத்தொழிலை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு இந்திய சர்க்கார் இம்மாதிரி காரியங்களில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுவது கடைசியில் வீண் விரயமாக முடியும்.

ஆயிரக் கணக்கானவர்களுக்கும் லட்சக்கணக்கானவர்களுக்கும் வேலை கொடுக்கக் கூடிய வீட்டுக் கைத்தொழில்களிலேயே தற்போது சர்க்காரும் மக்களும் கவனம் செலுத்த வேண்டும்.

அப்படி உற்பத்தியாகும் பொருள்கள் எல்லாருக்கும் தேவையானதாகவும் எளிதில் விற்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளெல்லாம் பூர்த்தியாகும் சிறந்த இலட்சிய வீட்டுத் தொழிலாக நம் நாட்டில் உள்ளது கைத்தறித் தொழில்தான். லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை கொடுத்து வந்த தொழில். இந்தத் தொழிலுக்குச் சில காலத்துக்கு முன்பு பேரபாயம் வந்திருந்தது. மாகாண சர்க்கார்களும் இந்திய சர்க்காரும் தலையிட்டு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கைத்தறித் தொழில் அழிந்து போகாமல் காப்பாற்றினார்கள். ஆனால் அபாயம் நீங்கிவிட்டது என்று அசிரத்தையாக இருக்கக் கூடாது. மேலும் அத் தொழிலைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வர வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளை யெல்லாம் நிறைவேற்றும் மற்றொரு இலட்சியக் கைத்தொழில்,—கிராமங்களில் செய்யக் கூடிய வீட்டுத் தொழில்,—நமது செந்தமிழ் நாட்டில் இப்பொழுது வெற்றிகரமாக நடந்து வருகிறது.

தீக்குச்சித் தொழில் ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் மக்கள் ஈடுபட்டு வேலை செய்யக் கூடிய தொழில்.


தீக்குச்சிப் பெட்டியின் தேவையைப்பற்றியோ, சொல்ல வேண்டியதில்லை. வீடு என்று இருந்தால், தீப்பெட்டி இல்லாமல் காரியம் நடக்க முடியாது. மின்சாரம் உதவும் நகரங்களிலும் கூட வீட்டுக் காரியங்களுக்குத் தீப்பெட்டி அவசியம் வைத்திருக்க வேண்டும்.

சுருட்டு, பீடி, சிகரெட் குடிக்கும் வழக்கமுள்ளவர்களுக்குத் தீக்குச்சிப் பெட்டி ஒரு இன்றியமையாத சாதனமாகி விட்டது.

ஆகையால் தீப்பெட்டித் தொழிலை ஓர் இலட்சிய வீட்டுத் தொழில் என்று உறுதியாகச் சொல்லலாம்.

இதை, நம் சென்னைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தாம் நேரில் பார்த்து அறிந்ததைக் குறிப்பிட்டு இந்த இதழுக்கு அனுப்பி யிருக்கும் செய்தி, மேலும் உறுதிப்படுத்துகிறது.

இத்தகைய அபூர்வமான சிறிய கைத்தொழில் சாத்தூர் – சிவகாசிப் பகுதிகளில் வளர்ந்து சிறந்த வரலாற்றைப் பற்றி இந்தக் "கல்கி" இதழில் விவரமாகக் காணலாம்.



காலிகோ ஷர்ட்டிங்கள்

காலிகோ மில்ஸ், அஹமதாபாத்

1880லிருந்து உயர்ந்த துணி தயாரிப்பவர்கள்.

TAM_SHILPI-CA-118

இந்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் இத் தொழிலுக்கு இதுவரைச் செய்திருக்கும் உதவிகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் இத் தொழிலுக்கு உதவி செய்து வளர்ந்தோங்கச் செய்வதில் அரசாங்கத்தார் சிரத்தை கொண்டுள்ளனர் என்பதை இந்திய சர்க்காரின் கைத் தொழில்—வர்த்தக மந்திரி கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் கட்டுரையிலிருந்தும், விவசாய மந்திரி கனம் பக்தவத்ஸலம் கட்டுரையிலிருந்தும் அறியலாம்.

இந்திய சர்க்கார் அமைத்துள்ள அகில இந்தியக் கதர்—கிராமத் தொழில் போர்டாரின் திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக் "கல்கி" இதழ், விசேஷ தீபலக்ஷ்மி இதழாக வெளியாவதற்கு உதவி செய்த அனைவருக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாஹி மக்களின் மாபெரும் வெற்றி

எந்த ஆத்ம சக்தியின் ஒளி, பாரத நாட்டிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கமாகிற அந்தகாரத்தை ஒழித்ததோ, அதே ஆத்ம சக்தி மேற்குக் கடற்கரையில் உள்ள மாஹியிலிருந்து இப்போது பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கமாகிற இருளை ஒழித்திருக்கிறது. சரியாக, சென்ற இருநூற்று முப்பத்திமூன்று ஆண்டுகளாக அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்து வந்த மாஹி மக்கள் காந்திஜி காட்டிய வழியில் சென்ற வாரம் சுதந்திரம் பெற்று விட்டார்கள். இந்தியக் குடியரசுடன் ஐக்கியம் அடையும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்து விட்டது.

மாஹியில் பிரஞ்சு சர்க்காரின் பிரதிநிதியாக இருந்து சர்க்கார் நிர்வாகத்தை நடத்தி வந்த ஸ்ரீ டெஸ்காம்ப்ஸ் அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்புவித்து விட்டுப் பிரான்சுக்குக் கப்பல் ஏறிவிட்டார்.

மாஹி விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீ ஐ. கே. குமரன் தலைமையில் மாஹி மேயர் ஸ்ரீ சகாதேவன் உள்படப் பதினறு பேர்கள் அடங்கிய சபை சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பிரஞ்சுக்காரர்கள் தங்கள் நாட்டிலிருந்து எண்ணாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இந்தோ சீனாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக மிகவும் உக்ரமாகப் போராடி வருகையில், நாலாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் மாஹியில் தங்கள் ஆதிக்கத்தைக் கைவிட்டது ஆச்சரியம் அல்லவா!

மாஹிக் கடற்கரையில் இருந்த பிரஞ்சு யுத்தக் கப்பல்களையோ, பிரஞ்சுக்காரர்களின் போர்த் தளவாடங்களையோ கண்டு மாஹி மக்கள் சிறிதும் கலங்கவில்லை.

எத்தனை ஆண்டுகள் நடந்தாலும் ஆயுதப் போரைக் கண்டு சலிக்காத பிரஞ்சுக்காரர்கள் மாஹி மக்களின் அஹிம்சைப் போரைச் சமாளிக்க முடியாமல் அடிபணிந்து விட்டனர்.

எனவே, ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆத்ம பலமே அதிக சக்தி வாய்ந்தது என்பதற்கு மாஹி மக்களின் விடுதலை மற்றோர் உதாரணமாக அமைந்திருக்கிறது.

மாஹி அரபிக் கடற்கரையில் மலையாளம் ஜில்லாவை அடுத்துள்ள பிரதேசம் ஆகும். இருபத்து மூன்று சதுர மைல்கள் விஸ்தீரணம் உள்ள அப் பிரதேசத்தின் ஜனத்தொகை இருபதினாயிரம் தான். பிரஞ்சுக்காரர்கள் இந்தியாவில் காலடி வைக்க டச்சுக்காரர்களுடனும் பிரிட்டிஷாருடனும் போராடிக் கொண்டிருந்தபோது, 1721-ம் வருஷம் கேரள ராஜாக்களில் ஒருவர் மாஹியைப் பிரஞ்சுக்காரர்களுக்கு விட்டுக்கொடுத்துவிட்டார். அதிலிருந்து அப் பிரதேசம் பல தடவை கை மாறியது. கடைசியாக 1817-ம் வருஷம் மாஹி பிரிட்டிஷாரிடமிருந்து நிரந்தரமாகப் பிரஞ்சுக்காரர்களின் கைக்கு வந்தது.

மாஹி வெகு சிறிய பிரதேசமாயினும் அது அன்னியர்களின் சூழ்ச்சிக்கும் போட்டா போட்டிக்கும் இலக்கு ஆகாமல் தப்ப முடியவில்லை.

எனவே, இரண்டு நூற்றாண்டுக்கு மேற்பட்ட அன்னியர் ஆதிக்கத்தை உதறித் தள்ளிய மாஹி மக்களைப் பாரத மக்கள் யாவரும் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

**　　**　　**

ஏற்கெனவே, பிரஞ்சுக்காரர்களின் அநுமதியோ அங்கீகாரமோ இல்லாமலேயே ஆந்திர ராஜ்யத்தில் உள்ள ஏனம் மக்கள் விடுதலைப் பிரகடனம் செய்து விட்டார்கள்.

அவ்விதமே மாஹியிலும் நிலைமை முற்றுவதற்குள் பிரஞ்சு அதிகாரிகள் அப் பிரதேசம் விடுதலை பெறுவதற்கு இசைந்து, தாங்கள் வெளியேறியது புத்திசாலித்தனம் ஆகும்.

ஆனால், பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுச்சேரியிலும் காரைக்காலிலும் பிரஞ்சுக்காரர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

புதுச்சேரியில் பிரஞ்சு அதிகார வர்க்கத்துக்கு ஆதரவு அளித்து வந்த தாசர்கள் கூட இப்போது பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

அங்குள்ள தேச பக்தர்கள் விடுதலைப் போரை வெகு தீவிரமாக நடத்துவதற்கு வீறு கொண்டு எழுந்து விட்டார்கள்.

மாஹியிலிருந்து பிரஞ்சு அதிகாரிகள் தாங்களாக வெளியேறியதைப் பின் பற்றி, புதுச்சேரி, காரைக்காலிலும் செய்வார்களாயின், பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள பிரச்னை உலகமே போற்றத்தக்க விதத்தில் தீர்ந்துவிடும்.

நெருப்பைக் கண்டு பிடித்ததின் மூலம் மிருகங்களின் மேல் மனிதன் ஆதிக்கம் பெற்றான். அந்தக் காலத்தில் ரிஷிகளிடம்தான் நெருப்பு இருந்தது. அவர்களிடமிருந்து மக்கள் நெருப்புப் பெற்று வந்தார்கள். ஆகவே, தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் ரிஷிகளுக்குச் சமமானவர்கள்.

சென்னை
26-10-50

ராஜாஜி

மதுராந்தகம் மகாநாடு

[நமது நிருபர்]

பெண் பேய் ஒன்று காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்தது. ஒருநாள் அது என்ன நினைத்ததோ தெரியவில்லை, வழிப்பாதையில் வருகிற ஆடவன் யாரையாவது பிடித்துக் கொள்ள வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தது.

மாலை வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. வணிகன் ஒருவன் அந்த வழியாக வந்தான்.

பெண் பேய் வணிகன் மனைவிபோல உருவெடுத்துக் கொண்டது. இடுப்பில் குழந்தையையும் வைத்துக் கொண்டது. வணிகனுடன் வாய் பேசாமல் தொடர்ந்தது. தன்னைத் தொடர்ந்து வருவது பேய் என்பதைத் தெரிந்து கொண்ட வணிகன் இருட்டுவதற்கு முன், பக்கத்தில் உள்ள பழையனூர் என்ற கிராமத்துக்குச் சென்றுவிட நினைத்து விரைந்து நடந்தான். கிராமத்துக்குள் வந்ததும் தான் அவன் பயம் தெளிந்தது. இருந்தாலும் பேய் தன்னுடன் தொடர்ந்து வருவதைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மௌனமாக நடந்து சென்றான்.

வழியில் பழையனூர்ப் பஞ்சாயத்தார் ஐந்து வேளாளர்கள் அமர்ந்து ஊர் வழக்குகளைப் பேசித் தீர்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் பெண் பேய் சென்றது. 'ஓ!' வென்று கதறியது. "இதோ போகிறவர் என் கணவர். என்னையும் குழந்தையையும் தெருவில் விட்டு விட்டுப் போகிறார். தயவு செய்து நீதி வழங்குங்கள்" என்று கண்ணீர் விட்டுக் கதறியது.

பஞ்சாயத்தார் மனம் இளகினார்கள். அந்த வணிகனைக் கூப்பிட்டு விசாரித்தார்கள்.

வணிகன் "இது என் மனைவியல்ல. பெண் பேய். இதனிடம் தப்பித்துக் கொள்ளவே இருட்டுவதற்கு முன் இங்கு ஓடி ஓடி வந்தேன்" என்றான். இன்னும் என்ன என்னவோ சொன்னான். அவன் கூற்று பஞ்சாயத்தார்கள் காதில் ஏறவில்லை.

பெண் பேய் தன் இடுப்பில் இருந்த குழந்தையை எடுத்துக் கீழே விட்டது. குழந்தை தவழ்ந்து சென்று வணிகன் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டது! "பார்த்தீர்களா, குழந்தை தன் தந்தையிடம் சென்று விட்டதை! இப்படிப்பட்ட குழந்தையை விட்டுச் செல்கிறேன் என்கிறாரே!" என்று பெண் பேய் கண்ணீர் வடித்தது.

பஞ்சாயத்தார்கள் வணிகனைச் சமாதானப் படுத்தினார்கள். அன்று இரவு அங்கு தங்கிப் பொழுது விடிந்து போகலாம் என்று வற்புறுத்தி அவர்களை ஒரு வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார்கள்.

பொழுது விடிந்ததும் வணிகனும் மனைவியும் எப்படி இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காகப் பஞ்சாயத்தார் வந்தார்கள்.

வீட்டின் இரண்டு கதவுகளும் திறந்து கிடந்தன. வணிகன் இறந்து கிடந்தான். மனைவியையும் குழந்தையையும் காணவில்லை.

"ஆகா! மோசம் போனோம். வணிகனைப் பேய் கொன்று விட்டது! நம்மையும் வஞ்சித்து விட்டது!" என்று மனம் நொந்தார்கள்.

தாங்கள் செய்த பெருந் தவறுக்காகப் பெரிய தீ வளர்த்துப் பஞ்சாயத்தார்கள் ஐந்து பேரும் அத் தீயிலே குதித்து உயிரை விட்டார்கள்.

யாரோ வழிப்போக்கனாக வந்த ஒரு வணிகனுக்குத் தாங்கள் தவறு இழைத்து விட்டதற்காக, ஒரு பேய் செய்த வஞ்சனைக்காகப் பழையனூர்ப் பஞ்சாயத்தார்கள் ஐவரும் தங்கள் உயிரையே தியாகம் செய்து விட்டார்கள்!

இப்படித் தர்மம் தவறாமல் தமிழ் நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி நடந்து வந்தது என்று நமது பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன.

ஆகவே தமிழ் நாட்டுக்குப் பஞ்சாயத்து ஆட்சி புதியதன்று. இப்போது தமிழ் நாட்டில் நடந்து வரும் அனேக பஞ்சாயத்துக்களில் மிகவும் இக்கட்டான, தர்ம சங்கடமான, மனத்துக்குக் கஷ்டம் தரக்கூடியதுமான பல விஷயங்களில் தர்ம நியாயமாகவும், பஞ்சாயத்து ஆட்சியின் நன்மைக்கு உகந்த முறையிலும் தீர்ப்பளித்து வருகிறார்கள் என்று செய்திகள் காதில் விழுந்தன.

இப்படிப் பஞ்சாயத்து ஆட்சி தர்ம நியாயமாக நடப்பதாக எங்கே காதில் விழுந்தது!

ஜூலை 11-ல் நடந்த மதுராந்தகம் தாலுக்காப் பஞ்சாயத்தார்கள் மகாநாட்டில் தான் காதில் விழுந்தது. அந்தத் தாலுக்காவில் உள்ள பஞ்சாயத்துக்களில் சில அப்படி நடந்து வருவதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

இப்படி மக்களுக்கெல்லாம் நியாயம் வழங்கும் பஞ்சாயத்தார்கள் தங்களுக்கு நியாயம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளவே மதுராந்தகத்தில் மகாநாடு நடத்தினார்கள்.

மகாநாடு காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் என்று போட்டிருந்தது. அதனால் பஞ்சாயத்தார்

தீப்பெட்டிக் குடிசைத் தொழில்

★ ○ ★

கையினாலேயே செய்யப்படும் இத்தகைய சுதேசி தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பற்றி மந்திரிமார்கள் ஆராய்ந்து அவசியம் கவனிக்க வேண்டும். நம் நாட்டுக்குத் தேவையான தீப்பெட்டிகள் முழுவதும் இத்தகைய குடிசைத் தொழில் மூலமே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

மகாத்மா காந்தி

களும், பொது மக்களும் ஒன்பது மணிக்கு முன்பாகவே மகாநாடு நடக்கப்போகும் மதுராந்தகம் கனகம் டாக்கீஸ் கொட்டகைக்குள் வந்து கூடி விட்டனர். மணி ஒன்பதாயிற்று; ஒன்பேகால் ஆயிற்று; ஒன்பதரை ஆயிற்று. மகாநாடு ஆரம்பிக்கப் போகும் அறிகுறியே காணவில்லை. பிறகு விசாரித்ததில் மகாநாட்டுக்கு இரண்டு மந்திரிகளை அழைத்திருப்பதாகவும் அவர்கள் இன்னும் வரவில்லை என்றும் தெரிந்தது. மகாநாட்டுக் கொட்டகைக்குள் இருந்த மக்கள் மந்திரிகளைத் தேடிக் கொண்டு ஒவ்வொருவராக வெளியில் வந்தனர். அங்கிருந்து மெதுவாக நடந்து மதுராந்தகம் கடை வீதிக்கே வந்து விட்டனர்.

விழா நிர்வாகி திரு ஓ. என். துரை பாபு பரபரப்பாக அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தார். மகாநாட்டுத் தலைவர் திரு கே. ஆதிகேசவலு ரெட்டியார் மந்திரிகள் வரும் திக்கையே ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தார். இன்னும் பல நிர்வாகிகள் கவலையினால் வியர்த்து விட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்.

இந்தச் சமயத்தில் "ஓ! ஓ!" என்று கூவினார் திரு ஓ. என். துரைபாபு.

"ஆ! ஆ! என்ன! என்ன!" என்று கேட்டார் திரு ஆதிகேசவலு ரெட்டியார்.

"மணியாகி விட்டதே! மந்திரிகள் வந்து விடுவார்களே! மேளக்காரர்களைக் காணோமே!"

"இதோ சைக்கிளைக் கொடுத்து விட்டுப் பார்த்து வரச் சொல்கிறேன்."

சைக்கிள் பறந்தது.

பத்து மணி சுமாருக்கு நாதஸ்வர வாத்தியத்தைத் தோளில் போட்டுக் கொண்டு சைக்கிளை 'வதக்' 'வதக்' கென்று மிதித்துக் கொண்டு ஒருவர் வந்தார். அந்த சைக்கிளின் பின்னால் மேளத்தை மடியில் வைத்துக் கொண்டு இன்னொருவர் உட்கார்ந்திருந்தார்.

எல்லாரும் கூடி நின்ற இடத்துக்கு எதிரில் வந்து சைக்கிளை நிறுத்த முடியாமல் 'பொதகடீர்' என்று சாய்ந்து விழுந்து இறங்கினர்.

விழுந்த வேகத்திலேயே மேளத்தின் உறையைக் கூடப் பிரிக்காமல் 'தடால்' 'தடால்' என்று தவுல் அடிக்க ஆரம்பித்தார். மேளச் சத்தம் தான் கேட்டதே ஒழிய மந்திரிகள் வரவில்லை!

கடைசியாக, பத்தேகால் மணி சுமாருக்கு மந்திரிகள் வந்து சேர்ந்தார்கள்.

மந்திரிகளைப் பார்த்ததும்தான் மகாநாட்டு நிர்வாகிகளுக்கு நிம்மதி ஏற்பட்டது!

மந்திரிகளுக்கு, ஒன்றுக்கு இரண்டு மாலைகளைப் போட்டு அங்கிருந்து விழாக் கொட்டகைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

நாதஸ்வரக்காரர் நாதஸ்வரத்தை எடுத்துக் கொண்டார். ஒத்து ஊதுகிறவர் மூச்சு விடாமல் ஊதினார். தாளம் தட்டுகிறவர் தட்டினார். தவுல் வித்வான் முழக்கினார்.

இந்தச் சத்தத்தினால் அந்தத் தெருவின் ஓரத்தில் பெட்டிகளில் வைத்து விற்றுக் கொண்டிருந்த இட்டிலிகளில் மொய்த்துக்கொண்டிருந்த ஈக்கள் பறந்து ஓடின.

ஊர்வலம் கனகம் டாக்கீஸுக்கு — விழாக் கொட்டகைக்கு வந்தது.

விழாக் கொட்டகை வாசலில் ஓங்கி வளர்ந்து நின்று கொண்டிருந்த கம்பத்தில் பஞ்சாயத்தார்களின் பிரதிநிதியாகச் சென்னை மேல் சபையில் அங்கம் வகிக்கும் திரு டி. புருஷோத்தம முதலியார் எம். எல். ஸி. தேசீயக் கொடியை ஏற்றினர். அசோக சக்கரம் சுழலும் நமது நாட்டின் மணிக்கொடி கம்பத்தின் பாதி உயரத்தில் சென்று சற்று எல்லாரையும் பார்த்து விட்டு உச்சியில் ஏறிப் பட்டொளி பாடிப் பறந்தது.


கனகம் டாக்கீஸ் கொட்டகைக்குள் மதுராந்தகம் தாலுக்கா பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆதரவில் நடைபெற்ற தாலுக்கா பஞ்சாயத்து மகாநாட்டுக்கு, அந்தத் தாலுக்காவின் 53 பஞ்சாயத்துக்களில் உள்ள சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் மக்களின் பிரதிநிதிகளான பஞ்சாயத்தார்கள் வந்து உற்சாகமாகக் கூடியிருந்தார்கள்.

மதுராந்தகம் பஞ்சாயத்துத் தலைவரும் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவருமான திரு ஓ. என். துரை பாபு வரவேற்புரை நிகழ்த்தினார். வரவேற்புரையோடு பஞ்சாயத்துக்களுக்கு உள்ள பல குறைகளையும் தம்முடைய மனக்குறை தீரும்படி எடுத்துக் கூறினர்.

"பஞ்சாயத்துக்கு இருக்கும் அதிகாரங்கள் போதா. கிராமத்துப் பஞ்சாயத்துக்களுக்குப் போதிய வருவாய் கிடையாது. மக்களிடமிருந்து வரிகளை வசூல் செய்ய முடியவில்லை" என்றார். வரி வசூல் செய்யும் அதிகாரத்தைக் கிராம முனிசீப்பிடமே கொடுத்து, கிராமத்து மக்களிடமிருந்து

மதுராந்தகம் தாலுகா பஞ்சாயத்தார்கள் மகாநாட்டுக்கு வந்திருந்த பஞ்சாயத்தார்கள்





கனம் மந்திரிகளும் பஞ்சாயத்துத் தலைவர்களும்

வரியை வசூல் செய்து பஞ்சாயத்துக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக வசூல் ஆறேகால் சத விகிதத்தைக் கிராமத்தலைவர் எடுத்துக் கொள்ளலாம் என்றார்.

நிலவரியில் நிரந்தரமாக 50 சத விகிதம் பஞ்சாயத்துக்குக் கிடைக்க வேண்டும். கிராமத்து ஏரி, குளங்களில் உள்ள மீன் குத்தகை, கிராமத்துக் கால்நடைப் பவுண்டுகள் முதலியவைகளைப் பஞ்சாயத்துக்களிடமே விட்டுவிட வேண்டும் என்றார்.

மதுராந்தகத்துக்கு மின்சாரம் வேண்டும் என்பதை வற்புறுத்தினார். மதுராந்தகம் தாலுக்காவில் உள்ள விவசாயிகள் பெரும்பாலோர் கிணற்றுத்தண்ணீரை உபயோகிப்பவர்கள். அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை விளக்கினார். சரித்திர முக்கியத்துவம் பெற்ற சுமார் பதின்மூன்று மைல் விஸ்தீரண முள்ள மதுராந்தகம் ஏரியைச் சீர்திருத்திச் செய்பாற்றிலிருந்து அதற்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை ஐந்தாண்டு திட்டத்தில் அவசரத் திட்டமாகப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார். பெரிய நீர்ப்பாசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் இது போன்ற சிறிய நீர்ப்பாசனங்களை உடனே கவனிக்க வேண்டியது அவசியம் என்பதை அழுத்தமாகக் கூறினார்.

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு எஸ். என். ராமசாமிப் படையாட்சி கிடுகிடென்று மின்னல் வேகத்தில் துவக்க உரை நிகழ்த்தினார். வரவேற்புரையில் கூறியவைகள் எல்லாம் மிகவும் நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்டார். அவைகளைக் கவனிப்பதுடன், மேலும் குறை ஏதாவது இருந்தால் அதையும் கவனிக்க வேண்டியதுதான் என்றார்.

மகாநாட்டுத் தலைவர் திரு கே. ஆதிகேசவலு ரெட்டியார் தமது தலைமை உரையை நடத்தினார்.

வெள்ளையர் ஆட்சியில் கிராமத்தில் ஜனநாயக முறை அழிக்கப்பட்ட விதத்தை விளக்கினார். "இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களில்தான் இருக்கிறது! கிராமங்கள் தம்முடைய தேவையைத் தாமே என்று பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ அன்று தான் இந்த நாடு பூரண சுதந்திர நாடாகத் திகழும்" என்ற காந்தி மகான் வாக்கை நிறைவேற்றக் கிராமத்துப் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் வரக்கூடிய முறையில் பல வசதிகளைச் சர்க்கார் உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மகாநாட்டின் மேடை மீது சூடி வைத்திருந்த காந்தி மகான் திரு உருவப்படத்தை மந்திரி திரு பி. பரமேஸ்வரன் திறந்து வைத்துப் பேசினார். காந்தி மகான் பஞ்சாயத்து ஆட்சியின் மூலம் 'ராமராஜ்யம்' திகழும்படி செய்ய விரும்பியதையும் அவர் விருப்பப்படி நமக்குக் கிடைத்துள்ள பஞ்சாயத்து ஆட்சியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைப் பற்றியும் சொன்னார்.

"அடுத்தபடி தீர்மானங்கள் நிறைவேற்றம்" என்று அறிவித்தார் தலைவர்

தீர்மானங்களைப் பிரேரேபிக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களை மகாநாட்டு நிர்வாகிகள் கூப்பிட்டனர்.

ஒருவர் கையில் கடுதாசியுடன் மேடைக்கு வந்தார். ஆனால் தீர்மானத்தை அவர் வாசிக்கத் தொடங்குவதா யில்லை.

மகாநாட்டு நிர்வாகிகளும் மற்றவர்களும் மேலும் கீழும் பார்த்தார்கள். மேடை மீது இருந்த மேஜையைச் சுற்றி சுற்றி வந்தார்கள். மடிகளை உதறிப் பார்த்தார்கள். சட்டைப் பைகளைத் துழாவிப் பார்த்தார்கள். இதற்குள் சபையோர் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். சற்று நேரம் வரையில் விஷயம் மர்மமாக இருந்தது.

இந்தச் சமயத்தில் தலைவர் எழுந்திருந்து "இத்துடன் மகாநாடு முடிந்தது. தீர்மானங்கள் பிற்பகல் நிறைவேற்றப்படும்" என்றார். மதுராந்தகம் தாலுக்கா பஞ்சாயத்தார்கள் மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது.

பிறகு விசாரித்ததில் காலையில் வரவேற்புரையில் கூறிவந்த விஷயங்களையே தீர்மான உருவத்திலும் செய்திருந்தார்கள் என்று தெரிந்தது!

** ** **

மதுராந்தகம் பஞ்சாயத்தார்கள் மகாநாட்டை நடத்திய நிர்வாகிகளில் மதுராந்தகப் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ ஏ. என். துரைபாபு, திரு கே. ஆதிகேசவலு ரெட்டியார், திரு எம். வெங்கடநாராயண நாயுடு, திரு கே. ஜகதீச முதலியார், திரு ஜ. கோதண்டராமராஜூ, திரு வி. ராஜமாணிக்கக் கவுண்டர், திரு எஸ். வெங்கடசுப்பா ரெட்டியார் முதலியவர்கள் மிகவும் பாடு பட்டு உழைத்தார்கள். இவ்வாறு நாட்டுக்குச் சேவை செய்கிறவர்கள் மக்களின் அன்பு என்னும் தலை சிறந்த செல்வத்தைப் பெறுகிறார்கள் அல்லவா! அந்த அன்பு ஒன்றைக் கொண்டே எத்தனையோ அற்புதங்களைச் சாதித்து விடலாமே!

THIS

trusted trademark

"HIS MASTER'S VOICE"

identifies the finest value in radio today

ரேடியோவின் விவரம்	★ அகில இந்திய விற்பனை விலை (1-7-1954 முதல் அமுலில் உள்ளது)
மாடல் E16B—5 வால்வு ட்ரை பாட்டரி	ரூ. 285/-
மாடல் 5114—5 வால்வு ஏ. ஸி.	ரூ. 345/-
மாடல் E20A—5 வால்வு ஏ.ஸி. அல்லது டி.ஸி.	ரூ. 345/-
மாடல் 5262—5 வால்வு ஏ.ஸி. அல்லது டி.ஸி.	ரூ. 365/-
மாடல் 5162—6 வால்வு ஏ.ஸி.	ரூ. 485/-
மாடல் 5261—6 வால்வு ஏ.ஸி. அல்லது டி.ஸி.	ரூ. 485/-
மாடல் 5614—6 வால்வு ட்ரை பாட்டரி	ரூ. 485/-
மாடல் 5659—6 வால்வு 6 வோல்ட் பாட்டரி	ரூ. 445/-
மாடல் 5118—7 வால்வு ஏ. ஸி.	ரூ. 650/-
மாடல் 5218—6/7 வால்வு ஏ.ஸி. அல்லது டி.ஸி.	ரூ. 645/-
மாடல் 5307—8 வால்வு ஏ.ஸி. ஆட்டோ-ரேடியோக்ராம்	ரூ. 1625/-
மாடல் 4300 —8 வால்வு 12 வோல்ட் கார் ரேடியோ	
மாடல் 4301 —8 வால்வு 6 வோல்ட் கார் ரேடியோ	
அதிக சக்தி வாய்ந்தது	ரூ. 715/-
சாதாரண சக்தி வாய்ந்தது	ரூ. 660/-

* மேலே குறிப்பிட்டுள்ளது நிகர விலை. இதில் தள்ளுபடி இல்லை. உள்ளூர் வரிகள் பிரத்தியேகம்.

You cannot choose better than

"HIS MASTER'S VOICE" *Radios*


THE GRAMOPHONE COMPANY, LTD.
Calcutta - Bombay - Madras - Delhi.

சிறுவகைத் தொழில்கள்

கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

சிறு வகைத் தொழில்கள் என்னும்போது நான் பாரம்பரியமான கிராமியத் தொழில்களைக் குறிப்பிடவில்லை. கிராமியத் தொழில்கள் ஒரு குறிப்பிட்ட கிராமம் அல்லது சுற்று வட்டாரத்திலுள்ள சில கிராமங்களில் வசிக்கும் மக்களின் தேவைகளையே பெரும்பாலும் பூர்த்தி செய்வதற்கு அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, கிராமியத் தொழில்களின் உற்பத்தி அளவில் குறைந்ததாகவும், குறிப்பிட்ட வகையறுக்களையே கொண்டதாகவும், பெரும்பாலும் புராதன முறைகளையே பின்பற்றுவதாகவும் இருப்பது இயற்கை.

இக் கிராமியத் தொழில்களின்றி இன்னும் சில சிறுவகைத் தொழில்களும் உள்ளன. இவைகளைத் திறம்பட நடத்த மூலதனம் அதிகம் தேவையில்லை. பெரிய ஆலைத் தொழில்களைப் போல, பெருவாரியாகத் தொழிலாளர்களை வேலையில் அமர்த்துவதற்கும் அவசியமில்லை. ஆலைத் தொழில்களின் சரக்குகளைப் போல இச் சரக்குகள் ஒரே அளவுடனும் இருப்பதில்லை. ஆயினும், பரம்பரையான கிராமியத் தொழில்களைப் போல் அல்லாமல் இச் சிறு வகைத் தொழில்களின் சரக்கு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் விளம்பரம் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இத் துணிச்சலுக்குச் சொற்ப மூலதனம் அவசியம். இவைகள் உற்பத்தி செய்யும் சரக்குகளின் இனங்கள் விரிந்தவை. அன்றாடம் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் முதல், சிறு ஆயுதங்கள், நுண்கலைப் பொருள்கள் வரை இவை உண்டாக்குகின்றன. பெரிய ஆலைகளில் உற்பத்தியாகும் சரக்குகளுக்கு உள்ளது போல, பல படிப்படியான உற்பத்தி வகைகளை இச் சிறுவகைத் தொழில்கள் கையாளுவதில்லை. இத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களோ பெரும்பாலும் உடனடியாக உபயோகத்துக்கே ஏற்பட்டதால் இவைகள் தொடர்ந்தாற்போல் மார்க்கெட்டுகளுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டியது மிக்க அவசியமாக இருக்கிறது. எந்தச் சரக்குகளுக்குத் தேவை யதிகம், எவைகளுக்கு உருவிலும் தரத்திலும் சிறு மாறுதல்கள் அவசியம், எந்தப் புது மோஸ்தரில் மக்களின் மனம் அதிகமாக ஈடுபட்டுள்ளது என்பவைகளை நுணுகி ஆராய்ந்து, அதற்கேற்பத் தங்களுடைய உற்பத்தி முறைகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியது இத்தகைய தொழில்களைக் கையாளுபவர்களுக்கு அவசியம். தொழில் முறையில் முன்னேற்ற மடைந்த நாடுகளில் இச்சிறு வகைத் தொழில்கள் பல்வேறு பட்ட பொருள்களை உற்பத்தி செய்து நாட்டின் பொருள் குறைவை நிரப்புவதன்றியும், பெரு ஆலைத் தொழில்களுக்கும் வேண்டிய உதவி யளிக்கவும் முன் வருகின்றன.




ஸ்ரீ டி. டி. கே.

இந்தியாவில் இப்படிப்பட்ட சிறு வகைத் தொழில்கள் இருக்கின்றனவா ! ஆம். பல துறைகளிலும் பூரணமாக விருத்தி யடைந்த தொழில்கள் இருப்பதுமன்றி, பல நவீன இனங்களிலும் இத் தொழில்களுக்கு இடம் உண்டு. உதாரணமாகப் பார்ப்போமானால் தமிழ் நாட்டில் தீப்பெட்டித் தொழில் பூரண வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதைப் போன்ற சிறு வகைத் தொழில்கள் நம் நாட்டில் பல உள்ளன. முக்கியமாக உழவுக் கருவிகள், தச்சு முதலிய வேலைகளுக்கான ஆயுதங்கள், சைக்கிள் பாகங்கள், பூட்டுகள், பாதரக்ஷைகள் முதலிய உபயோகமான சாமான்கள், விளையாட்டுச் சாமான்கள், கயிறு திரித்தல் போன்ற ஆகிய பல சிறு வகைத் தொழில்கள் அநேகம் இருக்கின்றன. இவைகளை ஒழுங்கு பெற, நவீன முறைகளைக் கையாண்டும், மின்சார இயந்திரங்களின் சாதனங்களைக் கொண்டும் திருத்தி அமைத்தால் உற்பத்தியைப் பெருக்கவும் விலையைக் குறைக்கவும் இடமுண்டு. இன்னும் ஆராய்ச்சி அனுபவங்களைக் கொண்டு மூலப் பொருள்களைச் சரியானபடி உபயோகித்தால் உற்பத்தி மேன்மேலும் பெருகும்.

இவ்வளவு முக்கியமாக இருந்தும், இச் சிறு வகைத் தொழில்கள் தங்களுக்குரிய ஸ்தானத்தை ஏன் இன்னும் பெறவில்லை ! இதற்கு முக்கிய காரணம் உற்பத்தியாளருக்கும் பொருளை உபயோகிக்கும் பொது மக்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்த யாதொரு ஸ்தாபனமும் இல்லாததே. இக் குறையை நீக்க, இடை விடாத மார்க்கெட் பரிசீலனை அவசியமாகிறது. தற்சமயம் உற்பத்திச்சாலைகளுக்கும் மக்களுக்குமிடையே தொடர்பு குன்றவே, இவைகளின் நிலை சீர் பெற்று ஓங்காமல் இருக்கின்றன. தகுந்ததொரு மத்திய ஸ்தாபனம் இல்லாமையால் சிறுவகைத் தொழில் உற்பத்தியாளர்களுக்குத் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை ஒழுங்கற்ற முறையிலும், உயர்ந்த விலையிலும் வாங்க நேரிடுகின்றது. உற்பத்தி செய்யும் பொருள்களையோ, ஆற அமர யோசித்து, தகுந்த விலைக்கு விற்க முடியாததனால், வந்த விலைக்குச் சரக்குகளைத் தள்ளிவிட்டு, தங்களுக்குக் குறைந்த வருவாயையும், சொற்பமான லாபத்தையுமே யடைந்து வருகின்றனர்.

மேலே குறிப்பிட்ட முக்கியமான சில சிறு வகைத் தொழில்களைச் சரியான முறையில் ஒழுங்கு பெற அமைப்பதும், மிகப் பெரிய ஆலைத் தொழில்களுக்கு அனுசரணையாக இவைகள் உதவுவதும், புதுப் புது இனங்களில் சிறுவகைத் தொழில்களை ஏற்படுத்தி மக்களின் தேவைகளை மேன்மேலும் பூர்த்தி செய்ய முயல்வதும் ஆகிய இவைகளுக்கு வேண்டிய வசதிகள் மாகாண சர்க்

சும்மா இருக்குமா ?



காராலும் மத்திய அரசாங்கத்தாராலும் கவனிக்கப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டில் மத்திய சர்க்கார் "ஷராப் கமிட்டி" யை நியமித்து, இப் பிரச்னைகளை அக் கமிட்டியாரின் பரிசீலனைக்கு விட்டனர். அமெரிக்காவிலுள்ள போர்டு ஸ்தாபனம் அனுப்புவித்த நிபுணர்களின் கோஷ்டி ஒன்று இப் பிரச்னைகளை விசேஷ முறையில் ஆராய்ந்து தங்கள் சிபார்சுகளை வெளியிட்டிருக்கிறார்கள். இந் நிபுணர்கள் சிறுவகைத் தொழில்களின் உற்பத்தி, விற்பனை முறை, பொருள்களின் உருவத்திறன் அமைப்பு, இத் தொழில்களுக்குத் தேவையான கடன் சலுகைகள் முதலியவைகளை விரிவாகக் குறித்துள்ளனர். "ஷராப் கமிட்டி" யாரின் சிபார்சுகளும், அமெரிக்க நிபுணர்களின் சிபார்சுகளும் மத்திய சர்க்காரால் பரிசோதிக்கப்பட்டு, அவைகளில் பலவற்றைச் செயல் முறையில் கொண்டுவர ஏற்பாடாகிக் கொண்டு வருகிறது.

மேற்கூறிய சிபார்சுகளின் விளைவாக இந்திய சர்க்கார் இச் சிறுவகைத் தொழில்களின் உற்பத்தி முறையைச் சீர்பெற அமைக்கவும், அவைகளின் அலுவல்களை ஒழுங்கான சிக்கன முறையில் அமைக்கவும் நவீன விற்பனைமுறைகளைக் கையாளவும் இவை போன்ற பற்பல விதங்களில் உதவி புரிய நான்கு தொழிற் பயிற்சி ஸ்தாபனங்கள் நிர்மாணிக்க முடிவு செய்துள்ளனர். இவைகளில் ஒன்று மதுரையில் நிறுவப்படலாம். மத்திய சர்க்கார் காரியாலயங்களுக்குத் தேவையான பொருள்களின் உற்பத்தியைக் கவனிப்பதற்கென்றே ஒரு "சிறுவகைத் தொழிலின் கார்ப்பரேஷன்" என்ற ஸ்தாபனத்தையும் நிறுவ முடிவு செய்துள்ளார்கள். சில குறிப்பிட்ட தொழில்களைப் பரிசோதனை முறையில் இயந்திர சாதனங்களைக் கொண்டு ஆரம்பித்து நடத்தவும் அரசாங்கத்தார் முன் வந்துள்ளனர். தொழிற் கல்வியில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளையும் அளிக்கச் சர்க்கார் திட்டம் வகுத்துள்ளனர்.

தகுந்த பண உதவியின்றி இச் சிறுவகைத் தொழில்கள் விரைவில் முன்னேற்றம் அடையா என்பதை அரசாங்கத்தார் நன்கு அறிந்துள்ளனர். தற்சமயம் தொழில்களுக்குப் பிரதேச சர்க்காரின் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ், சிறுவகைத் தொழில் நடத்த மூலதனத்தையும், பின்னும் கடன் சலுகைகளையும் அளித்து வருகிறார்கள்.

இம்மாதிரி தொழிற் பயிற்சி ஸ்தாபனங்கள் போன்ற சம்பந்தப்பட்ட இதர ஸ்தாபனங்களும் சிறு வகைத் தொழில் அபிவிருத்திக்கு முக்கிய கேந்திரமாகும். சிறு வகைத் தொழில்களுக்கும், பெரிய ஆலைத் தொழில்களைப் போலவே, குறைந்த விலையில் அவைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள், உற்பத்தி பண்ணுவதற்கு வேண்டிய நவீன ஞானம், சிறந்த முறையில் எளிதில் விற்பனை செய்ய நூதன வழிகள், ஆராய்ச்சி இவைகளைப் போன்ற சகல சாதனங்களும் உதவிகளும் அளிக்கப்படும். இம்மாதிரி சர்க்கார் கையாளும் திட்டங்களால் நாட்டில் தேவைப் பண்டங்களின் விருத்தியும், தொழிலாளர்களின் வருமான உயர்வும் மக்களுக்குப் பிழைப்புக்கு அதிக சந்தர்ப்பங்களும் கிடைக்கும். முக்கியமாக, நாட்டில் தொழிற் சிற்பிகளின் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். உள்நாட்டில் மார்க்கெட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இங்கு ஒரு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. சிறு வகைத் தொழில்களின் உற்சாகிகள் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

புனலூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

புனலூர் (திருவாங்கூர்-கொச்சி ஸ்டேட்)

தந்தி: "PAPERMILLS" *டெலிபோன்:* 15

○●○

க்ரீம் லெயிட், போஸ்டர், லெட்ஜர், மணிலா க்ராப்ட், ப்ரௌன், தீப்பெட்டி பேப்பர்கள்

முதலிய பேப்பர் வகைகளைத் தயாரித்து சென்னை, திருவாங்கூர் - கொச்சி ராஜ்ய அரசாங்கங்களுக்கும் மற்றும் அச்சிடுவோர்களுக்கும் ஸ்டேஷனரி சாமான் விற்பனையாளர்கள் ஜவுளி, தீப்பெட்டி, ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைகள் [பேப்பர் கன்வெர்டர்கள் முதலியோருக்கு சப்ளை செய்கிறார்கள்.

○●○

வியாபார விசாரணைகளுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:


பெயர்	*விலாசம்*	*தந்தி*
A. & F. ஹார்வி லிமிடெட் ...	பாண்டியன் பில்டிங்ஸ் த. பெ. நெ. 73, மதுரை ...	"HARVEY"
W. A. பியர்ட்ஸெல் & கோ. லிட்.	த. பெ. நெ. 7, சென்னை ...	"BEARDSELL"
W. A. பியர்ட்ஸெல் & கோ. லிட்.	த.பெ.நெ. 432, பம்பாய் ...	"BEARDCO"
W. A. பியர்ட்ஸெல் & கோ. லிட்.	த. பெ. 460, கல்கத்தா-1 ... பிளாக் A-3, கிளைவ் பில்டிங்ஸ், 8, நேதாஜி சுபாஷ் ரோடு	"BEARDCA"
W. A. பியர்ட்ஸெல் & கோ. லிட்.	4, மகாத்மா காந்தி ரோடு ... பெங்களூர்-1	"BEARDCO"
சான் ஜெனஸ்ட்சன் லிமிடெட்	த. பெ. நெ. 210, கொழும்பு ...	"CEEGEE"
ஹாஜி P. ஸையத் முகம்மது	விருதுநகர்	"PAPER"
ஹாஜி P. ஸையத் முகம்மது	2, தெற்கு காவல்கூடத் தெரு, மதுரை ...	"PAPER"
K.M.S. லக்ஷ்மணய்யர் & ஸன்ஸ்	லிட்: சதர் பஜார், ரெய்ப்பூர் (M.P.)	
K.M.S. லக்ஷ்மணய்யர் & ஸன்ஸ்	லிட்: பத்தகுண்டாவாரு வீதி, விஜயநகரம் சிடி	
M. G. அண்டு ஸன்ஸ் ...	தலச்சேரி	"EMGISONS"
ஓம் பார்காஷ் ...	22, பாராகம்பா ரோடு, புது டில்லி	
A. சரஜுமன்னார் நாயுடு ...	26, நாயக்கர் புதுத்தெரு, மதுரை	"INTEGRITY"
R. ராமலிங்கய்யர் & பிரதர்ஸ்	த. பெ. நெ. 25, பிராட்வே எர்ணாகுளம்	"RAMLINGBRO"
ராச்சல் தாஸ் கிடுமல் & கோ.	கத்ரா அலுவாலியான் அமிர்தசரஸ் ...	"VANVARIA"
ஸ்ரீ கம்பெனி ...	ஸ்ரீ கிருஷ்ண பில்டிங்ஸ், பெங்களூர் சிடி	"SRICO"
வேம்பு ஸன்ஸ் ...	9, ரெயினுல்ட்ஸ் ரோடு ... கன்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி	"VEMBUSONS"



மானேஜிங் ஏஜண்டுகள்: ஏ & எப். ஹார்வி லிமிடெட்

சென்னைக் கவர்னரின் செய்தி

ராஜபவனம்
கிண்டி, சென்னை – 22
ஜூலை 9, 1954



"கல்கி" பத்திரிகையின் ஜூலை மாதம் 25-ம் தேதி இதழ் வீட்டுக் கைத்தொழில்கள் பற்றிய மலராக வெளிவருகிறது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

நம் நாட்டின் சிறு கைத்தொழில்களின் அவசியத்திலும், அபிவிருத்தியிலும் பொது ஜனங்கள் கவனம் செலுத்தும்படி செய்வது சிறந்த நோக்கமாகும்.

நமது ராஜ்யத்தில் உள்ள தீக்குச்சித் தொழில் பற்றிய விவரங்கள் இந்த இதழில் விசேஷமாகத் திகழும் என்றும், இது போன்ற கைத்தொழில் விசேஷ மலர்கள் பின்னரும் வெளியிட உத்தேசித்து இருப்பதாகவும் அறிந்து மகிழ்கிறேன்.

தீக்குச்சித் தொழில் பற்றி எனது கருத்தை வெளியிட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகிறது.

இந்த வருஷம் மார்ச்சு மாதம் நான் ராமநாதபுரம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு இருந்தபோது அங்குள்ள தீக்குச்சித் தொழிற்சாலையைப் பார்வையிட்டேன்.

சிவகாசியில் பல தீக்குச்சித் தொழிற்சாலைகளும், லித்தோ அச்சுக் கூடங்களும் இருக்கின்றன. தீக்குச்சிப் பெட்டிகளுக்குத் தேவையான முகப்புத் தாள்கள் இந்த லித்தோ அச்சுக் கூடங்களிலேயே அச்சிடப்படுகின்றன.

தீக்குச்சி உற்பத்தி பற்றிய பல்வேறு அலுவல்களையும் பார்த்துக் கொண்டு வந்தபோது அநேகமாக அத்தொழிலுக்குரிய எல்லாக் காரியங்களும் கையினாலேயே செய்யப்படுகின்றன என்று தெரிந்தது. ஆகையால் ஏராளமான ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் அத்தொழிலில் வேலை கிடைத்து வருகிறது.

தீக்குச்சி உற்பத்தி சம்பந்தமான பல்வேறு சில்லறை வேலைகளில் ஈடுபட்டுள்ள பெண்கள், குறிப்பிட்ட சாதனங்களைத் தங்கள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று, தங்கள் குடும்பத்தினருக்கு மத்தியில் இருந்தபடி வீட்டிலேயே பூர்த்தி செய்து கொண்டு வருகிறார்கள்.

தீக்குச்சி உற்பத்தியை யொட்டிய பல வேலைகள் எளிதாகச் செய்யக்கூடியவை. அந்த வேலைகளைப் பெண்மணிகளும், குழந்தைகளும்கூடத் தங்கள் வீட்டு அலுவல்களைச் செய்வது போலவே யாதொரு அபாயத்துக்கும் இடமின்றிச் செய்யமுடியும். இத்தகைய வீட்டுக் கைத்தொழிலுக்கு எல்லாவித ஆதரவும் அளித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

Sri Prakasa

(Sri Prakasa)
GOVERNOR OF MADRAS.

வீட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு

வைகுந்தலால் மேத்தா

(அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் போர்டுத் தலைவர்)

தீக்குச்சி உற்பத்தி இந்தியாவின் புராதனக் கைத் தொழில்களில் ஒன்றல்ல. அப்படியிருந்தும் இன்று இந்தியாவில் உள்ள சகல இடங்களிலும் தீக்குச்சி உபயோகிக்கப்பட்டு வருகிறது. நகரங்களிலும், கிராமங்களிலும் மாத்திரமல்ல, ரஸ்தாக்களும் ரயில்வேக்களும் இல்லாத காடுகளில் உள்ள குடிசைகளிலும் கூடத் தீக்குச்சிகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

தீக்குச்சி உற்பத்தியை இந்தியாவில் ஏற்பட்டுள்ள புதிய கைத்தொழில் என்றே சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் தீக்குச்சிகள் இங்குள்ள வீடுகளிலும் சிறு சிறு பகுதிகளிலும் ஏராளமாக உற்பத்தியாகி வந்தன. மேற்படி தொழிலில் ஈடுபட்ட ஜனங்கள் தீக்குச்சி உற்பத்தி சம்பந்தமான சகல அலுவல்களையும் தங்கள் சொந்த வீடுகளில் தங்களுடைய கையினாலேயே செய்து வந்தார்கள். அந்தத் துறையில் பெரிய வர்த்தக ஸ்தாபனம் ஒன்று ஈடுபடத் துவங்கியதிலிருந்து தான், வீடுகளில் தீக்குச்சி உற்பத்தியாவது தடைப்பட்டது. பெரிய ஸ்தாபனம் அதன் அபரிமிதமான சாதனங்களின் மூலம், தீக்குச்சி உற்பத்தியை வீட்டுத் தொழிலாக வைத்திருப்போரைத் தலைதூக்க விடாமல் செய்தது. அதன் விளைவாக அந்தத் தொழிலில் வேலை செய்வோரின் தொகை குறையலாயிற்று.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலுக்குச் சர்க்கார் பாதுகாப்பு அளிக்க முன் வந்தபோது, அத்தொழிலில் ஈடுபட்ட பெரிய ஸ்தாபனங்களையும் சிறிய பகுதிகளையும் ஒரே விதமாகக் கருதிவிட்டார்கள். பிறகு தான் சர்க்கார் அவ்விரண்டுக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்து அதற்குப் பரிகாரம் செய்ய முற்பட்டார்கள். அதன் பயனாக உள்நாட்டில் தீக்குச்சி உற்பத்திக்குத் தீர்வை விதித்தனர். சிறிய அளவில் வீட்டுத் தொழிலாகத் தீக்குச்சி உற்பத்தியை நடத்துவோருக்கு மட்டும் மேற்படி தீர்வையை உதவித் தொகையாகத் திருப்பிக் கொடுத்தனர். இந்தக் கொள்கை இன்றும் அமுலில் இருந்து வருகிறது.

அவ்விதம் உதவியளித்தும் கோரிய பலன் கிடைக்கவில்லை. அதாவது வீட்டுத் தொழில் அடிப்படையில் தீக்குச்சி உற்பத்தி அபிவிருத்தி அடைவதற்கு மேற்படி உதவி போதுமானதாக இல்லை. தீக்குச்சி உற்பத்தி செய்யும் சிறு பகுதிகளுக்கு உற்பத்திச் செலவு குறைவாக இருந்தும் கூட, அவை மேற்படி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய ஸ்தாபனங்களுடன் எவ்வதத்திலும் போட்டி போட முடியவில்லை.

பெரிய ஸ்தாபனங்களுக்கு மேற் கொண்டு தீர்வை விதித்துத் தீக்குச்சி வீட்டுத் தொழிலுக்கு உதவி யளிப்பதைத் தவிர, அப்பிரச்னையைத் தீர்க்க வேறு முறைகளையும் கைக்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில்தான் இப்போது அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டார் ஈடுபட உத்தேசித்திருக்கிறார்கள். இந்திய சர்க்கார் அளித்துள்ள தொகைகளைக் கொண்டு, வீட்டுத் தீக்குச்சித் தொழிலுக்கு உதவியளிக்க முற்பட்டிருக்கிறார்கள். தீக்குச்சி உற்பத்தியை வீட்டுத் தொழிலாகக் கொண்டிருப்போருக்கு மூலதன உதவி செய்தல், உற்பத்தியான தீக்குச்சிகளைச் சேகரித்து விற்பனை செய்வதற்குத் தகுந்த ஸ்தாபனத்தை நிறுவுதல், மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல், தீக்குச்சி உற்பத்தி நவீன முறையில் அபிவிருத்தி அடைவதற்குற்ற உதவி அளித்தல் போன்ற பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்க மேற்படி போர்டார் திட்டமிட்டிருக்கிறார்கள். அத் திட்டம் வெற்றி பெறுவதற்கு, தீக்குச்சி வீட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் கூட்டுறவு முயற்சி அவசியமாகும். வீடுகளில் இருந்து வேலை செய்வோரிடையே கல்வி அறிவும் கட்டுக் கோப்பும் ஏற்படும்படி செய்ய வேண்டும். அவர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். வேலை நேரம் முதலிய அம்சங்களும் திருப்திகரமானவையாக இருக்க வேண்டும். அப்போது தான் தீக்குச்சி வீட்டுத் தொழில் மேற்கொண்டு சகல ஆதரவும் உதவியும் பெற நியாயமாக உரிமை கொண்டாட முடியும்.

சிவகாசி சினவெடி மத்தாப்பு வாண வேடிக்கைத் தொழிற்சாலையின் தோற்றம்.




MANUFACTURERS OF RENOWNED
"RANI" & "KUDAI" BRAND SAFETY MATCHES
RANI
RANI
RANI
RANI
INDIA
KUDAI
DAMP PROOF
Sankareswari Match Factory
POST BOX NO 8.
ESTD : 1941
SATTUR. (S. I.)

குடிசைத் தொழில் வளர்ச்சி

கனம் எம். பக்தவத்ஸலம்

ஒரு நாட்டின் பொருளாதாரப் புனரமைப்பில் அதிலும் அந் நாட்டின் பிரதான தொழில் விவசாயமாக இருந்துவிடின், குடிசைத் தொழில், கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்தியை மிக முக்கியமான அம்சமாகக் கருத வேண்டும். இவை தனிப்பட்டவர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம அமைப்புகள் ஆகியவைகளாலேயே வளர்ச்சியுறும்படி செய்யக் கூடிய சிறு தொழில்களாகும். இவைகளின் முன்னேற்றத்தினால் வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்; போதிய அளவு வருமானம் கிடைக்கக் கூடிய வேலை இல்லாதவர்களுக்கு உபவருமானம் கொடுக்கக் கூடிய உபாயமாகவும் இவைகளிருக்கின்றன.

இத் தொழில்களைக் "குடிசைத் தொழில்கள்", "கிராமத் தொழில்கள்", கைத் தொழில்கள்" என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித் தன்மையுள்ளது. இதில் ஒவ்வொரு யூனிட்டிலும் ஒன்பதுக்கு மேற்படாத கைவினைஞர்கள் நகர்ப் புறத்திலோ, நாட்டுப் புறத்திலோ, தனித் தொழிலாளர்களாகவோ, உதவியாளர்களாகவோ, வேலை பயில்வோர்களாகவோ, அல்லது கூலியாட்களாகச் சிறு கொட்டகைகளிலோ, நடை முறையில் கட்டுப்பாட்டுக்குட்பட்ட மூல தனத்துடன் தொழிலாற்றி வருகிறார்கள். சில சமயங்களில் இவர்கள் எளிய முறையில், தொழிலுக்குக் கெடுதலில்லாத வழியில், உழைப்புப் பங்கீட்டு முறையைக் கையாளுகிறார்கள். வேலைத் திறத்தையும் பயனையும் பாதிக்காதபடி இயந்திர சக்தியையும் இவர்கள் உபயோகித்துக் கொள்கிறார்கள். இது போன்று நடத்தப்படும் தொழில்கள்தான் "குடிசைத் தொழில்கள்" எனப்படும்.

"கிராமக் கைத் தொழில்கள்" இதற்குச் சற்று மாறுபட்டவை. இத் தொழில்கள் இதைச் செய்பவர்களுக்கு வழக்கமானதும் உரியதுமான தொழிலாகும். இதில் இவர்கள் முழு நேர வேலையாட்களாக இருக்கலாம்; அல்லது பாதி நேர வேலையாட்களாகவும் இருக்கலாம். உற்பத்தி முறையில் எளிய கருவிகள்தான் உபயோகப் படுத்தப் படுகின்றன; இவற்றின் உற்பத்திப் பொருள்கள் ஸ்தல மக்களுக்கு உபயோகப்படக் கூடியவைகள்.



"கைத் தொழில்கள்" என்பனவற்றில் அதைச் செய்பவனின் கைத் திறமையும் அந்தக் குறிப்பிட்ட கைவினைஞனின் சாமர்த்தியமும் இதில் முக்கியமாகும். எவ்வித இயந்திரமும் உபயோகிக்கப்பட மாட்டாது.


மேற்கூறப்பட்டமூவகைத் தொழில்களில் இவ்விதமான வேறுபாடுகள் இருந்த போதிலும்கூட, ஏதோ ஒரு குறிப்பிட்ட தொழிலை, இது இந்த ஒரு இனத்தை மட்டும் சேர்ந்தது என்று வரையறை செய்வது சிரமமான காரியமாகவே இருக்கிறது. மட்பாண்டத் தொழில் ஒரு கைத்தொழில்தான். இருந்தபோதிலும்கூட, இதையே சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு குடிசைத் தொழிலாகவோ கிராமத் தொழிலாகவோ கூட நடத்தலாம்.

குறிப்பிட்ட சில கிராமத் தொழில்களுக்காக உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டன; இவற்றில் பயன் படும் பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்டதுடன், கைவினைஞர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தது. ஊக்கமும் உற்சாகமுமுள்ள சாமர்த்தியசாலிகளான கைத்தொழில் வினைஞர்களுக்கு நவீன கருவிகளை இலவசமாக அளிக்கவும், அவசியமான மூலப் பொருள்களை அவர்களுக்குக் கொடுப்பதற்காகவும் ஓர் திட்டம் கொஞ்ச காலம் அமுலிலிருந்து வந்தது. தோல் தொழில், கயிறு உற்பத்தித் தொழில்களுக்கான பயிற்சி நிலையங்களும், பிரத்தியட்சமாகச் செய்து காட்டும் ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப் பட்டன. கண்ணாடித் தொழில், மணிகள் உற்பத்தித் தொழில்களில் பயிற்சி அளிப்பதற்கான நிலையங்களும் ஸ்தாபிக்கப் பட்டன. கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கவும் ஆராய்ச்சிகள், விசாரணைகள் நடத்தவும் கல்லுப் பட்டியில் ஒரு மாதிரி ஸ்தாபனம் இருந்து வருகிறது. தனிப் பட்டவர்கள் குடிசைத் தொழில் அபிவிருத்தியில் ஈடுபடுவதற்குத் தடையாக இருப்பது முக்கியமாக மூலதனம் இல்லாமையே. இதைத் தீர்க்கும் பொருட்டு ஏற்கெனவே உள்ள குடிசைத் தொழில் அபிவிருத்திக்காகவும் புதுத் தொழில்கள் ஆரம்பிப்பதற்காகவும் தொழில் — வர்த்தக இலாகா டைரக்டர் தனிப்பட்டவர்களுக்குத் தலா ரூபாய் 500 வரை கடன் கொடுக்கிறார். கிராமத் தொழில்கள், கதர் உற்பத்தி ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளைக் கூறுவதற்காகச் சர்க்கார் ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்திருக்கின்றனர். இதில் உத்தியோகச் சார்பற்றவர்களும் அந்தந்த தொழில் சம்பந்தப் பட்ட அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

கிராமப் பிரதேசத் தொழில் அபிவிருத்தி நோக்கத்துடன் ஸ்ரீ எம். சர்வேஸ்வரய்யாவினால் வெளியிடப் பட்ட ஒரு திட்டத்தின் அடிப்படையில் திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் இரண்டு தாலூக்காக்களில் பரீட்சார்த்த திட்டமொன்று ஆரம்பித்து வைத்து நடத்தப்பட்டு வருகிறது.


இத் திட்டத்தின் நோக்கங்கள். முக்கியமாக. இத் தொழில்கள் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிப்





உரிமையாளர்களின் தகப்பனாரும்
ஸ்தாபகர்களில் ஒருவருமான
Sri A.P.R.S.P. PavanasaNadar






ANIL
THE NATIONAL MATCH WORKS, SIVAKASI
SAFETY MATCHES



விவசாய மந்திரி கனம் பக்தவத்஦லம் சமீபத்தில் சிவகாசிக்கு விஜயம் செய்திருந்த போது தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கத்தினரால் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். படத்தில் சிவகாசி நகரத் தலைவர் திரு ஷண்முக நாடார், ஸ்ரீமான் ஸ்ரீ ஆறுமுகசாமி, திரு பி. அய்ய நாடார் ஆகியவர்களைக் காணலாம்.

பதும் உற்பத்தி அளவைப் பெருக்குவதுமாகும். மற்றும் கிராமவாசி களுக்கு லாபகரமான வேலைகள் கிடைப்பதற்கு வழி செய்தல், அவர்களிடையே கட்டுப்பாடு, ஒழுங்கு முதலிய நற்பழக்கங்கள் வளர்த்தல், சுய நம்பிக்கையையும் கூட்டு முயற்சியையும் அதிகரித்துக் கிராம மக்கள் தொகுதி ஒவ்வொன்றும் பொருளாதார விஷயங்களில் சுயமாகவே இயங்கித் தாமே வளர்ச்சியுற்று ஓங்கும்படி செய்தல் முதலியவைகளாகும்.

சர்க்கார் இலாகாக்கள் பலவிதமாக இதற்கு உதவிகள் அளித்து வருகின்றன; தொழில் பயிற்சிக்காக நிதி சாயம் செய்யப்படுகிறது; டணம் கடனாகவும், மான்யமாகவும் கொடுக்கப்படுகிறது. பதின்மூன்று கிராமத் தொகுதிகளுக்குச் சர்க்கார் சுமார் இருபதாயிரம் ரூபாய் சகாயம் செய்திருக்கின்றனர்.

இத் திட்டப்படி தேனீ வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல், நல்ல கோழிகளை அபிவிருத்தி செய்தல், பன்றி வளர்த்தல், சோடா தொழில், காய்கறித் தோட்டம் வைத்தல், வாத்துப் பண்ணை, கைத்தறி நெசவு, துணிகளுக்குச் சாயம் போடுதல், தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்தல், மண் பொம்மை உற்பத்தி, செருப்பாணி செய்தல், ரொட்டி—பிஸ்கட் செய்தல் முதலியவை நடந்து வருகின்றன.

கிராமக் கைத்தொழிலாளர்களுக்கு அவர்களின் சொந்த ஜாமீன் பேரில் சிறு தொகைகள் கடனுகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை மூசிரி கூட்டுறவு சங்கத்தாரின் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாய் பின்னுவதற்காகக் காவேரிக் கரையிலிருந்து கோரையை எடுத்துக் கொள்ளும் உரிமை பெறப்பட்டு மலிவான விலையில் தொழிலாளர்களுக்குக் கோரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மர வேலைக்காரர்களுக்கு மரமும், எண்ணெய் ஆட்டுபவர்களுக்கு எண்ணெய் வித்துக்களும் கொடுத்து உதவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது.

குறிப்பிட்ட சில தொழில்களின் அபிவிருத்தியிலும் சர்க்கார் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர்; இத்தொழில்களின் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காகச் சர்க்கார் அட்ஹாக் கமிட்டிகள், போர்டுகளையும் அமைத்திருக்கின்றனர். கயிறு உற்பத்தித்தொழில், கம்பள உற்பத்தி, உலோகத் தொழில் முதலியவற்றின் வளர்ச்சியில் ஏற்கனவே சர்க்கார் அக்கறை காட்டி வந்திருக்கின்றனர். சிறு தொழில்களில் தீக்குச்சித் தொழில் ஒரு முக்கிய குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது.

குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சி உற்பத்தி செய்வதில் சென்னை முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இங்கு இத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு ஸ்தாபனங்கள் அதிகம். இந்த ஸ்தாபனங்களெல்லாம் குடிசைத் தொழில் முறையிலேயே நடந்து வருகின்றன.

தொழிற்சாலை முறையில் உற்பத்தி செய்யும் யூனிட்டுகள் வெஸ்டர்ன் இந்தியா மேட்ச் கம்பெனியாரின் நிர்வாகத்திலிருக்கின்றன. மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம் இக் கம்பெனியாரால் உற்பத்தி செய்யப்படுகிறது. தொழிற்சாலை முறையிலும், குடிசைத் தொழில் முறையிலும் தீக்குச்சி உற்பத்தி செய்யும் யூனிட்டுகள் மொத்தம் 143 உள்ளன. இவற்றில் எண்பத்தாறு சென்னை ராஜ்யத்தில் இருக்கின்றன.

இந்த ராஜ்யத்திலுள்ள யூனிட்டுகளில் பெரும்பாலானவை சாத்தூரிலும், சிவகாசியிலும் இருக்கின்றன. சில யூனிட்டுகள் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கழுகுமலையிலும், மதுரை ஜில்லாவைச் சேர்ந்த திருமங்கலத்திலும் உள்ளன. குடிசைத் தொழில் முறையில் உற்பத்தி செய்யப்படும் 30 சத விகிதம் தீக்குச்சியில் பெரும்பகுதி இந்த இடங்களிலுள்ள யூனிட்டுகளால் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தீக்குச்சி உற்பத்திக் குடிசைத் தொழிலுக்குப் போதுமான பணம் வேண்டும். சில சமயங்களில்

யூனிட்டுகள் உற்பத்தி செய்த தீப்பெட்டிகளைச் சரிவர விற்பனை செய்ய முடியாது போனால் கருப்பு தீரும் வரையில் மூலதனம் முடங்கிக் கிடக்க நேரிடும்.

சிறிய யூனிட்டுகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படா விட்டால், இந்த வியாபாரத்தைப் பெரிய ஆலைக் கம்பெனிகளே ஏகபோக உரிமையாக நடத்திவரும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

சிறிய தீப்பெட்டித் தொழில் ஸ்தாபனங்களுக்கு மூலதனம் அதிகமில்லை.

இந்தத் தொழிலுக்கு முக்கியமான மூலப் பொருள் மிருதுவான மரம்; இது வேண்டிய அளவு கிடைப்பதில்லை.

கைத்தொழில் முறையில் குடிசைத் தொழிலாகத் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களுக்கு உள்ள மேற்படி குறைகளைத் தீர்த்து வைக்கப் பல வழிகள் இருக்கின்றன.

இயந்திர ஸ்தாபனங்களின் தீப்பெட்டி உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல்; விற்பனையைக் கவனிப்பதற்காக ஒரு தனி ஸ்தாபனத்தை நிறுவுதல் முதலியனவாம். இந்த விஷயங்களைப் பற்றி அகில இந்திய கதர்—கிராமத் தொழில்கள் போர்டார் ஆலோசித்து வருகின்றனர்.

சிறிய ஸ்தாபனங்களினால் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளை விற்பனை செய்வதற்காக ஒரு விற்பனை ஸ்தாபனத்தை அமைப்பது பற்றிச் சென்னை சர்க்கார் ஆராய்ந்து வருகின்றனர்.

தீப்பெட்டிக் குடிசைத் தொழிலின் நன்மைக்காக 1954—55-ம் வருஷத்துக்கு அகில இந்திய கதர் - கிராமத் தொழில் போர்டார் கீழ்க் கண்ட திட்டத்தை வகுத்திருக்கின்றனர் :—

விற்பனை வசதிகள் செய்து கொடுத்தல்; உற்பத்தி முறையை நவீனமாக்குவதற்காக இரு ஆராய்ச்சிச் சாலைகளை நிறுவுதல்; (இதில் ஒன்று சோடாப்பூரில் ஸ்தாபக்கப்படும்; மற்றொன்று தென்னிந்தியாவில் தகுந்த இடத்தில் ஏற்படுத்தப்படும்;) சிறிய தொழிற்சாலைக்குச் சலுகைகளும், சகாயங்களும் செய்து கொடுத்தல்; பழைய தொழிற் சாலைகளைப் புதுப்பிக்கவும் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கும் விசேஷ பண உதவி அளித்தல்; வேலை நடக்காமல் நின்று போன கம்பெனிகள், மற்றும் உதவி அவசியமான ஸ்தாபனங்களுக்குப் பண உதவி அளிப்பதற்காக ராஜ்ய சர்க்கார்களுக்குப் போதுமான கடன் தொகை கொடுத்தல்.

குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்களின் வளர்ச்சியில் இந்திய சர்க்கார் இப்பொழுது அதிகமான அக்கறை காட்டி வருகின்றனர். குடிசைத் தொழில்களின் அபிவிருத்திக்குச் செலவிடப்படுவதற்காகத் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும், ராஜ்ய சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்கார் பண உதவி அளித்து வருகிறார்கள். பல குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைத்தொழில்களின் முன்னேற்றத்துக்காக மத்திய சர்க்கார் அகில இந்திய கதர் கிராமத் தொழில்கள் போர்டு ஒன்றையும் அகில இந்தியக் கைத் தொழில் போர்டு ஒன்றையும் அமைத்திருக்கின்றனர்.

இத் தொழில்கள் பற்றிய சகல பிரச்னைகளையும் மேற்கூறிய போர்டு நன்கு பரிசீலித்து, மக்களுக்குப் பொருளாதார உயர்வை அளிக்க உரியன செய்யும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

இந்திய சர்க்காரால் அமைக்கப் பெற்றுள்ள அகில இந்திய காதி — கிராமக் கைத் தொழில் போர்டின் தலைமைக் காரியாலயம் பம்பாய் நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி போர்டின் விளம்பர இலாகா டைரக்டர் பின் வரும் கட்டுரையை எழுதி உதவியிருக்கிறார்.

இந்தியாவில் தீக்குச்சித் தொழில்

சி. கே. நாராயணசாமி

கல் சகாப்தத்தில் வாழ்ந்த மனிதர் இன்றைய இயந்திர சகாப்தத்துக்கு வர எத்தனையோ ஆயிரம் வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அக்காலத்திலிருந்து இன்று வரை மனிதரின் வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அக்காலத்தில் மனிதர் சக்கிமுக்கிக் கல்லிலிருந்து மிகவும் கஷ்டப்பட்டு நெருப்பை உண்டாக்க வேண்டியிருந்தது. அவ்விதம் உண்டாக்கிய நெருப்பை அவர்கள் சிரமப்பட்டுப் பாதுகாக்கவும் வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ, ஒரு சிறிய தீக்குச்சி எள்ளளவும் கஷ்டமின்றித் தீயை உண்டாக்கி விடுகிறது. அதன் உதவியால் இஷ்டப்படி எந்த இடத்திலும் இமை கொட்டும் நேரத்தில் தீயை மூட்டி விடலாம்.

* * *

இந்த நாட்டில் தீக்குச்சி உற்பத்தியாகத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. முதலில் அது ஆங்காங்கு சில தனி நபர்களின் முயற்சியாக இருந்து வந்தது. தீக்குச்சி உற்பத்தி குறைவாக இருந்ததால், இந்த நாட்டு மக்களின் தேவைக்கு அது போதுமானதாக இல்லை. சர்க்காரின் ஆதரவும் உதவியும் இல்லாததால், அது பெரிய தொழிலாக அபிவிருத்தி அடைவதற்கு வழி இல்லாமலிருந்தது. மக்களின் தேவைக்குப் போதுமான தீக்குச்சிகள் இங்கு உற்பத்தியாகாததால், இந்தியா வெளி நாடுகளிலிருந்து தீக்குச்சிகளை இறக்குமதி செய்வது அவசியமாக இருந்து வந்தது.

முதலாவது மகா யுத்தத்தின் போதுகூட இந் நாட்டில் தீக்குச்சி உற்பத்தி அபிவிருத்தி அடைவதற்கான முயற்சியை அப்போது இந்தியாவை ஆண்டு வந்த பிரிட்டிஷ் சர்க்கார் கைக் கொள்ளவில்லை. அந்த யுத்தத்துக்குப் பிறகு இந்திய சர்க்காருக்கு மிகுந்த பணக் கஷ்டம் ஏற்பட்டது. அதைச் சமாளிப்பதற்காக அதிக வருமானத்துக்கு அவர்கள் வழி தேட வேண்டியிருந்தது. அதற்காக அவர்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகி வந்த தீக்குச்சிகளுக்கு அதிக வரி விதிக்கலாயினர். அதன் விளைவாக, தீக்குச்சி இறக்குமதி பாதிக்குமேல் குறைந்துவிட்டது. அதிக வருமானம் ஒன்றையே முக்கியமாகக் கருதிய இந்திய சர்க்காரின் செய்கை, மறைமுகமாக உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலுக்கு ஓரளவு ஊக்கம் அளிப்பதாயிற்று.

அப்போது தீக்குச்சி செய்வதற்கான வெறும் குச்சிகள், தீப்பெட்டிகளின் பாகங்கள் முதலியவற்றிற்கு இறக்குமதி வரி இல்லை. எனவே, தீக்குச்சித் தொழிலில் ஈடுபட்டிருந்த நபர்களில் பலர் ஜப்பானிலிருந்து மேற்படி சாதனங்களைத் தருவித்து இங்கு தீக்குச்சிகளைத் தயாரித்தனர். அதாவது வெளி நாடுகளிலிருந்து தருவித்த வெறும் குச்சிகளை மருந்தில் தோய்த்தல், பெட்டிகளை ஒட்டுதல், பெட்டிகளுக்கு மருந்து பூசுதல், மருந்தில் தோய்த்த குச்சிகளைப் பெட்டிகளில் போடுதல் முதலிய காரியங்களை இந்த நாட்டில் பூர்த்தி செய்து, முழுத் தீப்பெட்டிகளாக விநியோகிக்கலாயினர்.

ஒரு சில தொழிற்சாலைகளைத் தவிர மற்றப்படி அந்த வேலைகள் யாவையும் ஜனங்கள் கையினாலேயே செய்தனர்.

பிறகுதான், சிறிது சிறிதாக ஜப்பானிலிருந்து தீப்பெட்டிகள் செய்யும் யந்திரங்களும், பெட்டிகளில் தீக்குச்சிகளை நிரப்பும் யந்திரங்களும் நம் நாட்டுக்கு வரத் தொடங்கின. எனினும் தீப்பெட்டி சம்பந்தமான மற்றப் பெரும்பாலான அலுவல்களும் கையினாலேயே செய்து வரப்பட்டன.

சில வருஷங்களுக்கு முன்னால் ஸ்வீடன் தேசத்து இஞ்ஜினீர்கள் தீக்குச்சிகளை மருந்தில் தோய்க்கும் யந்திர வகைகளைக் கண்டு பிடித்தார்கள். அம்முறையை முதன் முதலாக இந்தியாவில் அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் ஸ்வீடிஷ் மாச் கம்பெனியார்தான். இந்தியாவில் மாத்திரமல்ல, உலகத்திலேயே பரந்த அளவில் தீக்குச்சி விநியோகம் அந்தக் கம்பெனியாரின் ஏகபோக பாத்தியமாக இருந்து வந்தது.

1924-ம் வருஷம் இந்திய சர்க்கார் மருந்து தோய்க்காத குச்சிகளுக்கும் பெட்டியின் பாகங்களுக்கும் கூடத் தீர்வை விதித்தனர். அதனால், தீக்குச்சி உற்பத்தி செய்வோர் மேற்படி சாதனங்களையும் இங்கேயே உற்பத்தி செய்து கொள்ளும்படியான அவசியம் ஏற்பட்டது. பிறகு தீக்குச்சி உற்பத்தி சம்பந்தமாக மேற்கொண்டு சில யந்திர வகைகளும் வெளிநாடுகளிலிருந்து வந்தன. தீக்குச்சி செய்வதற்கான ஒரு பிரத்தியேக ரக மென்மரம் ஜப்பான், ஸ்காண்டிநேவியா, பால்டிக் நாடுகள் முதலியவற்றிலிருந்து ஏராளமாக இறக்குமதியாகி வந்தன.


KALISWARI'S
LATEST
NOVELTIES
COCK
TRADE MARK
காளீஸ்வரியின் "சேவல்" மார்க் பட்டாசுகள்
மத்தாப்புகள் மற்றும் எல்லா ரகங்களும் புகழ் பெற்றவை
ஸ்ரீ காளீஸ்வரி
பயர் ஒர்க்ஸ், சிவகாசி
உரிமையாளர்: A. ஷண்முகநாடார்.

இந்திய சர்க்கார் தீக்குச்சிகளுக்கும், தீக்குச்சி உற்பத்தி செய்யும் சாதனங்களுக்கும் அதிக இறக்குமதி வரி விதித்ததால், ஸ்வீடிஷ் மாச் கம்பெனியார் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளை அமைக்கத் தொடங்கினர். 1924-ல் பம்பாய், கல்கத்தா, அஸ்ஸாம், பர்மா முதலிய இடங்களில் தங்களுடைய தொழிற்சாலைகளை அமைத்தனர். அதன் பலனாக 1928 ம் வருஷத்துக்குள் மேற்படி கம்பெனியாருக்கு இந்த நாட்டுக்குத் தேவையான தீக்குச்சிகளில் ஐம்பது சத விகிதம் உற்பத்தி செய்வது சாத்தியமாயிற்று.

அப்போது இந்தியாவில் இருபத்தேழு தீக்குச்சித் தொழிற்சாலைகள் இருந்தன. அவை வருஷத்துக்கு, மொத்தம் 180 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்தன.

உள்நாட்டுத் தீக்குச்சி உற்பத்தித்தொழிலை நசுக்குவதற்கு ஸ்வீடிஷ் கம்பெனியார் கையாண்ட ஆட்சேபகரமான முறைகள் தீர்வை போர்டார் விசாரணையின் போது அம்பலமாயின. இதன் பேரில், இந்தியாவுக்குத் தேவையான தீக்குச்சிகளில் ஐம்பது சத விகிதத்துக்கு மேல் உற்பத்தி செய்வதில்லை என்று ஸ்வீடிஷ் மாச் கம்பெனியார் உறுதி கூறினர். எனினும் அவர்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்ற வில்லை. 1953-ம் ஆண்டில் அக்கம்பெனியார் அறுபத்தொன்பது சத விகிதம் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அதாவது உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலின் அபிவிருத்திக்கு அவர்கள் தடையாக இருந்து வருகிறார்கள் என்று சொல்லவேண்டும். எனவே, உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலின் நிலைமையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பரிசீலனை செய்து உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இது சம்பந்தமாக அகில இந்தியக் கதர்-கிராமக் கைத் தொழில் போர்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

அன்னியக் கம்பெனியின் போட்டியை ஒழிப்பதுடன், உள் நாட்டிலும் தீக் குச்சித் தொழிற்சாலைகளில் பெரிய முதலாளிகள் நடத்தும் தொழிலாகி விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தீக்குச்சித் தொழில் கிராமங்களில் அவரவர்களுடைய வீடுகளில் சிறிய அளவில் நடக்கும் தொழிலாகவே நடந்து வரும்படி செய்ய வேண்டும்.

இதற்கு வேண்டிய பிரயத்தனங்களை அகில இந்திய காதி—கிராமக் கைத் தொழில் போர்டார் எடுத்து வருகிறார்கள்.

* * *

இந்தியாவில் உள்ள முப்பத்தாறுகோடி ஜனங்களுக்கு மூன்று கோடியே இருபது லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் செலவா

கின்றன. அதாவது ஒருவருக்கு மாதம் ஒரு தீப்பெட்டி விதம் செலவாகிறது.

தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தில் தீக்குச்சி உற்பத்தி செய்யும் சிறு தொழிலுக்கு முக்கிய ஸ்தானம் அளிக்க வேண்டும் என்று திட்டக் கமிஷன் தெளிவாகக் கூறுகிறது.

இந்தக் கிராமக் கைத்தொழில் வளர்ச்சியை அகில இந்தியக் கதர் - கிராமக் கைத்தொழில் போர்டாரின் மேற்பார்வையில் விட வேண்டும் என்று திட்டக் கமிஷன் தீர்மானித்திருக்கிறது.

இப்போது கிராமக் கைத்தொழில்களின் மூலம் 6 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தியாகி வருகின்றன. நாலு வருஷங்களுக்குள் இந்த உற்பத்தியைப் பதினெட்டு லட்சம் ஆக்கி விட வேண்டும் என்று திட்டக் கமிஷன் கூறுகிறது.

தீக்குச்சி உற்பத்தித் தொழிற்சாலைகள் ஏ. பி. ஸி. என்று மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

ஏ வகுப்புத் தொழிற் சாலைகளில், ஐந்து லட்சம் குரோஸுக்கு மேல், மொத்த உற்பத்தி அளவுக்கு வரம்பு கிடையாது.

பி வகுப்புத் தொழிற்சாலைகளில் வருஷத்துக்கு ஐந்து லட்சம் குரோஸ் தீப்பெட்டிகளுக்கு மேல் உற்பத்தியாகாது.

ஸி வகுப்புத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தினம் நூறு குரோஸ் உற்பத்தியாகும்.

இந்த மூன்று தரமான தொழிற் சாலைகளில் பி வகுப்பையும் ஸி வகுப்பையும் சேர்ந்த சிறிய கைத் தொழிற்சாலைகளுக்குச் சர்க்கார் வரி தள்ளிக் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள்.

தீக்குச்சித் தொழில் இன்னமும் சிறிய அளவில் ஆங்காங்கு பரவலாக ஏற்படுவதற்குப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

தீக்குச்சிகளுக்கு மூங்கிலை உபயோகிக்க முடியும் என்பதை, சமீபத்தில் புது டில்லியில் நடந்த அகில இந்திய கதர் - கிராமக் கைத்தொழில் காட்சியில் நிரூபித்துக் காட்டினார்கள். மூங்கிலை உபயோகிப்பதன் மூலம் தீக்குச்சி உற்பத்திச் செலவில் சிக்கனம் செய்வது சாத்தியமாகும். மரத்திலிருந்து தீக்குச்சி செய்வதற்கு யந்திரங்கள் தேவையாக இருக்கின்றன. ஆனால் மூங்கிலிலிருந்து தீக்குச்சிகள் செய்ய யந்திரங்கள் தேவையில்லை. இந்தியக் கிராமப் பிரதேசங்களில் ஏராளமாக மூங்கில்கள் கிடைக்கின்றன. ஒரு துண்டு மூங்கிலிலிருந்து நூற்று எண்பது டஜன் தீக்குச்சிகள் கிடைக்கும் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

தினசரி இருபத்தைந்து குரோஸ் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்யக் கூடிய இரண்டு சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அத் தொழில் சம்பந்தமான நுணுக்கங்களை ஜனங்களுக்குப் பிரத்தியட்சமாகக் காட்ட அகில இந்திய கதர், கைத்தொழில்

'கேப்' தொழிற்சாலை



1, 4. 'கேப்'புத் தொழிற்சாலையில் தயாரான 'கேப்' பில்லைகளில் இருந்து நல்ல 'கேப்' பில்லைகள் பொறுக்கப்படுகின்றன. 2. சின்னஞ்சிறு இயந்திரத்தின் உதவியால் 'கேப்' பில்லைகள் தயாரிக்கப்படுகின்றன. 3. 'கேப்' பில்லைகள் வைக்கும் 'கேப்' பெட்டிகளைச் செய்கிறார்கள்.

போர்டார் உத்தேசித்திருக்கிறார்கள். மேற்படி தொழிற்சாலை ஒவ்வொன்றுக்கும் ஏழாயிரம் ரூபாய் மான்யம் அளிக்கப்படும்.

தீக்குச்சி தயார்ப்பதற்கான மூங்கில் குச்சிகள், தீக்குச்சிகளைப் பற்ற வைப்பதற்காகப் பெட்டிகள் மீது பூசும் மருந்து முதலிய தீக்குச்சி உற்பத்தி சம்பந்தமான பல அலுவல்களையும் ஜனங்களுக்குச் செய்து காட்டுவதற்காகக் கல்கத்தாவுக்கு அருகில் மற்றொரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும். மற்றும் 'சி' வகுப்பைச் சேர்ந்த சிறிய தீக்குச்சித் தொழிற்சாலைகளுக்கு இவ் வருஷத்தில் எண்பதாயிரம் ரூபாய் உதவி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது மூடப்பட்டுள்ள பல சிறிய தீக்குச்சித் தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்குப் பண உதவி செய்யவும் அகில இந்திய-கதர் கைத்தொழில் போர்டார் உத்தேசித் திருக்கிறார்கள். இருபத்தைந்து குரோஸ் மட்டும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு விசேஷ மான்யம் கொடுக்க எண்ணியிருக்கிறார்கள். இம் முறைகளால் நம் நாட்டில் தீக்குச்சி உற்பத்தித் தொழில் பரவலாகவும் உண்மையான வீட்டுத் தொழிலாகவும் அபிவிருத்தி அடைந்து பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

சக்கரவர்த்தித்



15. சீதா கலியாணம்

மிதிலையில் ஜனக மகாராஜனுடைய யாகத்துக்காகச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, பல வேறு தேசங்களிலிருந்து ரிஷிகளும் பிராமண சிரேஷ்டர்களும் வந்து சேர்ந்திருந்தார்கள். விசுவாமித்திரருக்கும் ராஜ குமாரர்களுக்கும் தகுந்த விடுதி காட்டப்பட்டு, அங்கே அவர்கள் தங்கினார்கள். ஜனகருடைய புரோகிதரான சதானந்தர் விசுவாமித்திர முனிவரை எதிர்கொண்டு உபசரித்தார். பிறகு ஜனகரே நேரில் வந்தார்.

"நீங்கள் என்னுடைய யாகத்திற்கு வந்தது என்னுடைய பெரும் பாக்கியம்" என்றார் ஜனகர்.

"இந்த வாலிபர்கள் யார்? இவர்களைப் பார்த்தால் தேவலோக வாசிகளைப் போலிருக்கிறார்கள். ஆயுதங்களைத் தரிக்கும் தோரணையைப் பார்த்தால் தேர்ச்சி யடைந்த வீரர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் இருவரும் ஒரே சாயலாகவும் இருக்கிறார்கள். இவர்களைப் பெற்ற மகா பாக்கியவான் யார்?" என்று ஜனகர் கேட்டார்.

விசுவாமித்திர முனிவர், அவர்கள் தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள் என்பதையும், தாம் செய்த யாகத்தை அவர்கள் காத்து, அரக்கர்களை அழித்த விவரத்தையும் ஜனக மகாராஜனுக்குத் தெரிவித்தார்.

விருத்தாந்தம் எல்லாம் சொல்லி, "மிதிலையிலுள்ள ருத்திர தனுசைப் பற்றிக் கேள்விப்பட்டு, தாங்கள் அனுமதித்தால் அதைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்று பொருளை அடக்கி முனிவர் சொன்னதும் ஜனகர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்.

* * *

"வில்லைப் பார்க்க வந்திருக்கிற ராஜகுமாரன் வில்லைப் பார்க்கலாம்; வில்லை வளைத்து நாண் ஏற்றினால் என் மகளையும் பெறுவான். இந்த வில்லைப் பார்த்து, அசைக்கவும் முடியாதென்று திரும்பிப் போன

திருமகன்

ராஜ குலத்தவர்கள் பலர். சரீர சம்பந்தமின்றித் தெய்வீகமாய்த் தோன்றிய என் மகள் சீதையைத் தசரதருடைய மகன் பெற்றானாகில் நான் மகிழ்வேன்'' என்றார் ஜனகர்.

வில்லைக் கொண்டு வரும்படியாக ஜனகர் தம் ஆட்களுக்கு உத்தரவிட்டார்.

வில்லானது ஓர் இரும்புப் பெட்டியில் பூஜை பந்தோபஸ்துடன் வைக்கப்பட்டிருந்ததை எட்டு சக்கரங்கள் கொண்ட வண்டியில் ஏற்றி, ஆயிரக்கணக்கான ஜனங்கள் சேர்ந்து உற்சவத் தேரை இழுத்து வருவதுபோல் இழுத்து வந்து சபா மண்டபத்தில் சேர்த்தார்கள்.

* * *

"இதோ, நானும் என் முன்னோரும் பூஜித்த மகா தேவருடைய வில். ராஜ குமாரி சீதையை அடைய இதைப் பல அரசர்கள் வளைத்து நாண் ஏற்றப் பார்த்து முடியாமல் திரும்பிப் போயினர். இதைக் காண விரும்பும் தசரத குமாரனும் பார்க்கலாம்'' என்றார் ஜனகர்.

சபையில் இவ்வாறு ஜனகர் சொன்னதும், ''ராமசந்திரனே! பெட்டியைத் திறந்து, வில்லைப் பார்'' என்றார் விசுவாமித்திர முனிவர்.

குருவின் ஆணையைப் பெற்ற ராமன் இரும்புப் பெட்டியைத் திறந்து வில்லைப் பார்த்துவிட்டு மிக வினயமாக, ''இந்தப் புண்ணிய தனுசை நான் தீண்டலாமா? எடுத்து நாண் ஏற்ற அனுமதி உண்டா?'' என்றான்.

ஜனகரும் விசுவாமித்திர முனிவரும் ''மங்களம் ஆகுக!'' என்றார்கள்.

சபையிலிருந்த அனைவரும் கண்ணை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பூமாலையை எடுப்பது போல் அவ் வில்லை விளையாட்டாக எடுத்தான் ராமன்!



ராஜாஜி

"சீதை எனும் பூந்
தோடலர் கொம்பினைச்
சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை
இதென்ன எடுத்தான்!"

எடுத்து நிறுத்தித் தன் கால் கட்டை விரலால் தாக்குக் கொடுத்து வில்லை வளைத்து நாண் ஏற்றி விட்டான். பிறகு நாணைப் பிடித்துக் காது வரையில் இழுத்தான்.

தடுத்(து)இமை யாமல்
இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி
வைத்ததும் நோக்கார்
கடுப்பினை* யாரும்
அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர்
இற்றது கேட்டார்!

நாணை இழுத்த வேகத்தில் வில் வளைந்து வளைந்து திடீர் என்று இடி யோசையுடன் முறிந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.

"என் உயிரைவிடப் பிரியமான சீதையை ராமனுக்குத் தந்தேன்" என்றார் ஜனகர்.

"மிக வேகமாகச் செல்லும் தூதர்களை அயோத்தியைக்கு அனுப்பித் தசரத மகாராஜனை அழைத்து வர உத்தரவு இடுவீராக" என்றார் விசுவாமித்திர முனிவர்.

அப்படியே தூதர்கள் சென்றார்கள்.

* * *

ஜனக மகாராஜனுடைய தூதர்கள் மூன்று நாட்கள் வெகு வேகமாகப் பிரயாணம் செய்து, அயோத்தியைப் போய்ச் சேர்ந்தார்கள். தேவராஜனைப் போல் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த தசரத சக்கரவர்த்தியைக் கண்டு தூதர்கள், "விசுவாமித்திர முனிவரும், ஜனக மகாராஜாவும் தங்களுக்கு நற்செய்தி அனுப்பி யிருக்கிறார்கள். திருமகன் மிதிலைக்கு வந்தவன் சீதா சுயம்வரத்துக்கு அமைக்கப்பட்டிருந்த பரமசிவனார் வில்லை வளைத்து, நாணேற்றி, நாணை இழுத்து வில்லை ஒடித்தே விட்டான். சீதையைத் தங்கள் வீர குமாரன் ராமசந்திரனுக்குக் கொடுத்து விவாகம் செய்யத் தங்கள் அனுமதியையும் தங்கள் நல்வரவையும் ஜனக மகாராஜா எதிர் பார்க்கிறார். அனைவரும் உள்ளம் பூரித்து மகிழுமாறு தாங்களும் பரிவாரமும் உடனே மிதிலை செல்ல வேண்டும்" என்று கூறினார்கள்.

பயந்து பயந்து ராஜ குமாரர்களை விசுவாமித்திர முனிவருடன் அனுப்பின தசரதனுக்கு இந்த விதமான சந்தோஷச் செய்தி வந்ததும் அவன் பரவசப் பட்டான் என்று சொல்லவும் வேண்டுமா? உடனே மந்திரிகளுக்குச் சொல்லி எல்லா ஏற்பாடுகளும் செய்து, அடுத்த நாளே தசரதன் பரிவாரத்துடன் மிதிலைக்குப் புறப்பட்டான்.

தசரதன் சகல பரிவாரங்களுடனும் அரசர்க்குரிய ரத்தினாதி பரிசுகளுடனும் மிதிலை போய்ச் சேர்ந்தான். ஜனகரும் தசரத சக்கரவர்த்தியும் சந்தித்து உபசாரங்கள் முடிந்ததும், "யாகம் சீக்கிரத்தில் முடியும். அது முடிந்தவுடனே இந்த விவாகத்தை நடத்தி விடுவது சிலாக்கியமாக எண்ணுகிறேன்" என்று ஜனக மகாராஜா தசரதனுக்குச் சொல்லிச் சம்மதியைக் கேட்டார்.

"பெண்ணைக் கொடுப்பவராகிய நீர் அல்லவோ செய்ய வேண்டியதற்கெல்லாம் அதிகாரி? நீர் சொல்லுகிறபடி எல்லாம் நடக்க வேண்டியது" என்றான் தசரதன்.

* * *

"இதோ என் மகள் சீதை, மகனே! நீ செல்லும் தரும நெறியில் இவள் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக் கொள்வாய். மங்களம் ஆகுக. கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள். எப்போதும் விட்டுப் பிரிய மாட்டாள்."

இயம்ஸீதா மம ஸுதா
ஸஹ தர்ம சரீ தவ
ப்ரதீச்ச சைனும் பத்ரம்தே
பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா
பதிவ்ரதா மஹா பாகா
சாயா இவானுகதா ஸதா

வடநாட்டில் எல்லா விவாகங்களிலும் பெண்ணைக் கொடுக்கும்போது இந்த சீதா கல்யாண மந்திரத்தைச் சொல்லி வருகிறார்கள்.

இவ்வாறு ஜனகர் சீதையை ராமனிடம் ஒப்புவித்து விட்டார். சீதையும் சக்கரவர்த்தித் திருமகனும் பழைய பாற்கடல் காதலர்கள் அல்லவோ? பிரிந்தவர்கள் மறுபடியும் ஒன்று கூடும் பெரு மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

* கடுப்பு-வேகம்.

மனக் குரங்கு

குமாரி மணியன்

என் நண்பர் பேராசிரியர் சங்கரனும் நானும் சற்று உலாவி வர வெளியே சென்றோம். பேச்சு பல விஷயங்களைச் சுற்றிக் கடைசியில் மனோ தத்துவத்துக்கு வந்தது. நண்பர் மனோ தத்துவ சாஸ்திரத்தில் பல பெரிய பட்டங்கள் பெற்றவர். விசேஷ ஆராய்ச்சிகள் கூடச் செய்தவர். எந்த விஷயத்தையும் மிகத் தெளிவாகக் கூறும் ஆற்றல் நண்பருக்கு உண்டு.

நானும் பேராசிரியர் சங்கரனும் நெடுநாளைய நண்பர்கள். குழந்தைப் பருவ முதலே இருவரும் ஒன்றாக விளையாடி ஒரே பள்ளியில் படித்தவர்கள். நான் பி. ஏ. வுடன் நின்று விட்டேன், உள்ளூர் பாங்கியின் நிரந்தர குமாஸ்தாவாக. நண்பர் எம். ஏ. பட்டம் பெற்று, பின் பி. எச். டி. பட்டம் பெற அமெரிக்கா சென்றவர். பல ஆராய்ச்சிகள் செய்து மிக்க புகழ் பெற்றவர். மனோ தத்துவத்துக்கு ஒரு அத்தாட்சி என்று வெளி நாடுகளிலும் பெயர் பெற்றவர். இப்படிப் பெரிய மனிதர் ஆகிவிட்ட போதிலும் பழைய நண்பனாகிய என்னை அவர் மறந்ததே யில்லை. எப்பொழுது வந்தாலும் என்னுடன் இரண்டு நாட்களாவது தங்காமல் போக மாட்டார். அந்த இரண்டு நாட்களையும் என்றும் மறக்காம லிருக்கும்படி செய்து விடுவார் — அவ்வளவு ரஸமாகப் பேசுவார். மனோ தத்துவத்தின் சிக்கலான விஷயங்களைப் பேசுவதில் அவருக்கு அலாதியான பிரியம்.

தேன் குடித்த நரி மாதிரி நண்பர் சொல்லுவதை ஆவலுடனும் உற்சாகத்துடனும் நானும் கேட்டுக் கொண்டிருப்பேன். கடந்த நான்கு ஆண்டுகளாக நண்பர் டில்லியைவிட்டுச் சென்னைப் பக்கமே வரவில்லை. ஆகையினால் இந்தத் தடவை சென்னை வருகிறார் என்று தெரிந்தவுடன் நான் ஆனந்தக் கடலில் மூழ்கினேன். விமான நிலையம் சென்று நண்பரை அழைத்து வந்தேன். பகல் உணவுக்குப் பிறகு ஓய்வெடுத்துக் கொண்டார் நண்பர். சாயங்காலமானவுடன் நண்பரும் நானும் கடற்கரையை நோக்கிக் கிளம்பினோம்.

நண்பர் என்னிடம், "இல்லாத ஓர் குணத்தையோ பொருளையோ நாம் அடைந்திருப்பதாகச் சில சமயம் எண்ணுகிறோம். நாம் அடைய முடியாததை, அடைந்திருப்பதாக எண்ணுவதில் ஒரு தனி ஆனந்தம் ஏற்படுகிறது" என்று சொன்னார்.

எப்பொழுதும் நண்பர் இம் மாதிரித்தான் திடீரென்று ஏதாவது ஆரம்பிப்பது வழக்கம். எனக்கு அவர் கூறியது சரியாகப் புரியவில்லை. இருந்தாலும் ஏதோ ரஸமான சம்பவம் பின்னால் வரப் போகிறது என்று எண்ணி நானும் பதில் சொன்னேன். "அது சரி, அப்படி யிருப்பதனால் என்ன! உதாரணமாக என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு சாதாரண குமாஸ்தா. தினம் தினம் லட்சக் கணக்கான பணம் புரளும் ஒரு பாங்கியின் சிப்பந்தி. பாங்கியிலுள்ள பணம் பூராவும் என்னுடையதுதான் என்று நான் எண்ணுகிறேன் என்று வைத்துக் கொண்டால் ஒன்று, நான் கம்பி எண்ண வேண்டி யிருக்கும்; இல்லாவிடில் பைத்தியம் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்ள வேண்டி யிருக்கும்" என்றேன்.

"சுந்தரம் நீ சொல்லுவது சரி. ஆயினும் நான் சொல்ல வந்ததின் கருத்தை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. நமது மனம் நமக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதிலேயே மூழ்கி இருக்கிறது. நமக்கு மிகவும் பிடித்த சங்கதிகளை நாம் பல வருஷங்கள் ஞாபகம் வைத்துக் கொள்கிறோம். பிடிக்காத சங்கதிகள் சீக்கிரத்தில் நம் மனத்தை விட்டு மறைந்து விடுகின்றன" என்று நண்பர் கூறினார்.

"அது உண்மையாக யிருக்கலாம். ஆயினும் இல்லாததை இருப்பதாக நினைத்துக் கொண்டால் அது நிச்சயம் மூளைக் கோளாறில்தான் முடியும்" என்றேன் நான் பதிலுக்கு.

நண்பர் ஆமோதித்த மாதிரி தலையைப் பலமாக அசைத்து விட்டு, "ஆமாம்! அநேக சமயங்களில் அது அம்மாதிரியே முடிகிறது. என்றாலும் அந்தப் பித்த நிலையும் மனிதனுக்கு ஒரு சாந்தியை ஏற்படுத்துகிறது. இதைப் பார்க்கும்போது மனத்தின் உண்மையான போக்கு வெளியாகிறது. அளவு கடந்த பாசம், அளவு கடந்த துக்கம் ஆகியவை மனத்தின் சாதாரணப் போக்கை மாற்ற, இல்லாதவற்றை இருப்பதாக எண்ண வைக்கிறது. அது மூளைக் கோளாறுதான் — ஆனால் பித்தநிலை அல்ல — அவர்கள் பைத்தியங்கள் அல்ல. மனச் சாந்தியை அடையப் போராடும் ஆத்மாக்கள் என்றே நான் கூறுவேன். இதற்கு நம் செங்காளிபுரம் பிரசாகதாரே ஒரு நல்ல உதாரணம்" என்று கூறினார்.





உடனே நான் சுவை மிகுந்த கதையைக் கேட்கத் தயாரானேன். நான் கடந்த நான்கு ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த தருணம் வந்து விட்டது. நண்பர் ஆரம்பித்தார்.

''அன்று செங்காலிபுரம் மிராசுதாரின் பங்களா அல்லோலகல்லோலப்பட்டது. எங்கு பார்த்தாலும் தோரணங்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்திருந்தார்கள். பாண்டு வாத்தியமும், நாதசுரமும் மாற்றி மாற்றியும் ஒன்று கலந்தும் காதைப் பிளந்தன. அந்த ஜில்லா முழுவதுமே செங்காலிபுரத்துக்குத் திரண்டு விஜயம் செய்தது போன்று ஏகப்பட்ட கூட்டம். கார்களில் வருபவர்களும், வண்டிகளில் வருபவர்களும், நடையில் வருபவர்களுமாக அந்தக் கிராமத்தையே ஒரு கலக்குக் கலக்கி விட்டிருந்தார்கள். இரவு விருந்துக்காகத் தயாரிக்கப்படும் விதம் விதமான சித்ரான்னங்களின் வாசனை அந்த வட்டாரம் முழுவதிலும் வீசியது.

ஆம்! மிராசுதாரின் மகன் பிறந்து அன்று பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன. பிரபல பாடகர்களின் கச்சேரிகளும், நாட்டிய மணிகளின் நடனங்களும் ஏற்பாடாகியிருந்தன. நம் மாகாணத்திலேயே பெரிய மிராசுதார் அவர். அவருக்குப் பிறந்தது ஒரே பிள்ளைதான். விசேஷத்துக்குக் கேட்கவா வேண்டும்!

எனது சகோதரியின் கணவர்தான் செங்காலிபுரம் மிராசுதாரின் குடும்பத்துக்கு டாக்டர். நான் அமெரிக்காவுக்குப் போக ஏற்பாடாகியிருந்த சமயம் அது. சகோதரியின் அழைப்பின் பேரில் பத்து நாள் அவளுடன் தங்கிப் போக அங்கே சென்றிருந்தேன். நான் அவ்வூருக்கே அன்று மாலை நான்கு மணிக்குத்தான் போனேன். போனவுடனே என் சகோதரியின் கணவர் கூறினார். 'சங்கர்! நல்ல சமயத்தில் வந்தாய். இன்றிரவு நீயும் என்னுடன் மிராசுதாரின் வீட்டுக்கு வரலாம். அமெரிக்கா போய் அறிவதைவிடப் பல விஷயங்களை நன்கு இவ்விடத்திலேயே நீ அறிந்து கொள்ளலாம்' என்றார்.

என் சகோதரியின் கணவர் எப்போதுமே அயல் நாட்டுக் கல்வியைப் போற்றுபவரல்லர். 'நம் நாட்டில் இல்லாததா!' என்ற எண்ணம் அவருக்கு உண்டு. உள்ளூரில் விலை போகாத மாடுகள் என்று அவர்

1. சீன வெடி மத்தாப்புத் தொழிற்சாலையில் உள்ள குடில்களின் தோற்றம். 2. கம்பி மத்தாப்பு செய்வதற்காகக் கம்பிகள் சட்டத்தில் செருகப்படுகின்றன. 3. கம்பி மத்தாப்புகள் தயாராகி உலரவைத்திருக்கிறார்கள்.


CAMEL BRAND
SOUTH INDIAN LUCIFER MATCH WORKS, SIVAKASI.
SAFETY MATCHES
குளிர், மழைப் பிரதேசங்களுக்கு உகந்தது
ஒட்டகம் மார்க்
தீப்பெட்டியே
★
தினந்தோறும் சுமார் இரண்டு லட்சம் பேர்கள்
'ஒட்டகம் மார்க்' தீப்பெட்டிகளை உபயோகிக்கிறார்கள்
★
விற்பனை டிப்போக்கள்:
மங்களூர்: 678, அஜீசுடீன் ரோடு
கள்ளிக்கோட்டை: 2-3, பீச் ரோடு
கண்ணனூர்: 674, காம்ப் பஜார்
தலைச்சேரி: 7/233, மெரின் ரோடு
திரூர்: 127/A, மலப்புரம் ரோடு
சௌத் இந்தியன் லூசிபர் மாட்ச் ஒர்க்ஸ்
தந்தி: 'LUCIFER'
தபால் பெட்டி 26, சிவகாசி
போன் நெ. 81

அயல் நாடு போவோர்களைக் கூறுவார். ஆகையால் அவர் கூறியவற்றிற்கு நான் அதிக மதிப்பு வைக்கவில்லை. தமது ஊர் மிராசுதாரின் பெருமைகளை என்னிடம் காட்ட விரும்புகிறார் போலும் என்று எண்ணினேன். நான் சேங்காலிபுரத்துக்கே அன்றுதான் முதல் தடவையாகப் போனேன். மிராசுதாரைப் பற்றிக் கேள்விப்பட்டதுகூட இல்லை. ஆகையால் பதில் ஒன்றும் கூறாமல் 'சரி' என்று சொல்லி வைத்தேன்.

விருந்துக்கு நானும் அன்றிரவு போனேன். சுந்தரம்! அந்த மாதிரி பிரமாதமான விருந்தை நான் அமெரிக்காவில்கூடக் காண முடியவில்லை. வாசலில் நின்றுகொண்டு மிராசுதாரே எல்லோரையும் வரவேற்றார். தமது பிள்ளையைப் பன்னிரண்டு ஆண்டுகள் நன்கு வளர்த்திருக்கும் பெருமை அவர் முகத்தில் ஒளி வீசியது. தந்தையின் பெருமிதம் அவரது நடையில் நன்கு புலப்பட்டது.

சந்தனம், பன்னீர், சர்க்கரை, தேங்காய், பழவகைகள் எல்லாம் அள்ளி அள்ளி வழங்கப்பட்டன. இந்தியாவை ஏழை இந்தியா என்று சொன்ன பைத்தியக்காரன் யார்? எந்த வெளிநாட்டானும் அன்று பார்த்திருந்தால் அதை மறுத்திருப்பான். விருந்து ஆரம்பமாயிற்று; உண்மையிலேயே நான் திகைத்துப் போனேன். நான் இது வரை பார்த்தும் கேட்டுமிராத உணவு வகைகளை அன்று கண்டேன். இந்தியாவின் உணவு வகைகள் பற்றி அமெரிக்காவில் பேச ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை நன்கு சமாளிக்க முடியும் என்ற தைரியம் அன்று எனக்கு ஏற்பட்டது. பல்லாயிரக் கணக்கான ஏழைகள் அன்று உண்டு மகிழ்ந்தார்கள். அன்று கண்ட தித்திப்பு வகைகள் இன்னும் என் மனத்திலிருக்கிறது. சுந்தரம்! மனத்துக்குத் தான் வயிற்றைப் போல் ஜீரண சக்தி கிடையாதே!'' என்றார்.

கதை மிகவும் சுவாரஸ்யமாகிக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில் அம்மாதிரி ஒரு விருந்தைப் பற்றிக் கேட்பதே ஒரு விருந்தல்லவா!

இதற்குள் நாங்கள் கடற் கரையை அடைந்து விட்டோம். ஒரு புறமாகக் கூட்டமில்லாத இடமாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டோம். நண்பர் தொடர்ந்தார் :—

''விருந்து முடிந்தது. மிராசுதாரும் எல்லோருடன் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டார். தாம்பூலங்களுக்குப் பின் சங்கீத, நடனக் கச்சேரிகள் ஆரம்பமாக வேண்டும்.

சங்கீதக் கச்சேரியில் எல்லோருக்கும் முன்னால் மிராசுதார் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி காலியாக இருந்தது. அது மிராசுதாரின் மகனுக்காகப் போடப் பட்டது போலும். ஆனால் அது வரை நான் அவர் பிள்ளையான சின்ன மிராசுதாரையே பார்க்கவில்லை. சாப்பிடும் போதுகூட மிராசுதாருக்குப் பக்கத்தில் ஒரு காலி இலை இருந்தது. கச்சேரி ஆரம்பமாகி விட்டது. சங்கராபரணத்தை அப்படியே அழகாகச் சபையோருக்கு அளித்துக் கொண்டிருந்தார் பாடகர். சங்கீதக் கச்சேரி முடிந்து நடனக் கச்சேரி ஆரம்பமாக மணி பன்னிரண்டாகி விட்டது. தஞ்சாவூர் மரகதம் என்று கேள்விப்படாமலிருக்க முடியாது. மரகதத்தின் பெயர் மிகப் பிரசித்தமான காலம் அது. வெறும் மரகதம் என்றுதான் உலகம் அறியும். குமாரி என்ற அடைமொழி வராத காலம் அது. மரகதம் சாதாரணமாக எல்லாவிடங்களுக்கும் நடனமாடப் போவதில்லை. ஒரு சில பெரிய சீமான்கள் வீடுகளில் மட்டுமே போய் ஆடுவாள். மரகதம் வருகிறாள் என்றால் அது அந்த ஊருக்கு முக்கியமான சம்பவம் ஆகும். ஒரு திருவிழாக் கூட்டம் கூடும் அவளைப் பார்க்க. அதுவும் அன்று ராமு நட்டுவனார் கூட வருகிறார் என்ற செய்தியும் பரவியிருந்தது. கேட்க வேண்டுமா கூட்டத்துக்கு!

அன்று மரகதம் அபூர்வமாக ஆடினாள். பந்தலிலும் வெளியிலும் இருந்தவர்கள் எல்லாம் அவள் கூடவே ஆடினர் என்று கூறினால் மிகையாகாது. நான் கூட அவள் நடனத்தில் ஒன்றி விட்டேன். எனக்கு அப்போது ஒரு சந்தேகம் ஏற்பட்டது. என்னடா இது? இவ்வளவு அரிய நடனத்தைப் பார்ப்பதற்குக் கூடத் தமது மகனை மிராசுதார் அழைத்து வரவில்லையே! என்று எண்ணினேன். அந்தச் சின்ன மிராசுதார் நடனம் பார்க்காததினால் எதையோ இழந்தது போல் எனக்குத் தோன்றியது. பிறர் பார்த்துத் திருஷ்டி வராமலிருக்க வேண்டும் என்று தம் மகனைப் பெரிய மிராசுதார் வெளியே வரவிடவில்லை போலும் என்று எண்ணினேன்.

மரகதம் நடனத்தை முடிக்கும்போது மணி மூன்று. நடனம் முடிந்த பிறகு கூடப் பலரது மனம் நடனமாடிக் கொண்டிருந்தது. அவ்வளவு அற்புதமான ஆட்டம் அன்று கண்டோம். நானும் என் சகோதரியின் கணவரும் வீடு திரும்பினோம். வழியில் நான் சொன்னேன் — 'இன்று எவ்வளவு ஏழைகள் சந்தோஷமடைந்தார்கள்! அவர்கள் மிராசுதாரின் மகனை எப்படி வாழ்த்தியிருப்பார்கள்! இந்த வாழ்த்துக்களுக்காகவே தான் பணமூட்டைகள், பணத்தை வாரி இறைக்கிறார்கள். இது தமது மகன் நீண்டு வாழப் பிறர் ஆசி கூறச் செய்யும் வழியே தவிர வேறில்லை. தாம் செய்த பாவங்கள் தம் மகன் மீது வாரா திருக்க மிராசுதார் ஆசிப் பிச்சையில் இறங்கியிருக்கிறார்!' என்றேன்.

எனது சகோதரியின் கணவர் அப்படியே மலைத்துப் போய் விடுவார் என்று நான் எதிர்பார்த்தபோது அவர் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தார். 'இந்த மாதிரி இடங்களில்தான் மனோதத்துவ நிபுணர்கள்—அமெரிக்கா போகப் போகிறவர்கள் கூடத் தவறி விடுகிறார்கள்' என்று கூறி மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தார்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நீங்கள் சிரிக்க வேண்டாம். மிராசுதாரின் நண்பராகிய நீங்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டீர்கள்—இருந்தாலும் உண்மை யென்னவோ—நான் கூறியதுதான். மிராசுதாரின் மகனின் பிறந்தநாள் கொண்டாட்டம் எனக்கு வேறு விதமாகப் படவில்லை. பிள்ளை குட்டியில்லாமலிருந்தால் உங்கள் மிராசுதார் இம்மாதிரிப் பணச் செலவில் இறங்குவாரா என்பது பெரிய சந்தேகம்' என்று அடித்துக் கூறினேன். எப்படியாவது மிராசுதாரை இறக்கிப் பேசி எனது சகோதரியின் கணவரை வம்புக்கிழுக்க வேண்டும் என்பதே என்னுடைய அவா. அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியுடன் மேற்கண்டபடி கூறினேன்.

மறுபடியும் அவர் சிரிக்க ஆரம்பித்தார். நான் அவரிடம்—'ஏன், சிரிக்கிறீர்கள்? உண்மையை மறைக்கச் சிரிப்பினால் முடியாது' என்றேன். உடனே அவர் 'மனோதத்துவ நிபுணரே! நீ கூறியபடி மிராசுதார் ஆசிப் பிச்சையில் இறங்கவில்லை. அவர் மகன் பிறந்த எட்டாவது மாதமே இறந்து விட்டான். அன்றிலிருந்து மிராசுதார் எப்போதும் தன்னுடனேயே மகன் இருப்பதாக ஒரு பிரமையிலிருக்கிறார். அவர் நாற்காலிக்குப் பக்கத்தில் எப்போதும் ஒரு காலி நாற்காலி இருந்து

கொண்டே யிருக்கும். ஒவ்வொரு வருஷமும் மகனின் பிறந்த தினத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார். மகன் இறந்ததாகவே அவர் நினைக்கவில்லை. யாராவது அப்படிச் சொன்னால் அவர்களை மிகவும் வெறுக்கிறார். எல்லாரும் மகன் உயிருடன் இருப்பதாகவே நடந்துகொள்ள வேண்டும் என்கிறார்' என்றார்.

அவர் மேலும் தொடர்ந்து, 'அவரைப் பைத்தியம் என்கிறார்கள். ஆனால் அவரது நடை உடை பாவனைகளிலோ பேச்சிலோ பித்தனின் சாயலே இல்லை. மிராசு விவகாரங்கள் எல்லாம் அவரே நன்கு கவனிக்கிறார். ஆனால் மகன் மட்டும் உயிருடனிருப்பதாகவே நம்புகிறார். ஒரு வேளை அவர் கண்களுக்கு மட்டும் அவன் புலப்படுகிறானோ, என்னவோ! இதை நீங்கள் எந்தக் கணக்கில் சேர்ப்பீர்கள், மனோதத்துவ ஆசிரியரே! அமெரிக்கா போகாமலே நீங்கள் இங்கேயே அதிகம் அறியலாம் என்று இதைத்தான் குறிப்பிட்டேன்' என்று ஒருவாறு சொல்லி முடித்தார் என் சகோதரியின் கணவர்.

நான் திடுக்கிட்டேன். அந்த மிராசுதார் பைத்தியம்! அவரது விரோதி கூட அவ்விதம் சொல்லமாட்டாரே! பின், அவர் எந்த வகையைச் சேர்ந்தவர்! இதுவே பெரிய மனோதத்துவ சிக்கலாக எனக்குப்பட்டது.

பின்பு நான் பல்வேறு நாடுகளில் சுற்றிப் பல அறிஞர்களைக் கலந்த பின்னர் இம்மாதிரி மன நிலைக்குக் காரணம் நம் மனச் சூழ்நிலைதான் என்பதை அறிந்தேன். நாம் எதை விரும்புகிறோமோ அதை அடைய மனமும் மூளையும் பாடுபடுகின்றன. அடைய முடியா விட்டால் சில சமயம் அடைந்து விட்டதாகவே நம்மை எண்ணச் செய்கிறது. நாமாக எண்ணிக் கொள்வதல்ல. மனம் செய்யும் வேலை. அதனால்தான் மனக் குரங்கு என்றார்களோ என்னவோ! மனோ தத்துவத்தில் பல புதிர்கள் இம்மாதிரி உண்டு.

இதெல்லாம் நான் அறிந்திருந்த போதிலும் மிராசுதாரின் மன நிலை எனக்கு இன்னும் பெரும் புதிராகத் தோன்றுகிறது. ஆராய்ச்சிகள் ஒரு வழியைக் காட்டிய போதிலும் நான் இன்னும் முழுவதும் அறிய வில்லை என்று ஏதோ ஒன்று என்னுள் சொல்லிக் கொண்டிருக்கிறது!" என்று நண்பர் சங்கரன் சொல்லி முடித்தார்.

வானம் கறுத்து மழை வரும் போல் இருந்தது. மௌனமாக மிராசுதாரின் நினைவிலேயே நானும் நண்பரும் வீடு திரும்பினோம்.

புகழ் பூத்த அமெரிக்கர்

அமெரிக்க அரசாங்கம் ஜியார்ஜ் ஈஸ்ட்மனைத் தாங்கிய தபால் தலையை அவரது நூறுவது பிறந்த நாளாகிய இந்த ஜூலை 12-ம் தேதி வெளியிட்டுப் புது கௌரவத்தைப் பெற்றது. இன்று போட்டோ படப்பிடிப்புக் கலை நம் வாழ்வில் நிரந்தர ஸ்தானம் பெற்றுவிட்டது. கல்யாணம், திருவிழா, யுத்தம்—எதுவாயினும் போட்டோவில் பார்த்தால்தான் மனம் பூரணத் திருப்தி யடைகிறது. நம் உடலுக்குள் என்ன கோளாறு இருக்கிறது என்று எக்ஸ்ரே மூலம் கண்டு பிடிக்க முடிகிறது என்றால் அது போட்டோக் கலையின் அபாரமான வளர்ச்சியைத்தான் காட்டுகிறது.




இவ்வளவு முன்னேற்றத்துக்கும் காரண புருஷர் ஜியார்ஜ் ஈஸ்ட்மன். எழுபது ஆண்டுகளுக்கு முன் போட்டோ எடுப்பது மிகவும் சிரம சாத்தியமான காரியமாக இருந்தது. கண்ணாடி பிளேட்டுகளில் ஏராளமான உபகரணங்களின் உதவியினால் நிறையப் பொருட் செலவு செய்து எடுக்க வேண்டியிருந்தது. இவை யெல்லாம் மாற்றி பிலிமில், காமிராவினால் போட்டோ மிக மிகக் குறைந்த செலவில் எடுக்க முடியும் என்று காண்பித்தவர் ஈஸ்ட்மன். ஆம், காமிராவையும் பிலிமையும் கண்டு பிடித்து, அந்தக் காமிராவுக்கு 'கொடாக்' என்று நாமகரணமும் செய்தார். பிறகு பல்லாண்டுகள் போட்டோக் கலையிலேயே செலவழித்து இன்னும் பலப்பல நூதன முறைகளைக் கண்டு பிடித்தார். இதனால் ஈஸ்ட்மன் பெரும் புகழும் பெரும் செல்வமும் பெற்றார். தாம் பெற்ற பொருளில் பெருந்தொகையைப் பல தர்ம ஸ்தாபனங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் கோடிக் கணக்கில் வழங்கி, வள்ளல் என்ற புகழ் பெற்றார்.

இப்படிப் புகழ் பூத்த அமெரிக்கரான ஜியார்ஜ் ஈஸ்ட்மனை அந்த நாட்டு அரசாங்கம் தபால் தலையில் வெளியிட்டுக் கௌரவிக்கிறது! இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் நூறாண்டு பூர்த்தி செய்திருப்பார். அவரது நூறுவது பிறந்த தினத்தை ஓர் அரசாங்கம் இதைவிட எப்படிக் கௌரவிக்க முடியும்?



"சிங்க மார்க்"
பட்டாஸ், கம்பி மத்தாப்பு
மற்றும் எல்லா தினுசுகளும்
மிகவும் பிரசித்த மானவை.
அனுபவம் மிகுந்த தேர்ச்சியாளர்
களால் உயர்தரமாக உத்திரவாதத்
துடன் தயார் செய்யப் படுகிறது.
LION BRAND
TRADE MARK
National Fire Works Factory
SIVAKASI (S.I)



4. எனக்கு வேண்டாம்!

அப்பொழுது விடுமுறை நாட்கள். பள்ளிக்கூடங்கள் யாவும் மூடியிருந்தன. சிறுவர்கள் காலையிலும் மாலையிலும் கடற்கரைக்கு வந்து குதூகலமாக விளையாடிவிட்டுப் போவது வழக்கம்.

அப்படித்தான் அன்று காலையும் அந்தச் சிறுவர்கள் மணல் வீடு கட்டிக் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பெரிய அலை வந்து அவர்கள் வீட்டைக் கலைத்து விட்டுச் சென்றது. ஆயினும் தன் விஷமத்துக்குப் பயனாகக் கடல், முத்தை விட்டுச் சென்றது.

தங்கள் மணல் வீட்டை இந்த அலை கலைத்து விட்டதே என்று வருத்தப்பட்ட சிறுவர்கள் கடல் முத்தைக் கண்டபோது சந்தோஷமே அடைந்தார்கள். எல்லோரும் பாய்ந்து விழுந்து அதை எடுக்கலானார்கள். ஆனால் அது ஒருவன் கையில் தான் அகப்பட்டது!

சற்றுத் தூரத்திலிருந்து இவை யாவும் கவனித்துக் கொண்டே வந்தான் கந்தன். சிறுவர்கள் சந்தோஷமாக விளையாடுவதைக் கண்டபோது அவன் உள்ளமும் குதூகலம் அடைந்தது. ஆனால் அலை அந்த முத்தை விட்டுச் சென்றது என்பதை அறிந்த போது அவன் முகம் அப்படியே வாடி விட்டது. 'அடாடா! இந்த முத்து யாரையுமே சந்தோஷமாக இருக்க விடாது போலிருக்கிறதே! சந்தோஷம், மகிழ்ச்சி, ஒற்றுமை முதலிய குணங்களைக் கண்டால் இதற்குப் பிடிக்காது போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான் கந்தன்.

அவன் எண்ணியது போலவே, அந்தச் சிறுவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது. சச்சரவு அந்த முத்தின் காரணமாக ஏற்படலாயிற்று. அந்தச் சமயத்தில் கந்தன் அவர்கள் அருகில் போய்ச் சேர்ந்தான்.

"ஏனப்பா! இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்? என்ன நடந்து விட்டது?" என்று கேட்டான் கந்தன்.

"கடலிலிருந்து ஒரு பொருள் வந்தால், அதை முதலில் யார் எடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தானே சொந்தம்?" என்று கேட்டான் ஒருவன்.

"யார் முதலில் பார்க்கிறார்களோ அவர்களுக்குச் சொந்தமா, இல்லையா?" என்று இன்னொருவன் கேட்டான்.

மற்றவன் மற்றொரு கேள்வி கேட்டான். இப்படி அந்த முத்து யாருக்குச் சொந்தம் என்பது பற்றித்தான் சச்சரவு என்பதைத் தெரிந்து கொண்டான் கந்தன்.

"அந்தப் பொருள் இன்னது என்று காண்பிக்காமலே இப்படிப் பேசுகிறீர்களே!" என்று கூறினான் கந்தன்.

எந்தச் சிறுவன் கையில் முத்தை வைத்திருந்தானோ அவன் காண்பித்தான்.

"எங்கே இப்படிக் கொடு!" என்றான் கந்தன். அவன் தயங்கினான். மற்றச் சிறுவர்கள் "கொடு, கொடு" என்றார்கள். பிறகுதான் அவன் கொடுத்தான். முத்தைக் கந்தன் கையில் வாங்கி வைத்துக் கொண்டான். மேலும் கீழும் பார்த்தான் ஒரு நிமிஷம். அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது!

"என்ன ஐயா! சிரிக்கிறே?" என்று கேட்டார்கள் சிறுவர்கள்.

"இந்த முத்தைப் பற்றிய விஷயத்தைச் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ, நம்ப மாட்டீர்களோ என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது!" என்றான் கந்தன்.

சிறுவர்கள், "சொல், ஐயா, சொல்!" என்று ஆவலுடன் கேட்கலானார்கள்.

சற்று முன் தான் கனவில் கண்ட நிகழ்ச்சியைக் காலும் கையும் வைத்துக் கதை

யாகச் சொன்னான். கடைசியில், "இந்த முத்து எங்கே யார் கையில் அகப்படுகிறதோ, அவர்கள் மனக நிம்மதியிழந்துவிடும், சச்சரவு உண்டாகும், பூசல் உண்டாகும், புயலே உண்டாகும். இப்படிப்பட்ட முத்து இது. யாருக்கு வேண்டுமோ அவர்கள் இதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் கந்தன்.

முத்தைக் கையில் முதலில் எடுத்தவன் "எனக்கு வேண்டாம்" என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறிவிட்டான்.

'நான்தான் முதலில் பார்த்தேன்' என்று சொல்லிக் கொண்டவன், "எனக்கு வேண்டாம்!" என்று கூறினான்.

மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக "எனக்கு வேண்டாம்; எனக்கு வேண்டாம்" என்று கூறி விட்டார்கள்.

"இப்படி நீங்கள் எல்லோரும் 'எனக்கு வேண்டாம்!' 'எனக்கு வேண்டாம்!' என்றால் எனக்கு மட்டும் வேண்டுமா என்ன? எனக்குந்தான் வேண்டாம்!" என்று கூறிக் கொண்டு கந்தன் அந்த முத்தைக் கடலில் வீசி எறிந்தான்.

அப்போது சிறுவர்கள் ஓர் மகிழ்ச்சிப் பேர் ஆரவாரம் செய்தார்கள். பிறகு தங்கள் வீட்டை நோக்கி ஓடினார்கள்.

கொஞ்ச நேரம் வரை கடற்கரையோரமாக நடந்து சென்றான் கந்தன். பிறகு அவனும் தன் குடிசையை நோக்கி மெல்ல நடந்து சென்றான்.

அங்கே தன் குடிசை வாசலில் இருவர் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தான். அவர்கள் வேறு யாருமில்லை. முதன் முதலில் கடல் முத்தைக் கந்தன் கண்டெடுத்தபோது, 'ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்கூட இப்படிப்பட்ட முத்துக்குக் கிடைக்கும்' என்று சொன்னவர்கள்தான் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் வள்ளியிடம் ஏதோ கையை ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வள்ளி அவ்வளவு உற்சாகமாக அவர்களுக்குப் பதில் சொல்லுவதாக அவனுக்குத் தோன்றவில்லை.


ஆனால் வந்தவர்களோ, அவர்களுக்கு உற்சாகமூட்டும் மொழிகளை அள்ளி அள்ளி பொழிந்து கொண்டிருந்தார்கள்.

இதைக் கேட்க வள்ளிக்கு நெஞ்சம் குமுறிக் கொண்டு வந்தது. அழுது விடுவாள் போலிருந்தது. வள்ளியின் முக பாவம் சற்றுத் தூரத்திலேயே கண்டான். அவன் உள்ளத்தில் திகில் ஏற்பட்டது.

கந்தனால் பொறுக்க முடியவில்லை. விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். வள்ளி கந்தனைக் கண்டதும் 'ஓ' என்று வாய் விட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

கந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன வள்ளி! ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று கேட்டான். (தொடரும்)

இருளே ஓடு!





MOON
மார்க்
தீப்பெட்டிகள்
MOON
LAKSHIMI MATCH WORKS
SIVAKASI
MOON மார்க் தீப்பெட்டிகள்
குச்சிகள் வெண்மையாகவும்,
எண்ணிக்கை சரியாகவும்,
சேதாரமில்லாமலும். மழை
காலத்திற்கு உத்திரவாதம
உள்ளதாகவும் இருக்கின்றது.
லக்ஷ்மி மேச் ஒர்க்ஸ்
த. பெ. நெ. 44 சிவகாசி போன்: 56
மதராஸ் சேல்ஸ் டிப்போ: 34, பந்தர் தெரு, மதராஸ் - 1
டிப்போ மானேஜர்: ஸ்ரீ பி. நளச்சக்கரவர்த்தி செட்டியார்

வீட்டுத் தொழில் நாட்டு நலம்

சென்ற ஜூன் மாதக் கடைசி வாரத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர், சிவகாசி ஆகிய சிறிய பட்டணங்களுக்கும், அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கேயெல்லாம் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டேன்.

மக்கள் முழங்காலைக் கட்டிக் கொண்டு மூலையில் உட்கார்ந்திராமல், வெற்றிலை பாக்கைப் போட்டுக் குதப்பிக் கொண்டு திண்ணை வேதாந்தம் பேசாமல் பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். பெண்களும், ஆண்களும், வயது சென்றவர்களும், சிறுவர்களும் கூட மலர்ந்த முகத்துடன் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கூரை வீட்டிலும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஓட்டு வீட்டிலும், மேடை வீட்டிலும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். காலை வேளையில் தலையில் எதையோ மூட்டை மூட்டையாகக் கட்டிச் சுமந்து கொண்டு சாலை ஓரங்களில் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தார்கள். டென்னிஸ் பந்தாட்ட மட்டைக்கு மாட்டியிருக்கும் சட்டம் போலப் பல சட்டங்களைச் சுமந்த வண்ணம் போய்க் கொண்டிருந்தார்கள்.



பகீரதன்

இதர நகரங்களிலும் கிராமங்களிலும் காணும் சோகக் காட்சியை, பரிதாபக் கோலத்தை, அங்கு காண முடியவில்லை.

வீட்டு வாசல்களிலும், பஸ் நிலையங்களிலும், நாலு பேர் கூடி நிற்கும் நாற்சந்திகளிலும், கடை வீதிகளிலும் உழைக்கும் திறமுடைய உடல் படைத்தவர்கள் கையேந்தி நிற்கும் கோலத்தைக் காண முடியவில்லை; பிச்சை எடுத்து வயிறு பிழைக்கும் மக்களைப் பார்க்க முடியவில்லை.

“என்ன, பிச்சை எடுத்துப் பிழைப்பவர்களையே காண முடியவில்லையா!” என்று கேட்டு வியக்கத் தோன்றுகிறதல்லவா!

ஆம்; உண்மையிலே நானும் அங்கு இருந்த நாட்களில் அதை நினைத்து வியந்து மகிழ்ந்து போனேன். இந்த மாதிரி நம் நாடு பூராவும் இருக்கக் கூடாதா என்று எண்ணினேன்.

பிச்சைக்காரர்கள் கூட இல்லாதபடி அப்படி என்ன அந்த ஊர்களில் சுபிட்சம் கொழிக்கிறது! மக்கள் சுறுசுறுப்பாக அப்படி எந்த வேலையில் ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள்! ராமநாதபுரம் மாவட்டம் வானம் பார்த்த சீமையாயிற்றே! மழை பெய்யாவிட்டால் தண்ணீர் கூடக் கிடைக்காதே! அந்த மாதிரி வறண்ட ஊரில் மக்களுக்கு என்ன வேலை இருக்கப் போகிறது என்றெல்லாம் எண்ணத் தோன்றலாம்.

ராமநாதபுரம் ஜில்லா என்னவோ வறண்ட பிரதேசம்தான். சாத்தூர், சிவகாசி முதலிய இடங்களில் பூமியில் உள்ள பாறைகளை வெடி வைத்துப் பிளந்து பாதாளத்திலிருந்துதான் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். சிவகாசி பக்கங்களிலாவது பாதகமில்லை. சாத்தூர்ப் பக்கங்களில் உள்ள தண்ணீர் உப்புத் தண்ணீர். அதில் குளித்தால் உடலெல்லாம் 'பிசுக்' 'பிசுக்' கென்று ஒட்டிக் கொள்ளுகிறது. அரிசியும் இதர தானியங்களும் அங்கெல்லாம் அதிகமாக விளைவது இல்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வெறும் பொட்டலாகத்தான் இருக்கிறது.

“வேற்றூர் அரிசியும்
விறகும் இருந்தால்
சாத்தூர் நல்ல
ஊர்தானே!”

என்று கூட அந்த ஊரைப் பற்றி யாரோ பாடியிருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பக்கத்தில் உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி அருமையான வீட்டுத் தொழில் ஒன்று நடந்து வருகிறது. மிக நல்ல முறையில் நடந்து வருகிறது. அந்தத் தொழில் மட்டும் இல்லையானால் சாத்தூர், சிவகாசி ஆகிய சிறிய நகரங்களிலும், அவற்றைச் சுற்றிலும் உள்ள பல கிராமங்களிலும் மக்களே வசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

அது என்ன வீட்டுத் தொழில்! வறண்டு போயிருக்கும் ஜில்லாவை வளமாக்கும் வீட்டுத் தொழில்! என்று கேட்கிறீர்களா! கேளுங்கள்:

தீப்பெட்டி வீட்டுத் தொழில்!

மனிதன் தீ இல்லாமல் வாழ முடியாது. அதிலும் தற்போது ஒவ்வொருவர் கையிலும் ஒரு தீப்பெட்டி இருப்பது சாதாரணமாக நாம் காணும் காட்சியாகி விட்டது. இந்தத் தீப்பெட்டித் தொழில் ராமநாதபுரம் மாவட்டத்தில் சென்ற மூப்பதாண்டுகளாக மிகச் சிறந்த முறையில் நடந்து வரும் வீட்டுத் தொழில் என்பதை நேயர்கள் பலர் தெரிந்திருக்கலாம். இல்லையேல் அதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

வளர்ப்போம் காப்போம்



தீப்பெட்டி சாதாரணமாக வீட்டுத் தொழிலில் தயாராகிறது என்றும் யாருக்கும் ஆச்சரியமாக இருக்கும். அழகான அதன் அமைப்பு, ஒழுங்காக வரிசைக் கிரமமாக அணி அணியாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தீக்குச்சிகளின் உருவம் இவைகளைப் பார்த்தால் யாருக்கும் வியப்பாகத்தான் இருக்கும்.

தீப்பெட்டி வீட்டுத் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வரும் மக்கள் அந்த வட்டாரத்தில் சுமார் ஒரு லட்சம் பேராவது இருப்பார்கள்! இவர்களில் பாதிப் பேர் பெண்மணிகள்.

பெண்மணிகள் குடும்ப வேலை செய்த நேரம் போக எஞ்சியுள்ள நேரத்தில் இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். சிறுவர்கள் விளையாட்டாகவே இந்த வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஓடியாடி வேலை செய்ய முடியாத வயோதிகர்கள் இருந்த இடத்தில் இருந்தபடி இந்த வேலையைச் செய்து வருகிறார்கள்.

சாத்தூர் தென் இந்தியர் சுதேசி தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கத்தின் காரியதரிசியின் உதவியால் தீப்பெட்டித் தொழில் நடந்து வரும் பல வீடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. தீப்பெட்டித் தொழிலைப் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

தீப்பெட்டி உருவாக மக்கள் எந்தெந்த வேலைகளைச் செய்து வருகிறார்கள்! அவர்களுடைய முக்கிய அலுவல்கள் என்ன!

தீப்பெட்டியின் மேல் பெட்டி - அடிப்பெட்டி செய்தல், கட்டையில் குச்சி அடுக்குதல், மட்டம் தட்டுதல், மெழுகு முக்குதல், மருந்து முக்குதல், மருந்து முக்கப்பட்ட உலர்ந்த குச்சிகளைப் பெட்டியில் எண்ணி அடைத்தல், பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் தீக்குச்சியைக் கிழிப்பதற்காக மருந்து பூசுதல், சர்க்கார் முத்திரை யிடப்பட்ட வரித்தாள் ஒட்டுதல், கடைசியில் தீப்பெட்டிகளை டசனுகவும் குரோஸாகவும் அடுக்கிக் கட்டுதல், இந்த வேலைகளையெல்லாம் இயந்திர சாதனங்கள் இல்லாமல் மக்கள் வேலை செய்து வருகிறார்கள்.

இந்த வேலைகளில் தீப் பெட்டியின் மேல் பெட்டி, அடிப் பெட்டி ஒட்டுதல், தீக்குச்சி அடுக்குதல் ஆகிய வேலைகளில் எண்ணற்ற மக்கள் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர். சாத்தூர், சிவகாசி முதலிய பெரிய ஊர்களிலும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இந்த வேலை வீட்டுத் தொழிலாக நடைபெறுகிறது.

இந்தத் தீப் பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏராளமான வீடுகளுக்குச் சென்று பார்க்கும்



ஸ்ரீ ஏ. சண்முக நாடார்
(சாத்தூர் தீப்பெட்டிச் சங்கத் தலைவர்)

வாய்ப்பு கிடைத்தது. மேல் பெட்டி, அடிப் பெட்டி ஒட்டுதல், தீக்குச்சி அடுக்குதல் முதலிய வைகளைப் பார்த்து வியக்காமல் இருக்கமுடியாது.

சுமார் நாலரை அங்குல நீளமும், இரண்டரை அங்குல அகலமும் உள்ள மர அட்டைகள் இருக்கின்றன. அதில் தீப் பெட்டியின் அமைப்புக்கு ஏற்றபடி நாலு கோடுகள் இருக்கின்றன. அந்தக் கோடுகள் மேல் வளைத்து வளைத்து மடித்தால் மேல் பெட்டி ஆகி விடுகிறது. அப்படியே நீலக் காகிதத்தை ஒட்டி உலர வைத்து விடுகிறார்கள். உள் பெட்டிக்கு இரண்டு அட்டைகள் அடி பாகத்துக்கும், பக்கத்துக்குமாக இருக்கின்றன. இவற்றையும் முன்போலவே மடித்து ஓரங்களில் நீலக் காகிதத்தை ஒட்டி உலர வைத்து விடுகிறார்கள். இவைகள் எல்லாம் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் நிகழ்ந்து விடுகின்றன. ஏதோ மந்திர தந்திரங்களில் காரியங்கள் நடப்பது போன்ற பிரமை ஏற்பட்டுத் திகைக்க வைக்கிறது.

இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் பெட்டி ஒட்டும் அழகும் குச்சி அடுக்கும் ஒழுங்கும் நேரே பார்த்து அனுபவிக்க வேண்டிய அற்புதம். பெட்டிகள் ஒட்டும் போதும் குச்சிகள் அடுக்கும் போதும் அவர்கள் விரல்கள் தான் எத்தனை வேகமாக வேலை செய்கின்றன!

ஒரு நாளில் ஒருவர் சுமார் ஐயாயிரம் தீப் பெட்டிகளை ஒட்டி விடுகிறார் என்றால் எவ்வளவு வேகமாக அந்த வேலையைச் செய்கிறார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.


தீக்குச்சிகள் அடுக்குவது ஓர் அற்புதக் கலை. பார்த்து அதிசயப்பட வேண்டிய காட்சி. அங்குள்ள ஒவ்வொரு வீட்டிலும், வீதிகளிலும் காணும் சர்வ சாதாரணக் காட்சி. இந்தத் தொழிலில் ஈடுபடாத வீடே இல்லை என்று சொல்லலாம். வீட்டுக்கு வீடு வாசற்படி எப்படி நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் ஒவ்வொரு வீட்டிலும் குச்சி அடுக்கும் குடிசைத் தொழில் நடப்பது.

குச்சி அடுக்கும் அற்புதம்

சுமார் இரண்டடி அகலமும் இரண்டடி உயரமும் நாலு பக்கமும் சட்டங்களுடனும் கூடிய 'பிரேம்' இருக்கிறது. அதன் நடுவில் சக்கைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சக்கையிலும் 60 காடிகள் அறுத்திருக்கிறார்கள். அது போல் 51 சக்கைகள் கொண்டது ஒரு பிரேம். ஒரு பிரேமில் சுமார் 3,000 தீக் குச்சிகள் வரை செருகலாம்.

ஒவ்வொரு சக்கையில் உள்ள ஒவ்வொரு பள்ளத்திலும் அதாவது அறுத்து வைத்துள்ள காடிகளில் ஒவ்வொரு குச்சியாக எடுத்து வைக்கிறார்கள். இப்படி மூவாயிரம் குச்சிகளையும் எடுத்துச் செருகினால் ஒரு 'பிரேம்' குச்சி அடுக்கியதாகிறது. மூவாயிரம் குச்சிகளை ஒவ்வொன்றாக எடுத்து வைப்பதை நினைத்துப் பார்த்தால் அது பெரிய தொல்லையாகத் தோன்றும். நேரில் பார்த்தால் அப்படி நினைக்க முடியாது. ஏதோ கண்கட்டி வித்தை நடப்பது போலத் தோன்றுகிறது. சுமார் பதினைந்து நிமிடங்களுக்குள் மூவாயிரம் குச்சிகளையும் அடுக்கி விடுகிறார்கள்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல் ஒன்றரை ரூபாய் வரையில் சம்பாதித்து விடுகிறார்கள். அதுவும் ஓய்வு நேரத் தொழிலாகக் கொண்டே சம்பாதித்துவருகிறார்கள். நாளெல்லாம் இதே தொழிலில் ஈடுபட்டு உழைத்து இன்னும் சற்று அதிகமாகச் சம்பாதித்து வருகிறவர்களும் இருக்கிறார்கள்.



ஸ்ரீ எஸ். எஸ். பி. சண்முகம்
(சாத்தூர் தீப்பெட்டிச் சங்கக் காரியதரிசி)

வீடுகளில் நடக்கும் இந்தத் தொழில்களில் தயாராகும் தீப்பெட்டிகளையும், 'பிரேம்' களில் அடுக்கிய தீக்குச்சிகளையும் சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி முதலிய இடங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைக்குக் கொண்டு போகிறார்கள். இந்தக் காட்சிகளைத்தான் காலை வேளைகளில் அந்தப் பக்கத்துச் சாலைகளில் காண முடிகிறது.

தீப்பெட்டித்தொழிற்சாலை என்றவுடன் பூதாகாரமாகப் புகையைக் கக்கிக் கொண்டிருக்கும் பெரிய இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகள்தான் மனத்தில் தோன்றும். பெயர் தான் தொழிற்சாலை என்று பெரிதாக இருக்கிறதே ஒழியத் தொழிற்சாலை ஒன்றிலும் இயந்திரங்கள் இல்லை. அங்கு


LION
BRAND
TOY PAPER CAPS
குழந்தைகளுக்கு அபாயமில்லாததும்
கழிவு இல்லாமல் நல்ல சப்தத்துடன்
வெடிக்கக் கூடியதுமான "சிங்க மார்க்"
கேப்களையே வாங்கி உபயோகியுங்கள்.
"சிங்க மார்க்" கேப்புகள்
AMORCES
TOY PAPER CAPS
LION BRAND
MADE IN INDIA
THE NATIONAL PAPER-CAPS
FACTORY, SIVAKASI-(S.I)

தீப்பெட்டி உருவாவதற்கான இதர தொழில்கள் நடக்கின்றன. நூற்றுக் கணக்கான பெண்மணிகளும் ஆண்களும் கல்யாண வீட்டில் உட்கார்ந்து காரியம் செய்வது போல 'ஜாம்' 'ஜாம்' என்று உற்சாகமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தீப்பெட்டித் தொழிற்சாலை

தொழிற்சாலைகளில் முதலில் குச்சி மட்டம் தட்டுகிறார்கள். அதாவது வெளியிலிருந்து பிரேமில் குச்சி அடுக்கி வருகிறதல்லவா! அவைகள் ஒழுங்காகச் சமனாக இருப்பதில்லை. இதை மட்டம் தட்டுகிறார்கள். அச்சுத் தொழிற்சாலையில் கோத்த எழுத்துக்களைச் சமமான இரும்பு மேஜைமீது வைத்து மரச் சுத்தியினால் தட்டி சமன் செய்வது போல, குச்சி பிரேம்களையும் இரும்பு மேஜை மீது வைத்து மரப் பலகையினால் லேசாகத் தட்டிச் சமன் செய்கிறார்கள்.

சமன் செய்த அந்தக் குச்சிகளுக்கு மெழுகு போடுகிறார்கள். தீப் பெட்டியில் தீட்டியவுடன் தீக்குச்சியில் உடனே தீப் பற்றுவதற்காக மெழுகு போட வேண்டியது அவசியமாகிறது.

சாதாரண அடுப்பில் இரண்டு தோசைக் கல்கள் போல் பெரிய இரும்புத் தகடுகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு தட்டில் கால் அங்குல உயரத்துக்கு மெழுகு உருகித் தண்ணீராக நிற்கிறது. குச்சி பிரேமை மெழுகு தட்டில் வைத்து, குச்சிகளில் மெழுகு நனையும்படி செய்து எடுக்கிறார்கள். உடனே அருகில் காய்ந்து கொண்டிருக்கும் மற்றொரு இரும்புத் தட்டில் மெழுகு நனைத்த குச்சி பிரேமை வைக்கிறார்கள். 'குபீர்' என்று நெருப்பு உண்டாகிறது. அந்தச் சூட்டில் தீக்குச்சி முழுவதும் மெழுகு ஏறிவிடுகிறது. இவைகள் எல்லாம் மின்னல் வேகத்தில் வெகு வேகமாக நடந்துகொண்டே இருக்கின்றன.

அடுத்தபடியாகத் தீக்குச்சிகளுக்கு மருந்து முக்குவது. அதாவது ஒவ்வொரு தீக்குச்சி முனைகளிலும் குண்டுமணி போல மருந்து இருக்கிறதல்லவா! அந்த மருந்தை 'மெழுகு ஏறிய தீக்குச்சி முனைகளில் வைப்பது.

பொட்டாஸியம் குளோரேட், பாஸ்பரஸ், கந்தகம், அன்டிமனி மாங்கனீஸ், வஜ்ஜிரம், கண்ணாடித் தூள் முதலிய மருந்துகளின் கலவையைத் தீப் பெட்டிக்கு உபயோகிக்கிறார்கள்.

முதலில் வஜ்ஜிரத்தில் தண்ணீர் ஊற்றிக் காய்ச்சுகிறார்கள். அது பதமானதும் குறிப்பிட்ட அளவில் மேலே கண்ட மருந்துகளைப் போட்டு இட்டிலிக்கு மாவு அரைப்பது போல ஆட்டுக் கல்லில் போட்டுச் சற்று நேரம் குடைகிறார்கள். இது தான் தீக்குச்சி நுனிக்கு வேண்டிய கலவை மருந்து.

இந்த மருந்தை ஓரத்தில் விளிம்பு உள்ள ஒரு மேஜை மீது ஊற்றி மட்டப் பலகையால் சமனாகப் பரப்பி விடுகிறார்கள். அதில் தீக்குச்சி முனைக்கு எவ்வளவு உயரம் மருந்து வேண்டுமோ அவ்வளவு உயரம்தான் மருந்து இருக்கிறது. மெழுகு முக்கிய தீக் குச்சி பிரேமை அதில் வைத்து உடனே எடுத்து விடுகிறார்கள். ஒவ்வொரு குச்சி முனையிலும் குண்டு குண்டாக மருந்து ஒட்டிக் கொள்கிறது. மருந்து முக்கிய தீக்குச்சி பிரேமைத் தலைகீழாகக் கவிழ்த்து அதற்கான அலமாரியில் வைத்து விடுகிறார்கள். சுமார் இரண்டு மணி நேரத்துக்குள் மருந்து உலர்ந்து நெருப்புக் குச்சி தயாராகி விடுகிறது.



ஸ்ரீ பி. அய்ய நாடார்
(சிவகாசி தீப்பெட்டிச் சங்கத் தலைவர்)

இதற்கு அடுத்த நிலைதான் ஆச்சரியமான நிலை. பிரேமில் உள்ள குச்சிகளை எடுத்துத் தீப் பெட்டிக்குள் எண்ணி அடுக்குவது.

அனேகமாக இந்தத் தொழிலில் பெண்கள் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். குடும்பம் குடும்பமாகக் கிராமங்களில் இருந்து வந்து வேலை செய்கிறார்கள். தாய், மகள், மருமகள், நாத்தனார், மாமியார், ஓர்ப்படியார், தமக்கையார் என்று சேர்ந்து வந்து வேலை செய்வதால் தைரியமாகவும் சங்கோசமில்லாமலும் அவர்களால் வேலை செய்ய முடிகிறது. வரிசை வரிசையாக அவர்கள் அமர்ந்து வாய் பேசாமல் குச்சிகளைப் பெட்டிக்குள் அடுக்கும் காட்சி அபூர்வமான காட்சி. நூற்றுக் கணக்கான பெண்மணிகள் ஓர் இடத்தில் சத்தமில்லாமல் வேலை செய்கிறார்கள் என்றால் ஆச்சரியப்படவேண்டிய விஷயம் அல்லவா! கை சொடுக்கும் நேரத்துக்குள் தீக்குச்சி பிரேமில் இருந்து தீக் குச்சிகளை எடுத்து, எடுத்த குச்சிகளை



சிம்கோ ஸ்ரீ ஆறுமுகசாமி

'சட்' டென்று நெஞ்சில் தட்டிச் சமன் செய்துகொண்டு, உள் பெட்டிக்குள் வைத்து அதை எடுத்து மேல் பெட்டிக்குள் செருகி விடுகிறார்கள்.

சாதாரணமாக அதைப் பார்க்கும்போது குச்சிகளை எண்ணி அடுக்குவது போலவே தோன்றவில்லை. பிரேமில் இருந்து குச்சிகளை எடுக்கும் போதே ஒரு கைக்கு இத்தனை குச்சிகள் என்று கணக்காக எடுத்து விடுகிறார்கள். இத்தனை கைகள் வைத்தால் நாற்பது குச்சி என்று கணக்காகி விடுகிறது. நான் பல தீப்பெட்டிகளை எடுத்து எண்ணிப் பார்த்தேன்; சரியாகவே இருந்தது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவு பெட்டிக்குள் தீக்குச்சிகளை அடுக்கியவுடன் அதற்கான பரிசோதகரிடம் எடுத்துப் போகிறார்கள். அவர் அதில் உள்ள ஏதாவது ஒரு பெட்டியை எடுத்து எண்ணிப் பார்க்கிறார்; குச்சிகள் குறைவாக இருந்தால் அந்தப் பெண் அடுக்கிய அத்தனை பெட்டிகளையும் பிரித்துக் கொட்டி விடுகிறார்கள். இதனால் தீப்பெட்டிகளில் இரண்டு குச்சிகள் அதிகமிருந்தாலும் இருக்கின்றனவே ஒழியக் குறைவதே இல்லை. தீப்பெட்டிக்குள் குறைவாகத் தீக்குச்சிகளை அடுக்கித் தாங்கள் செய்த வேலையையும் பெற வேண்டிய கூலியையும் விரயமாக்கிக் கொள்வார்களா என்ன!



ஸ்ரீ எம். ஏ. சி. செண்பகலிங்கம்
(சாத்தூர் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கத்து உப தலைவர்)

இப்படியாகக் குச்சிகள் சரி பார்க்கப்பட்ட தீப் பெட்டிகள் கோணல் மாணலாக இல்லாமல் சமன் செய்வதற்காக ஒரு சட்டத்துக்குள் அடுக்கித் தட்டி ஒழுங்கு செய்யப்படுகின்றன. பிறகு அந்தத் தீப்பெட்டிகளுக்கு இரு பக்கங்களிலும் தீக்குச்சிகளைத் தீட்டிப் பற்ற வைப்பதற்கு வேண்டிய பக்க மருந்து பூசப்படுகிறது.

அன்டிமனி சல்பேட், டைக்ரோமேட், சிவப்புசயம், வஜ்ஜிரம், கண்ணாடித் தூள் முதலிய மருந்துகளை ஆட்டுக் கல்லில் போட்டு நன்றாகக் குடைந்து அடுப்பில் வைத்து இளஞ் சூட்டில் இறக்கி வைத்துக் கொள்கிறார்கள். சட்டத்தில் சமன் செய்யப்பட்டிருக்கும் தீப் பெட்டிகளுக்கு இரண்டு பக்கங்களுக்கும் 'பிரஷ்'ஷால் வேண்டிய அளவு பூசுகிறார்கள். ஒவ்வொரு தீப் பெட்டிக்கும் வேண்டிய அளவு ஒழுங்காகச் சித்திரம் எழுதுவது போல் பூசப்படுகிறது. ஒரு சில மணி நேரத்துக்குள் அவை உலர்ந்து விடுகின்றன.

பிறகு அந்தத் தீப்பெட்டிகளுக்குச் சர்க்கார்வரிக் காகிதத்தை ஒட்டி, அதற்கு மேல் தீப் பெட்டிகள் எந்தத் தொழிற்சாலையில் செய்யப்படுகிறதோ அதற்கு உரிய லேபிள் ஒட்டப் படுகிறது. அப்படி ஒட்டிய தீப்பெட்டிகளை டஜனாகவும் குரோஸாகவும் கட்டி, மழையினால் கெட்டுப் போக முடியாத தார் பூசிய காகிதங்களில் சுத்தமாகக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள்.

தீப்பெட்டித் தொழிலும் சர்க்காரும்

தீப்பெட்டித் தொழிற்சாலைகளைத் தனிப்பட்டவர்கள் நடத்தினாலும் தொழிற்சாலையின் பூட்டும் சாவியும் சர்க்காரிடம்தான் இருக்கின்றன. தொழிற்சாலை வாசலில் மத்திய சர்க்கார் சுங்க இலாகா போலீஸ்காரர் ஒருவர் நிற்கிறார். உள்ளே சுங்க இலாகா சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அமர்ந்து தொழிற் சாலையில் நடந்து வரும் ஒவ்வொரு காரியத்தையும் கவனமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

தீப்பெட்டிக்குள் குச்சிகள் சரியாக எண்ணி அடுக்கப் படுகின்றனவா! ஒவ்வொரு தீப் பெட்டியிலும் சர்க்காரின் வரித்தாள்கள் ஒட்டப் படுகின்றனவா! ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு நாளைக்கு எத்தனை குரோஸ் தீப்பெட்டிகள் தயாராகின்றன என்ற கணக்குகளை எல்லாம் சப் இன்ஸ்பெக்டர் கண்காணித்து வருகிறார். மாலையில் தொழிற்சாலை வேலை முடிந்ததும் தொழிற்சாலையைப் பூட்டிச் சீல் வைத்துக் கொள்கிறார். மறுநாள் காலையில் சரியான நேரத்துக்குத் தொழிற் சாலையைத் திறந்து விட்டு விடுகிறார்.



ஸ்ரீ வி. ராஜாமணி நாடார்
(சாத்தூர் தீப்பெட்டிச் சங்கத் துணைக் காரியதரிசி)

சர்க்கார் வரித்தாள் ஒட்டாத தீப் பெட்டிகளையோ, தனித் தீக்குச்சிகளையோ தொழிற்சாலையில் இருந்து யாரும் வெளியில் எடுத்துப் போக முடியாது. ஒடிந்தும் சிதைந்தும் வீணாகப் போகும் தீக்குச்சிகள் தொழிற்சாலைக்குள்ளேயே எரிக்கப்பட்டுவருகின்றன. இதைக் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான் தொழிற்சாலை வாசலில் உள்ள மத்திய சர்க்கார் சுங்க இலாகா போலீஸ்காரரின் முக்கிய வேலை.

இந்த வீட்டுத் தொழில் மூலமாக இந்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்கார்களுக்குமாக ஆண்டு ஒன்றுக்கு ஐந்து கோடி ரூபாய் வருமானம் வருகிறதாம். 1953ம் ஆண்டில்மட்டும் 40 குச்சிகள் உள்ள 1,15,00,000 குரோஸ் தீப் பெட்டிகளைத் தயாரித்திருக்கிறார்களாம். இது இல்

லாமல் 60 குச்சிகள் கொண்ட தீப் பெட்டிகள் வேறு உற்பத்தி செய்திருக்கிறார்களாம்.

இந்த வீட்டுத் தொழில் வளர்ச்சிக்காக இந்திய சர்க்கார் உதவித் தொகை 'ரிபேட்' கொடுக்கிறார்கள். ஆனால் ஆண்டுக்கு ஐந்து லட்சம் குரோஸுக்கு மேல் உற்பத்தி செய்யும் தொழில் ஸ்தாபனத்துக்கு 'ரிபேட்' கொடுப்பதில்லை.

"தீப் பெட்டியை அதிகம் உற்பத்தி செய்வதற்காக எங்களுக்கு இந்தத் தண்டனையா! ஐந்து லட்சத்துக்குக் குறைவாக உற்பத்தி செய்து சர்க்கார் பணத்தைப் பெறுவது எங்களுக்குச் சுலபம்தான். ஆனால் எங்கள் தீப்பெட்டிகளை வாங்கி வரும் மக்களுக்கு நாங்கள் அவர்கள் தேவைக்கு வேண்டிய அளவு கொடுக்க முடியாமல் போய்விடுமே. சர்க்காரின் 'ரிபேட்' தொகையை விட, எங்களுக்கு மக்களுக்குத் தேவையான தீப் பெட்டிகளை அளிப்பதுதான் முக்கியம். இருந்தாலும் சர்க்கார் ஐந்து லட்சம் குரோஸுக்கு அதிகம் உற்பத்தி செய்பவர்களையும் ஊக்குவித்து அவர்களுக்கும் 'ரிபேட்' அளிப்பதுதான் நியாயம்" என்று தீப் பெட்டி உற்பத்தி செய்யும் பிரமுகர் ஒருவர் குறைப்பட்டுக் கொண்டார்.

"ஒரு தீப் பெட்டிக்குச் சர்க்கார் எவ்வளவு வரி போடுகிறார்கள்!"

"அரை அணா தீப்பெட்டிக்குச் சுமார் நாலு தம்படி வரி விதிக்கிறார்கள்."

"அப்படியானால் ஒரு தீப் பெட்டியின் அடக்க விலை இரண்டு தம்பிடிதானா!"

"ஆமாம். அந்த இரண்டு தம்பிடியிலேதான் இத்தனை ஆயிரம் ஏழை எளிய மக்கள் பிழைத்து வருகிறார்கள்."

அடாடா! என்ன அருமையான வீட்டுத் தொழில். ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு வேலையும் கூலியும் கொடுப்பதுடன் சர்க்காருக்கும் அல்லவா நல்ல வருமானம் கொடுக்கிறது!


தினம் தினம் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். அதற்கு எத்தனை எத்தனையோ திட்டங்கள் போடுகிறார்கள். அப்படித் திட்டங்கள் போடுவதற்காகவே ஏராளமாகப் பணத்தை விரயமாக்குகிறார்கள். ஆனால் லட்சக்கணக்கான மக்களுக்குப் பிழைப்புத் தரும் இது போன்ற வீட்டுத் தொழிலுக்குச் சர்க்கார் போதுமான ஆதரவு அளிப்பதில்லை என்று அந்தத் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வருபவர்கள் கூறுகிறார்கள்.

நமது நாட்டுக்குத் தேவையான தீப்பெட்டிகளில் முப்பது சத விகிதத் தீப்பெட்டிகள்தான் குடிசைத் தொழில்கள் மூலம் தயாராகின்றன. மற்ற எழுபது சத விகிதமும் ஏராளமான மூலதனம் போட்டு ஆலைகள் மூலம் தொழில் நடத்தும் வெளி நாட்டுக் கம்பெனி உற்பத்தி செய்கிறது. எழுபது சத விகிதத் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஒரு சில ஆயிரம் தொழிலாளர்கள்தான் வேலை செய்து வருகிறார்கள். அவர்களும் நகரங்களில் வசித்து வருபவர்கள். இயந்திரங்கள் மூலம் தீப் பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் போன்ற பல தொல்லைகள் நிகழ்ந்து வருகின்றன. முப்பது சத விகிதம் உற்பத்தி செய்யும் குடிசைத் தொழில் முறையிலோ பல கிராமங்களில் உள்ள லட்சக் கணக்கான மக்கள் பிழைக்கின்றனர். வேலை நிறுத்தம் போன்ற கொடிய நோய் அங்கெல்லாம் உண்டாக வழியே இல்லை. இந்தத் தீப் பெட்டி வீட்டுத் தொழில் மூலம் சர்க்காருக்குப் பல வழிகளில் லாபம் கிடைக்கிறது.

இவ்வளவு உபயோகமான வீட்டுத் தொழிலுக்குச் சர்க்காரிடமிருந்து போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் கிட்டுவதில்லை யென்ற புகாரையும் கேட்க நேர்ந்தது.

சிவகாசியில் 1,000 குரோஸ் தீப்பெட்டி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலைக்கு 200 குரோஸ் தீப் பெட்டிகள் உற்பத்திக்கு வேண்டிய அளவுதான் பொட்டாஸியம் குளோரேட் என்ற மருந்து கொடுத்திருக்கிறார்கள்.

குளோரேட் என்ற மருந்து மூலம் பல அபாயமான காரியங்களைச் செய்ய வழி உண்டு. வெடிகுண்டு போன்ற அபாய வெடிகளைத் தயாரித்து விபரீதமான செயல்களில் ஈடுபட்டு விடலாம் என்பதற்காக மேற்படி மருந்தை விநியோகிக்க வேண்டிய உரிமையைச் சென்னை சர்க்கார் தங்களிடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


ஸ்ரீ என். ஆர். கே. கே. ராஜரத்தினம்

ஆனால் தீப் பெட்டிக்காக வழங்கும் மருந்துகளை வேறு வழிகளில் செலவு செய்ய முடியாது. அந்த மருந்தை உபயோகித்து எவ்வளவு தீப் பெட்டிகளை உற்பத்தி செய்யலாம் என்பதற்கெல்லாம் சரியான கணக்கு இருக்கிறது. இருந்தும் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வேறு வழியில் பயன்படுத்திவிடுவார்கள் என்று நினைத்து குளோரேட் மருந்தை தாராளமாகக் கொடுப்பதில்லையாம்!

அப்படிச் சர்க்கார் தாராளமாக குளோரேட் என்ற மருந்தை வழங்காததால் சிவகாசியில் ஒரு தீப் பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடக்கிறது!

இப்படி அடிக்கடி சென்னை சர்க்கார் அதிகாரிகள் தொந்தரவு கொடுப்பதால் இந்தக் குளோரேட் மருந்துக் கட்டுப்பாடு அதிகாரமும் மத்திய சர்க்காரிடமே இருந்து விடக்கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் தொழிற்சாலையைக் கண்காணிக்கும் மத்திய சர்க்கார் அதிகாரிக்குத் தொழிற்சாலைக்கு வேண்டிய மருந்து அளவு தெரியும். தொழில் அதிகமானால் மத்திய சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தைப் பற்றியும் நினைப்பார். அவருடைய கண்காணிப்புக்கு விரோதமாக மருந்தைத் துஷ்பிரயோகம் செய்ய முடியாது. தொழிலுக்கும் அதிகத் தொல்லைகள் இருக்காது என்று தீப் பெட்டி உற்பத்தியாளர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தமாதிரி குறைகள் ஏற்படாமல் கவனிக்கப்பட வேண்டும். தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்படாமலும், உற்பத்தி குறையாமலும் பாதுகாக்க வேண்டும். ஆண்டு தோறும் உற்பத்தி



ஒரே சமயத்தில் பல வர்ணங்களை அச்சடிக்கும் நவீன வசதிகள் கொண்ட 'விந்தோ' அச்சு இயந்திரம்

யைப் பெருக்குவதற்குச் சர்க்கார் உதவ வேண்டும். குடிசைத் தொழிலில் உற்பத்தியாகும் தீப் பெட்டியின் தரம் உயருவதற்கான வழி வகைகளில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இப்படியெல்லாம் சர்க்கார் உதவி செய்தால் இந்தத் தீப்பெட்டித் தொழில் மூலமாகவே நம் நாட்டில் இன்னும் பல லட்சம் மக்களுக்குப் பிழைக்க வழி உண்டாகும்.

தீப்பெட்டித் தொழிலை வீட்டுத் தொழிலாக வளர்ப்பதின் மூலம் ராமநாதபுரம் மாவட்ட மக்களில் பலர் பசியின்றி வாழ வழி செய்து கொடுத்த பெரியார்களைத் தரிசிக்க விரும்பினேன். சாத்தூர் தீப் பெட்டிச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். எஸ், பி. சண்முக நாடாரும், உபதலைவர் ஸ்ரீ எம். ஏ. சி. சண்பகலிங்க நாடாரும் அதற்கு வேண்டிய உதவிகள் செய்து கொடுத்தார்கள்.

தொழில் தந்த இருவர்

ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசி, சாத்தூர், முதலிய ஊர்கள் தீப்பெட்டித் தொழில் மூலம் இந்த நாளில் அடைந்திருக்கும் முன்னேற்றங்களுக்கு மூல காரணமானவர்கள் ஸ்ரீ ஏ. ஷண்முக நாடார் அவர்களும் ஸ்ரீ பி. அய்ய நாடார் அவர்களும் ஆவார்கள்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்கூடத்தை விட்டு வெளி வந்த ஸ்ரீ சண்முக நாடார் குமாஸ்தா உத்தியோகத்துக்கு மனுப் போடாமல் ஏதாவது தொழில் துறையில் ஈடுபட விரும்பினார். அப்போது மதுரையில் பிரசித்தமாயிருந்த மர வியாபாரக் கடை ஒன்றில் வியாபார சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேலையில் அமர்ந்தார். அவருக்குப் பத்திரிகைகள் படிப்பதென்றால் ஆசை அதிகம். கல்கத்தாவில் இருந்து வந்து கொண்டிருந்த "கைத் தொழில்" என்ற ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் "இந்தியாவில் தீக்குச்சித் தொழில் தொடங்கினால் நூற்றுக்கு நூறு லாபம் பெறலாம். அதற்கு வேண்டிய சாமான் விவரங்களும், தொழிற் பயிற்சியும் அளிக்கப்படும்" என்று விளம்பரம் வந்திருந்ததைப் பார்த்தார். உடனே ஸ்ரீ சண்முக நாடார் மர வியாபாரத்துக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டுக் கல்கத்தாவுக்குச்சென்றார். அங்கு ஒன்பது மாதங்கள் தங்கியிருந்து தீக்குச்சித் தொழில் நுணுக்கங்களையெல்லாம் தெரிந்து கொண்டார். அப்பொழுது அவருடன் ஸ்ரீ அய்ய நாடார் அவர்களும் தீக்குச்சித் தொழிலைப் பயின்று வந்தார். அவர்கள் இருவரும் சிவகாசிக்கு வந்து தீக்குச்சித் தொழிலை ஆரம்பித்தனர். 1923-ம் ஆண்டு அவர்கள் அத் தொழிலை ஆரம்பித்து அந்தப் பக்கத்தில் உள்ள மக்களுக்குத் தீக்குச்சித் தொழிலை மிகச் சிரமப் பட்டுச் சொல்லிக் கொடுத்தனர். அதற்காக இரவு பகலாகப் பாடு பட்டனர். பொருள் நஷ்டமும் அடைந்தனர். கடைசியில் தீப்பெட்டித் தொழிலில் வெற்றி கண்டனர். தீப்பெட்டிக் குடிசைத் தொழில் சிவகாசியில் நல்ல முறையில் நடக்க ஆரம்பித்தபோது அதற்குப் பலவிதமான ஆபத்துகள் வரத் தலைப் பட்டன. இந்தத் தீப்பெட்டி வீட்டுத் தொழில் அடியோடு நசித்து விடும் நிலைமை கூட ஒரு சமயம் ஏற்பட்டது.

1931-ம் ஆண்டு இந்தியாவில் இயந்திர முறையில் பெரிய தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பமாயிற்று. வெளி நாட்டு முதலாளிகளின் மூலதனத்தில் ஆரம்பமான இந்தத் தீப்பெட்டி ஆலைக்காரர்கள் முதலில் இந்தியாவில் வளர்ந்து வந்த தீப்பெட்டிக் குடிசைத் தொழிலை நசுக்க முடன்றார்கள். கல்கத்தாவில் இருந்து வந்த நூற்றுக் கணக்கான தீப்பெட்டிக் குடிசைத் தொழில் ஸ்தாபனங்களைக் கொன்று விட்டனர். பிறகு சிவகாசி, சாத்தூர் ஆகிய இடங்களில் மிகச் சிறந்த முறையில் நடந்து வந்த தீப்பெட்டிக் குடிசைத் தொழிலை நசுக்குவதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர். அதற்குப் பல முறைகளைக் கையாள ஆரம்பித்தனர்.

முதலில் தீப்பெட்டிக் குடிசைத் தொழிலில் உற்பத்தியான தீப்பெட்டிகளை யெல்லாம் வாங்கி அவைகளை ஆறு மாதத்துக்கு மேல் ஓர் இடத்தில் அடுக்கி வைத்துத் தீப்பெட்டிகள் நமுத்துப் போனவுடன் அவைகளை மார்க்கெட்டில் விற்றுக் குடிசைத் தொழில் தீப்பெட்டிகள் ஆலைத் தொழில் தீப்பெட்டிகளை விடத் தரம் குறைவானது என்று மக்கள் நம்பும்படி செய்தனர்.

இதை உணர்ந்த தீப்பெட்டிக் குடிசைத் தொழில் உற்பத்தியாளர்கள் தங்கள் தீப்பெட்டி லேபிள்களை மாற்றிக் கொண்டே வந்தனர். தீப்பெட்டி ஆலைத்தொழில் முதலாளிகள் எந்த லேபிள் தீப்பெட்டி உபயோகமில்லாதது என்று மக்களுக்குத் தெரியும்படி செய்தனரோ, அந்த லேபிளை மறுபடியும் உபயோகப்படுத்தாமல் குடிசைத் தொழில் தீப்பெட்டிக்காரர்கள் மாற்றிக் கொண்டே வந்தனர். இதனால் ஆலைத் தொழில் முதலாளிகளுக்குச் சிவகாசி குடிசைத் தொழில் தீப்பெட்டிகளை பேரும் வளர விடாமல் நசுக்குவது சற்றுக் கஷ்டமாயிற்று.

அடுத்தபடி வேறு ஒரு புது முறையைக் கையாண்டனர். சாத்தூர் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் மாதம் 80 ரூபாய் சம்பளத்தில் இருந்த மானேஜரை மாதம் 250 ரூபாய் சம்பளத்துக்கு ஆலை முதலாளிகள் எடுத்துக் கொண்டு, அந்த மானேஜர் மூலமாகக் குடிசைத் தொழில் தீப்பெட்டித் தொழிலை எப்படி நசுக்குவது என்று திட்டமிட்டு வேலை செய்தனர். இந்த முறையிலும் அவர்கள் தோல்வி அடைந்தனர்.

குடிசைத் தொழில் தீப்பெட்டித் தொழிலாளர்கள் மத்தியில் புகுந்து அவர்களை வேலை நிறுத்தம் செய்விக்க முயன்றனர். ஒவ்வொரு வீட்டுப் பெண் பிள்ளைகளையும் பார்த்து "வேலை செய்யாதே" என்று சொல்ல முடியுமா? இது தானே குடிசைத் தொழிலில் உள்ள அற்புதம்!



1. சீனவெடிகளுக்கு வர்
ணக் கடுதாசிகள் சுற்றப்
படுகின்றன. 2. சீனவெடி
மத்தாப்பு முதலியவைகள்
தயாராகி விட்டன!

3. தனித்தனி சீன
வெடிகள் சரம் சரமாகப்
பின்னப் படுகின்றன.

இந்த முறையிலும் தோல்வி காணவே, அப்போது இந்தியாவை ஆண்டு வந்த சர்க்கார் மூலம் 1933-ம் ஆண்டு தீப்பெட்டிக் குடிசைத் தொழிலை ஆலைத் தொழிற் சட்டத்துக்குள் கட்டுப்படுத்தி அதிகமான வரி விதிக்க ஏற்பாடு செய்தனர்.

இதனால் தம்படிக்கு இரண்டு தீப்பெட்டிகள் விதம் விற்றுவந்த சிவகாசி தீப்பெட்டிகளின் விலை அதிகமாயிற்று. சிவகாசி தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டது.

சிவகாசியில் ஸ்ரீ சண்முக நாடாரும், ஸ்ரீ அய்ய நாடாரும் தீப்பெட்டித் தொழிலுடன் சீனவெடி, மத்தாப்பு முதலிய வாணவேடிக்கைத் தொழிலையும் செய்து வந்தனர். இத்தொழிலில் கிடைத்த லாபங்களை யெல்லாம் தீப்பெட்டிக் குடிசைத் தொழிலில் போட்டு தீப்பெட்டி முதலாளிகளின் பயங்கரத் தாக்குதலைச் சமாளித்து ஒரு மாதிரியாகத் தீப்பெட்டிக் குடிசைத் தொழிலைக் காப்பாற்றினார்கள். அப்படிக் காப்பாற்றியதில் நமது இந்திய சுதந்திர சர்க்காருக்கும் பெரிய பங்குண்டு என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

தீக்குச்சிக் குடிசைத் தொழில் மூலம் சாத்தூர், சிவகாசி ஆகிய ஊர்களை அகில இந்திய பிரசித்தி அடையும்படி உயர்த்தியதுபோல ஸ்ரீ ஷண்முக நாடார் அவர்கள் தம்முடைய உழைப்பால் உயர்ந்து இன்று சிவகாசி நகர சபைத் தலைவராகத் திகழ்கிறார். நகர சபைக்குத் தம்முடைய சொந்தப் பணத்தில் சுமார் முப்பதினாயிரம் ரூபாய் கொடுத்துச் சிவகாசி நகரில் பள்ளிக்கூட அபிவிருத்திக்குச் செலவழித்திருக்கிறார். அவர் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றையும் தீப்பெட்டிக்கு வேண்டிய தீக்குச்சி, மர அட்டைகள் முதலியவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும், அத் தொழில்களுக்கு வேண்டிய லித்தோ பிரஸ் ஒன்றையும் நடத்தி ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு வேலை கொடுத்து வருகிறார்.

தீப்பெட்டி வீட்டுத் தொழிலுக்கு எந்த வழியில் தொண்டு செய்யலாம் என்பதைப் பற்றித்தான் அவர் நாளெல்லாம் சிந்தித்து வருகிறார்.

சீனவெடி மத்தாப்புத் தொழில் நுணுக்கங்களைப் பற்றித் தெரிந்து வருவதற்காகத் தம்முடையபுதல்வர் ஸ்ரீ சின்ன நாடார் அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இங்கிலாந்தில் சீனவெடி மத்தாப்புத் தொழிலுக்கான ஏட்டுக் கல்வியைத்தான் கற்றுக் கொடுக்கிறார்களாம். அங்குள்ள தொழில் ஸ்தாபனங்களில் இந்தியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லையாம். இது போன்ற தொழில் முறைகளை மேல் நாட்டார் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதில்லை என்று வருத்தப் பட்டார். ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று மேல் நாடுகளுக்குச் செல்வது நம் பணத்துக்குப் பிடித்த கேடுதானே ஒழிய அதனால் புது விஷயங்களைப் புரிந்துகொண்டு வர முடியவில்லை என்பதை விளக்கினார்.

ஸ்ரீ பி. அய்ய நாடார் சிறந்த காந்தி பக்தர். காந்தி மகான் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை உள்ளவர். சிவகாசி தீப்பெட்டிக் குடிசைத் தொழிலைச் சிறுகச் சிறுக இயந்திர முறையில் மாற்றுவதற்கு முயற்சிகள் நடந்தன. அதற்கான சிறு சிறு இயந்திரங்களும் வந்து தீப்பெட்டித் தொழில் நடக்க ஆரம்பித்தது. அதனால் ஏராளமான ஏழை மக்கள் வேலையை இழந்து தவித்தனர். அப்போது காந்திமகான் குடிசைத் தொழிலைப் பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்தார். காந்திமகானின் அறிவுரை அய்ய நாடார் மனத்தைப் பற்றியது. பெரு முயற்சி செய்து தீக்குச்சிக் குடிசைத் தொழில், குடிசைத் தொழிலாகவே இருக்கப் பாடுபட்டார்; அதில் வெற்றியும் கண்டார். ஹரி ஜனங்களுக்குத் தொண்டாற்றுவதில் அவருக்கு ஆர்வம் அதிகம். அதற்காகத் தம்முடைய சீனவெடி மத்தாப்புத் தொழிற்சாலைகளில் ஹரிஜனங்களை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு இன்னும் பல உதவிகளைச் செய்ய முடியவில்லையே, அவர்கள் முன்னேற்றத்துக்கு முழு நேரத்தையும் செலவிட முடியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய இடைவிடாத முயற்சியால் தான் தீப்பெட்டிக் குடிசைத் தொழிலுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகை 'ரிபேட்' கிடைத்து வருகிறது.

"தீக்குச்சிக் குடிசைத் தொழிலை இன்னும் நல்ல முறையில் நடத்துவதற்கும், இதற்கு வேண்டிய மருந்துகளை இங்கே தயார் செய்வதற்கும் சர்க்கார் நிபுணர்களைக் கொண்டு ஏற்பாடு செய்ய வேண்டும். சர்க்காருக்கு இந்தத் தொழிலின் அருமை இன்னும் நன்றாகத் தெரியவில்லையே!' என்று கண்ணீர் விடாத குறையாகச் சொன்னார்.

இவர்கள் இருவருடைய ஓயாத உழைப்பும், தன்னலமற்ற தொண்டும் இன்று சிவகாசி தீப்பெட்டித் தொழிலில் எத்தனையோ ஆயிரக் கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வேலை கொடுத்து உதவுகின்றன. அவர்களுக்கு அந்த ஏழை எளிய மக்களின் சார்பாக என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


தீப் பெட்டி ஆலைத் தொழிலை "ஸ்வீடிஷ் டிரஸ்ட்" என்ற ஸ்தாபனம் நடத்தி வருகிறது. உலகத்தில் உள்ள அத்தனை தீப்



காலை வேளையில்...சாலை யோரத்தில்...

மழைக்கும் காற்றுக்கும்

உத்திரவாதமுள்ள எங்கள்




புலி & குதிரை

மார்க்

தீப்பெட்டிகளை

உபயோகியுங்கள்



தயாரிப்பவர்கள்:

மீனாக்ஷி மாட்ச் பாக்டரி

த. பெ. 2 - கோவில்பட்டி (S. I.) - பிராஞ்சு: சிவகாசி

உரிமையாளர்: எம். எஸ். எம். ரத்தினசாமி நாடார்



பெட்டி ஆலைத் தொழிலும் அவர்கள் ஆளுகைக்குள் தான் இருக்கின்றது. ஜப்பான் ஒரு தேசத்துக்குள் தான் அவர்களால் புக முடியவில்லை. மற்ற காமன்வெல்த் நாடுகள் அத்தனையிலும் அவர்கள் தங்கள் தொழிலை லாபத்துடன் நடத்தி வருகிறார்கள்.

இப்பேர்ப்பட்ட ஸ்தாபனத்துடன் போட்டி போட்டுச் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய ஊர்களில் தீப்பெட்டி குடிசைத் தொழில் காப்பாற்றப்பட்டு வந்ததற்கு ஸ்ரீ ஷண்முக நாடார் ஸ்ரீ அய்ய நாடார் ஆகியவர்களுடைய உழைப்பும் முயற்சியும் ஒரு காரணமாயிருந்த போதிலும், அவர்களுடன் ஒத்துழைத்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் அருமையான சேவையைக் குறிப்பிட வேண்டும்.

தொழிலாளர்களின் சேவை


சிவகாசி தீப்பெட்டி குடிசைத் தொழில் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த போது தீப்பெட்டித் தொழிலாளர்கள் கூலி விஷயத்தில் பேரம் பண்ணுமல் கொடுத்த கூலியை வாங்கிக் கொண்டு உற்சாகமாக உழைத்திருக்கிறார்கள்.

இதர இடங்களில் தீப்பெட்டிக் குடிசைத் தொழில் நசித்ததற்கு அங்குள்ள தொழிலாளர்கள் ஒத்துழைக்காததுடன், தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களும் வெளி நாட்டிலிருந்து வரவேண்டியிருந்தது! அப்போது அந்தப் பொருள்களுக்கெல்லாம் வரி கிடையாது. தீப்பெட்டி ஆலை முதலாளிகள் சர்க்காரிடம் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தித் தீப்பெட்டி மர அட்டைகளுக்கும், தீக்குச்சிகளுக்கும் இறக்குமதி வரி விதிக்கும்படி செய்துவிட்டார்கள். இதனால் ஆலைத் தீப்பெட்டிகளுடன் போட்டியிட முடியாமல் வடநாட்டில் தீப்பெட்டிக் குடிசைத் தொழில்கள் நசித்து விட்டன.

சிவகாசி தீப்பெட்டிக் குடிசைத் தொழில் உற்பத்தியாளர்கள் திறமைசாலிகள்; நிபுணர்கள். அவர்கள் இப்படி ஏற்படும் என்று அறிந்து ராமநாதபுரம் ஜில்லாவுக்கு வெகு சமீபத்தில் உள்ள மலையாள தேசத்துக் காட்டில் உள்ள மரங்களைக் கொண்டு தீப்பெட்டி மர அட்டைகளும், தீக்குச்சிகளும் தயார் செய்ய ஆரம்பித்து அதில் வெற்றி காணவும் ஆரம்பித்து விட்டனர். அத்துடன் தீப்பெட்டி மர அட்டைகள் தயாரிப்பதற்கும், தீக்குச்சி செய்வதற்கும் உரிய சிறிய இயந்திரங்களையும் தாங்களே செய்து கொண்டனர். இதை ஆலைத் தீப்பெட்டி முதலாளிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வளவு இருந்தும் இயற்கையின் வசதியில்லாவிட்டால் தீப்பெட்டித் தொழில் செய்ய முடியாது. அந்த வசதியும் சிவகாசிக்கு ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் வருஷத்துக்கு பதினொரு மாதங்கள் மழையே கிடையாது. வெய்யிலும் 'கள்' என்று எரிக்கிறது. இது தீப்பெட்டித் தொழிலுக்கு இருக்க வேண்டிய சீதோஷ்ண நிலை. அது அவர்களுக்கு வேண்டியபடி இருக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் வேறு தொழில்களும் இல்லை. அதனால் மக்கள் பலர் இத் தொழிலில் ஈடுபட்டு உழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப் பலப் பல காரணங்களால் விடுத் தீப்பெட்டித் தொழில் காப்பாற்றப்பட்டு வருகிறது.

இப்படி யெல்லாம் பாடுபட்டுக் காப்பாற்றப்பட்ட தொழிலுக்கு மீண்டும் ஆபத்து வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



சென்னையில் பிரபல போட்டோ நிலையமான R. தாஸன் ஸ்டுடியோவின் உரிமைப் பங்காளர் திரு E. M. கோபாலசுவாமி முதலியாரின் புதல்வி செள. **ராமகுமாரிக்கும்**, சி. மெய்யூர் திரு T. சீனிவாச முதலியாரின் புதல்வர், சிரஞ்சீவி **திருநாராயணன்** B. Sc. அவர்களுக்கும் சென்னை இராயப்பேட்டை பெஸண்ட் ரோட் ஆறுமுக விலாசத்தில் 7 - 7 - 54 புதன்கிழமை நடந்த திருமணத்தின் போது, சென்னையிலுள்ள பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் வந்து மணமக்களை வாழ்த்தி வைபவத்தை சிறப்பித்தார்கள்.

வாழ்க மணமக்கள்!

மலையாள நாட்டுக் காடுகளில் உள்ள தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காடுகளில் இருந்த தீப்பெட்டி செய்வதற்கு உபயோகமான மரங்களெல்லாம் தீர்ந்து போய் விட்டன. சர்க்கார் காடுகளில்தான் மரங்கள் இருக்கின்றன.

தீக்குச்சிக்கு உபயோகமான மரங்களை வளர்ப்பதற்காக மத்திய சர்க்கார் பொருள் உதவி செய்கிறார்கள்; இன்னும் செய்வதற்கும் காத்திருக்கிறார்கள். அதை நம் மாகாண சர்க்கார் சரியாக உபயோகப் படுத்திக் கொள்ளவில்லையாம். தீக்குச்சித் தொழிலுக்குத் தேவையான மரங்களை வளர்ப்பதில் போதிய கவனம் செலுத்தவில்லையாம்.

இவ்விதம் நம் சர்க்கார் ஒன்றும் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தால் மலையாள நாட்டுக் காடுகளில் உள்ள தீக்குச்சி மரங்கள் நாலு ஐந்து ஆண்டுகளுக்குள் அழிந்து இத்தொழிலே நசித்துப் போய் விடும். லட்சக் கணக்கான மக்கள் வேலையின்றித் தவிப்பார்கள்.

ஆகையால் சர்க்கார் வீண் சாக்குப் போக்குகள் கூறுமலும், சிவப்பு நாடா முறைகளை அனுசரிக்காமலும், மத்திய சர்க்காரின் பொருள் உதவியைப் பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்டவர்களையும் ஊக்கப்படுத்தித் தீப்பெட்டித் தொழிலுக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

சிவகாசியில் மட்டும் நடந்து கொண்டிருந்த தீப்பெட்டிக் குடிசைத் தொழிலை ஸ்ரீ வி. ராஜாமணி நாடார் அவர்கள் பக்கத்து ஊரான சாத்தூரில் ஆரம்பித்தார். அவருடைய சளியாத உழைப்பால் சாத்தூரில் தீப்பெட்டித் தொழில் படர்ந்து வளர ஆரம்பித்தது. அவருக்குப் பிறகு

இன்னும்பலர் சாத்தூரில் தீப்பெட்டித் தொழில் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள்.

தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்ட தொழி லாளர்கள் தனித்தனியே வேலைசெய்து வேலைக்கு ஏற்ற கூலி பெற்று வந்தாலும், அவர்கள் குறிப் பிட்ட தீப்பெட்டி உற்பத்தியாளர்களிடம் தான் வேலைசெய்ய வேண்டும். தீப்பெட்டி உற்பத்தி யாளர்கள் சிவகாசி சாத்தூர் வட்டாரத்தில் சுமார் ஐம்பது பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் வேலைசெய்து வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்குத் தீப்பெட்டி உற்பத்தி யாளர்கள் வருஷத்துக்கு இரண்டு தடவை அதாவது தீபாவளிக்கும், அந்தப் பிரதேசத்தில் மட்டும் நடந்து வரும் பங்குனிப் பொங்கலுக்கும், "போனஸ்" கொடுக்கிறார்கள். தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு மாதத்துக்கு எவ்வளவு கூலி பெற்றிருக்கிறார்களோ அதில் முக்கால் பங்கைப் போனஸாகப் பெறுகிறார்கள். இன்னும் அவர்கள் திறமைக்கு ஏற்றபடி விசேஷ போனஸ் களும் கொடுத்து உற்சாகப் படுத்துகிறார்கள்.

சென்னை சர்க்கார் தீப்பெட்டிக் குடிசைத் தொழில் வளர்ச்சிக்காக ஒரு போர்டு அமைத் திருக்கிறார்கள். அந்த போர்டு தீப்பெட்டிக் குடிசைத் தொழிலுக்குச் செய்துள்ள காரியங் களைப் பற்றிக் கேள்விப்பட்டது அத்தனையும் எழுத விரும்பவில்லை. பொது மக்கள் பணத்தில் ஆண்டு தோறும் சுமார் லட்ச ரூபாயைச் செல வழித்து வருகிறது என்பதைத் தவிர வேறு ஒரு பலனும் தீப்பெட்டித் தொழிலுக்கு ஏற்பட வில்லை. இப்படிப் பணத்தைப் பயனற்ற முறை யில் விரயம் செய்யாமல் தீப்பெட்டித் தொழி லுக்கு உண்மையான முறையில் தொண்டாற்ற வேண்டும் என்று தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் விரும்புகிறார்கள். அவர்களுடைய விருப்பம் விரை வில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

லித்தோ அச்சுத் தொழில்

தீப்பெட்டித் தொழில் மூலமாக இன்று பல தொழில்கள் வளர்ந்து இருக்கின்றன. தீப் பெட்டி களில் ஒட்டுவதற்கு பெரிய தினப் பத்திரிகை நடத் துவதற்கு வேண்டிய அளவு காகிதங்கள் வேண்டி யிருக்கின்றன. அதனால் காகித வியாபாரம் பெருகி இருக்கிறது. தீக்குச்சிக்கு வேண்டிய மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தீப் பெட்டிக்கு மேலே லேபில்கள் பல வர்ணத்தில் அச்சடித்து ஒட்டியிருப்பதை நேயர்கள் பார்த்திருப்பார்கள். முன்பெல்லாம் தீப் பெட்டி லேபில்கள் பம்பாயி லும், கல்கத்தாவிலும் அச்சடித்துச் சிவகாசிக்கு வந்து கொண்டிருந்தன. அதனால் ஏராளமான பொருள் நஷ்டமும் கால விரயமும் ஏற்பட்டன.

ஆகவே, தீப் பெட்டி உற்பத்தியாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து "நாடார் பிரஸ் லிமிடெட்" என்ற பெயரில் ஒரு அச்சுத் தொழிற்சாலையை ஆரம் பித்தனர். 1931-ம் ஆண்டு பம்பாயிலிருந்து லித்தோ பிரஸ் தொழிலாளர்களைக் கொண்டு வந்து ஸ்ரீ கே. எஸ். ஏ. அருணகிரி நாடார் அவர்கள் லித்தோ பிரஸ் வளர்ச்சிக்காக இரவு பகலாகப் பாடுபட்டார். அது சம்பந்தமான நூல்களை வரவழைத்துப் படித்துத் தெரிந்து கொண்டு லித்தோ பிரஸ் தொழில் முன்னேற்றத் துக்குச் சேவை செய்தார். "தொழில் சம்பந்த மான நூல்கள் ஓரளவுதான் துணை செய்தனவே ஒழிய நாங்கள் உழைத்து உழைத்து ஏராளமான

ரூபாய்களைச் செலவழித்துத்தான் இந்தத் தொழிலைப் பற்றிய நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது'' என்று கூறுகிறார். இன்று இந்தியாவிலேயே மிகச்சிறந்த லித்தோ பிரஸ்கள் பல சிவகாசியில் இருக்கின்றன. லித்தோ பிரஸில் நவீன வசதிகளுடன் கூடிய பல வர்ணங்களை ஒரே சமயத்தில் அச்சடிக்கும் சாதனங்கள் கொண்ட ரோட்டரி ஆட்செட் இயந்திரங்கள் இரண்டு இருக்கின்றன. இதே சாதனங்களுடன் ஒரு வர்ணம் மட்டும் அச்சடிக்கக் கூடிய இயந்திரங்கள் மூன்று இருக்கின்றன. இவையின்றி சுமார் நூறு லித்தோ பிரஸ்கள் இருக்கின்றன. லித்தோ பிரஸ் தொழிலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

மிகக் குறைந்த செலவில் வெகு சுத்தமாக அச்சடித்துக் கொடுக்கிறார்கள். பம்பாயிலும் கல்கத்தாவிலும் எவ்வளவு கூலியில் அச்சடித்துக் கொடுக்கிறார்களோ, அதைவிடக் குறைந்த கூலியில் சிவகாசி லித்தோ பிரஸில் அச்சடித்துப் பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் கொண்டுபோய்க் கொடுக்கிறார்களாம். தமிழ் மக்கள் பெருமைப் படும் முறையில் சிவகாசி லித்தோ அச்சுத் தொழில் சிறந்து விளங்குகிறது.

லித்தோ பிரஸ் சிவகாசியில் பிரபல மடைவதற்கு சிம்கோ ஸ்ரீ ஆறுமுகசாமி நாடார் அரும்பாடுபட்டிருக்கிறார். இலங்கைக்கு ஸ்ரீ ஆறுமுக நாடார் தம்முடன் சிவகாசி லித்தோ பிரஸ் தொழில் நிபுணர்கள் பலரை அழைத்துச் சென்று இலங்கையில் லித்தோ பிரஸ் தொழில் பரவும்படி செய்திருக்கிறார்.

சிவகாசி வெடி!

ஐப்பசி மாதம் பிறந்து விட்டால் எங்கே பார்த்தாலும் 'டப்!' 'டுப்!' 'டபார்!' 'டுமீர்! என்ற சீனவெடிச் சத்தங்கள் காதைத் துளைக்கும்.! குழந்தைகள் குதூகலத்துடன் சிவப்பு மத்தாப்பு, பச்சை மத்தாப்பு, கம்பி மத்தாப்பு, கொம்பு வாணம், விஷ்ணு சக்கரம், கேப் வெடிகள், ஆனை வெடி, இரட்டை வெடி முதலியவைகளைக் கொளுத்தி ஆனந்தப் படுகிறார்கள்.

முன்பெல்லாம் சீன தேசத்திலிருந்தும், இன்னும் பல மேல் நாடுகளிலிருந்தும் சீன வெடி, மத்தாப்பு முதலியவைகள் நம் நாட்டுக்கு இறக்குமதியாகும். இதன் மூலம் பல லட்சம் ரூபாய்கள் நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குச் சென்று வந்தன. இந்தச் சீனவெடி மத்தாப்பு தொழிலிலும் இன்று சிவகாசி தலை தூக்கி நிற்கிறது. ஆசியாவிலேயே மிகச் சிறந்ததும் பெரியதுமான சீன வெடி மத்தாப்புத் தொழிற்சாலைகள் சிவகாசியில் இருக்கின்றன. இன்றைய தினம் சீன தேசத்துக்கும், மேல் நாடுகளுக்கும்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு மேற்படி தொழில் வளர்ந்திருக்கிறது. சீனவெடி, சிவகாசி வெடியாக மாறி விட்டது!

இதுவும் குடிசைத் தொழில் முறையில்தான் நடந்து வருகிறது. ஒவ்வொரு சீனவெடியாகத் தான் செய்கிறார்கள். ஒவ்வொரு சீனவெடியாகத் தான் மருந்து வைக்கிறார்கள்; திரி செருகுகிறார்கள். சீனவெடி, மத்தாப்பு ஆகியவைகளின் கடைசிநிலை அதாவது மருந்து வைத்து, அழகான படங்கள் ஒட்டி, கள்ளிப் பெட்டிகளில் ஜாக்கிரதையாக அடுக்கிக் கட்டும் தொழில் மட்டும் தொழிற் சாலைக்குள் நடக்கின்றது. மற்றப்படி சீனவெடிக் குழாய்கள், மத்தாப்புப் பெட்டிகள்

முதலியவைகள் எல்லாம் வீட்டுத் தொழில்களாகவே சிவகாசியிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நடக்கின்றன !

சீன வெடி, மத்தாப்புத் தொழிற்சாலைகள் ஊருக்கு வெளியில் நாலு ஐந்து மைல்களுக்கு அப்பால் தள்ளி அமைக்கப்பட்டிருக்கின்றன ! அந்தத் தொழிற்சாலைகளுக்குள் பத்தடி அகலமும் இருபதடி நீளமும் அலுமினியத் தகட்டில் கூரைகள் வேய்ந்ததுமான சிறு சிறு குடில்கள் இருக்கின்றன. ஒரு குடிலுக்கும் இன்னொரு குடிலுக்கும் சுமார் இருபதடி இடைவெளியிருக்கிறது. ஒவ்வொரு குடிலிலும் நாலு கதவுகள் இருக்கின்றன. நாலு கதவுகள் ஓரத்திலும் நாலு தொழிலாளர்கள் அமர்ந்து சீன வெடித் தொழிலைச் செய்து வருகிறார்கள். ஒரு குடிலில் நாலு தொழிலாளர்களுக்கு மேல் அமர்ந்து வேலை செய்யக் கூடாது என்று சட்டம். அபாயம் ஏற்படாமல் இருப்பதற்காக இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிலுக்குச் சர்க்கார் செய்திருக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுச் சீன வெடி மத்தாப்புத் தொழிலை நடத்தி வந்தால், இதில் துளியும் அபாயம் ஏற்படுவதற்கே வழியில்லை. பொதுவாக இந்தியாவிலும், ஆசியாவிலும் உள்ள சீன வெடித் தொழிற்சாலைகளில் ஏற்பட்டு வரும் அபாயங்களுடன் ஒப்பிட்டால், சிவகாசி சீன வெடித் தொழிற் சாலைகளில் அபாயமே ஏற்படுவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தத் தொழிலில் மிகப் பெரிய தொழிற்சாலைகள் அமைத்துத் திறம்பட நடத்தி வருகிறவர் ஸ்ரீ என். ஆர். கே. கே. ராஜரத்தினம் அவர்கள். அவருக்குச் சமமாக ஸ்ரீ பி. அய்ய நாடார் அவர்களும் நடத்தி வருகிறார். ஸ்ரீ ராஜரத்தினம் அவர்களுடைய சீனவெடி மத்தாப்புத் தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகச் சிறந்தவையும் பெரியவையுமான தொழிற்சாலைகளில் ஒன்றாகும்.

இன்னும் துப்பாக்கியில் கேப் வைத்துச் சுடும் கேப் பெட்டித் தொழிற்சாலை வேறு தனியாக நடத்துகிறார்கள். இது அபாயம் சிறிதும் இல்லாத கேப் வெடித் தொழிற்சாலை என்று சொல்கிறார்கள். சிறு குழந்தைகள் எவ்வளவோ சந்தோஷமாகத் துப்பாக்கிகளில் கேப் வைத்துச் சுட்டு மகிழ்கிறார்கள் அல்லவா ! சிறு குழந்தைகளுக்குக் கேப் தயாரிக்கும் தொழிற்சாலையில் அபாயம் நேருவதற்கும் வழியில்லைதானே !

பொதுவாக இந்தச் சீனவெடித் தொழிற்சாலைகளுக்குள் இரும்புச் சாமான்களே இல்லை. செம்பும் மரமும்தான் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். சீன வெடி மருந்துகளை எல்லாம் மரத்தால் செய்த தொட்டியில் மரக் குழவியைக் கொண்டுதான் அரைக்கிறார்கள். சீனவெடிக்குள் மருந்தும் திரியும் செருகச் செப்புக் கம்பியைத்தான் உபயோகப் படுத்துகிறார்கள். இரும்பை உபயோகப் படுத்தினால் அபாயம் ஏற்பட்டு விடுமாம். இப்படிக் கவனம் செலுத்தாததால்தான் சில சமயங்களில் சீன வெடித் தொழிற்சாலைகளில் ஆபத்து ஏற்படுகிறது என்று சொன்னார்கள்.

இந்தச் சீன வெடி, மத்தாப்பு கேப் முதலிய தொழில்களுக்குச் சிறு சிறு விளையாட்டுச் சாமான்கள் வேண்டியிருக்கின்றன. கேப் சுடும் துப்பாக்கிகள் முன்பெல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்து கொண்டிருந்தன. இப்போது பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் தயாராகின்றன. அதைச் சென்னை மாகாணத்தில் தயார் செய்யலாம். அதையும் சிவகாசியிலேயே கூடத் தயார் செய்யலாம். ஆனால் சிறு சிறு விளையாட்டுச் சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நமது மாகாணத்தில் ஏற்படுவதற்குச் சென்னை சர்க்கார் மனம் வைக்க வேண்டும்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் இவ்வளவு அளவு இரும்பு என்று மத்திய சர்க்கார் ஒதுக்குகிறார்கள். நம் மாகாணத்துக்கும் ஒதுக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய பங்கை நமது சர்க்கார் உபயோகப்படுத்துவதே இல்லை. நம்முடைய பங்கு இரும்பையும் பெற்று இதர மாகாணங்கள் ஏராளமான சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழில்களை வளர்த்து வருகின்றன. இதுவரை இருந்தது போல் இன்னும் கண்ணை மூடிக்கொண்டு இராமல் நமக்குள்ள இரும்பைக் கொண்டு சிறு சிறு விளையாட்டுச் சாமான்களும் இன்னும் பல உபயோகமான சாமான்களும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க ஊக்கமளிக்க வேண்டும். கேப் சுடும் துப்பாக்கித் தொழிற்சாலைகளையாவது உடனே உண்டாக்கலாம் என்று சீன வெடி உற்பத்தியாளர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

" தீபாவளிக்குச் சீனவெடிச் சுட்டுக் காசைக் கரியாக்குகிறீயே !" என்று பலர் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கலாம்.

நம்முடைய நாட்டுப் பணம் அப்பொழுது வெளி நாடுகளுக்குச் சென்று வந்தது. அதனால் அவ்வாறு சொன்னார்கள். இப்பொழுதோ நம் நாட்டிலேயே சீனவெடி, மத்தாப்பு முதலியவைகள் தயாராகின்றன. தீபாவளித் திருநாளை சிவகாசி வெடி மத்தாப்புகளை வாங்கிக் கொளுத்திக் கொண்டாடுவதால் நம் குழந்தைகள் குதூகலப்பட்டு மகிழ்வார்கள். எத்தனையோ ஏழை மக்கள் வாழ வழி செய்த புண்ணியமும் கிடைக்கும்.

முடிவுரை


சுருக்கமாக இதுவரை சில விஷயங்களைக் குறிப்பிட்டு விட்டால் இந்தக் கட்டுரையை முடித்து விடலாம். நமது சென்னை சர்க்காருக்கு வீட்டுத் தொழில் வளர்ச்சியில் எவ்வளவோ ஆர்வம் இருக்கத்தான் செய்கிறது.

மிகத் திறமை கொண்டவர்களும், நாணயமுள்ளவர்களும் சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நம் மக்கள் நன்றாக வாழ வேண்டும், நம் நாடு வளம் உள்ள நாடாக விளங்க வேண்டும் என்ற ஆசை இருக்கும்.

மந்திரிகளும், மாவட்ட சர்க்கார் அதிகாரிகளும் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும் போதாது. அவர்கள் தங்கள் திறமைகள் மக்களுக்குப் பயன்படும் முறையில் பாடுபட வேண்டும்.

முக்கியமாகக் கிராமத்தில் இப்பொழுதுள்ள வீட்டுத் தொழில்களை எப்படி வளர்ப்பது, இங்கு உற்பத்தியாகும் குடிசைத் தொழில் சாமான்களை வெளிநாட்டு மார்க்கெட்டுகளிலும் உள் நாட்டிலும் எப்படி விற்பது, வீட்டுத் தொழில்களை ஆலைத் தொழில்கள் நசுக்காமல் எப்படிப் பாதுகாப்பது போன்றவைகளில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அந்தத் தொழிலில் அனுபவம் பெற்ற நிபுணர்களின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்றால் நாட்டின் வளம்செழிக்கும்.

கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு வழி உண்டாகும். அவர்கள் பெண்டு பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். நம் நாடு எல்லாத் துறைகளிலும் உயரும் !



'ஓவல்டின்'

இன்றியமையாததான குடும்ப பானம்!

பொதுவாக பேசினால், ஆனந்தமான குடும்பங்கள் ஆரோக்கியமான குடும்பங்களாக உள்ளன. அளவிலும் தரத்திலும் தினசரி போஷாக்கு அவர்களுக்குப் போதுமா? ஆரோக்கியத்திற்கு அவசியமான உணவுச் சத்துக்களை சாதாரண சாப்பாட்டில் சிலசமயங்களில் இல்லை என்பதை அறிந்து பல புத்தி சாலித்தனமான வீட்டுப் பெண்மணிகள், தங்கள் குடும்பத்தாருக்கு ஓவல்டின் கலந்து கொடுக்கிறார்கள்.

ருசி மிகுந்த ஓவல்டின் ஒவ்வொருவருக்கும் இழந்த சக்தியை தருவதோடு, ஆரோக்கிய சுகமான நித்திரையையும் அளிக்கிறது. முதிர்ந்த பார்லிமால்ட், சுத்தமான க்ரீம் பசும்பால், பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட கொக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள், வைட்டமின்கள் ஆகியவைகள் பக்குவமாகக் கலந்து தயாரிக்கப்பட்ட உணவுச்சத்து. வைட்டமின்கள் Bயும் Dயும் சேர்த்து சிறப்பிக்கின்றன. 'ஓவல்டின்' வாங்குவதில் அமிதமான லாபம்-அதற்கு இணை வேறு இல்லை!

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ. (இந்தியா) லிட்.

ஓவல்டின்

உலக அபிமானம் பெற்றுள்ள உணவு பானம்!

சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 வரை ரேடியோ ஸிலோனில் (ஹிந்தி-41.72 மீட்டர்கள்) ஓவல்டின் அமெச்சூர் நேரத்தைக் கேளுங்கள்.



IV. 444



1. கிராமத்து மக்கள் கூடைகளில் தீக்குச்சிகளை வாங்கிச் செல்கிறார்கள். பிறகு தங்கள் தங்கள் வீடுகளில் அமர்ந்து குச்சிகளை 'பிரேமி'ல் அடுக்குகிறார்கள். 2. தீப்பெட்டிகளை ஒட்டித் தெருவில் காயவைத்து விட்டு, தீக்குச்சி அடுக்கிய பிரேமைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்கிறார் அந்த அம்மாள். 3. தீக்குச்சிகளுக்கு மெழுகு ஏற்றப்படுகிறது. 'ஜுபீர்' என்ற தீ ஜ்வாலை வீசுவதைக் கவனியுங்கள். 4. மெழுகு ஏற்றிய தீக்குச்சிகளுக்கு மருந்து முக்கப்படுகிறது.



5. தீப்பெட்டிகளைச் சட்டத்தில் வைத்துச் சமன் செய்து பக்க மருந்து பூசுகிறார்கள். 6. ஒருவர் பின் ஒருவராக ஒட்டிய தீப்பெட்டிகளைத் தொழிற்சாலையில் கொடுக்கிறார்கள். தொழிற்சாலைக்குள்ளே வரிசை வரிசையாக அமர்ந்து குச்சிகளை எண்ணி, தீப்பெட்டிக்குள் அடைக்கும் காட்சியைப் பாருங்கள். அந்த அம்மையார் பிரேமில் இருந்து தீக்குச்சிகளை எண்ணி எடுப்பதைப் பார்த்தீர்களா? 7. தீப்பெட்டிகளுக்கு வசித்தாள் ஒட்டப்படுகின்றன. 8. தீப் பெட்டிகள் டசனாகவும் குரோசாகவும் கட்டப் படுகின்றன.



குடிசைத் தொழிலின் முன்னேற்றம்!



★ 'ரெட்போர்ட்' பட்டாசு ரகங்கள்!
★ 'ஸ்டாண்டர்ட்' கம்பி மத்தாப்புகள்!
★ 'கிட்டீஸ்' கம்பி மத்தாப்புகள்!
★ 'மயில்' மார்க் மத்தாப்புகள்!
★ 'சாவி' மார்க் பட்டாசு ரகங்கள்!
★ 'சாவி' மார்க் கம்பி மத்தாப்புகள்!
★ 'தீபாவளி' மார்க் மத்தாப்புகள்!
★ 'மயில்' மார்க் கேப் வெடிகள்!

தயாரிப்பவர்கள்

ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸ்


சிவகாசி

○●○

சேல்ஸ் டிப்போக்கள்:

1-B, தாதா மான்ஷன், 67/69, முகம்மதலி ரோடு, பம்பாய்-3

14-B, ஆண்டர்ஸன் தெரு :: மதருஸ்-1



அடுத்த வீட்டுத் தென்னை

எஸ்.என். பழனிசாமி

அந்தத் தென்னை மரத்திலிருந்து விழுந்த முதல் காயின் மூலம் தான் அவர்களின் அறிமுகம் ஆரம்பமாகியது.

அன்று மாலை அவன் அந்தத் தென்னை மரத்துக்குப் பக்கத்தில் 'ஆ' வென்று வாயைப் பிளந்தபடி வீட்டின் புழக்கடையில் இருந்த கிணற்றில் தண்ணீர் இறைக்கக் கயிற்றை உருளையில் போட்டுக் கொண்டிருந்தபோது 'தொப்' பென்று பக்கத்தில் என்னவோ விழுந்த சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். அப்போது பக்கத்து வீட்டிலிருந்து ஏதோ காரியமாகப் புழக்கடைப் பக்கம் வந்த அவள் தன் வீட்டுப் புழக் கடையில் விழுந்த அந்தத் தேங்காயை எடுத்துக் கொண்டிருந்ததை அவன் கண்டான்.

அவன் அந்த ஊர் ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்குப் புதிதாக அப்போதுதான் வந்துள்ள ஒரு ஆசிரியன். அவன் பக்கத்து வீட்டுக்குக் குடி வந்து ஒரு மாதம் ஆகியுங் கூட அது வரை அவனுடன் பேசுவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் மட்டும் நிகழவில்லை. ஆனால் அவனைப் பற்றித் தன் வீட்டில் பேசிக் கொள்வதை மட்டும் அவள் கேட்டிருக்கிறாள்.

கிராமத்தில் யார் வீட்டிலாவது ஒரு விசேஷம் நடந்தாலோ அல்லது யாராவது புது விருந்தாளி வந்தாலோ அது ஊர் முழுதும் பரவி விடும். கிராமத்திலுள்ள மக்களுக்குத் தங்களுடன் வாழ்பவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ள எவ்வளவு அக்கறை!

அவன் கீழே விழுந்த தேங்காயைக் கையில் எடுத்தபடியே, ''இந்தத் தென்னை மரம் வேலிக்குப் பக்கத்தில் இருக்கும் வரையில் பக்கத்து வீட்டில் குடி யிருப்பவர்கள் காசு போட்டுத் தேங்காய் வாங்கவேண்டி யிருக்காது போலிருக்கே!'' என்று சொல்லிச் சிரித்தபடியே வேலியின் அருகில் நின்றான்.

இது நாள் வரை பேசியறியாத ஒரு அந்நியன் தன்னுடன் திடுதிப்பென்று பேசியதைக் கேட்டதும் அவளுக்கு உடனே என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. பிறகு வலியப் பேசியவனுக்குப் பதிலளிக்காமல் இருப்பது பெண்மைக்கு அழகல்ல என்று எண்ணியவளே போல், ''இதுவரையில் காசு போட்டுத் தேங்காய் வாங்காதவர்களே பக்கத்து வீட்டுக்குக் குடி வந்ததில்லை. இனி மேல் நீங்கள் எப்படியோ?'' என்று தமாஷாகப் பதிலளித்தாள். திடுக்கிட்டுத் தன்னுடைய தவறுதலுக்காக நாக்கைக் கடித்துக் கொண்டு தன் வீட்டைத் திரும்பிப் பார்த்தாள், தன்னுடைய சிற்றன்னை தான் பேசியதை எங்கு கேட்டு விட்டாளோவென்று.

நல்லவேளையாகத் தன்னுடைய சிற்றன்னை வாசலில் கீரைக்காரியுடன் பேரம் செய்து கொண்டிருந்ததைக் கண்டு, 'அப்பாடா, தப்பினேன்!' என்று தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். பிறகு அவள், ''அந்தக் காயைக் கொஞ்சம் இந்தப் பக்கம் போட்டு விடுகிறீர்களா?'' என்று முன்னிலும் மெதுவாகக் கேட்டாள்.

அவன் தன்னிடமிருந்து தேங்காயைப் பெற்றுக் கொண்டு தனக்கு வந்தனம் தெரிவிப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவள் காயை அந்தப்புறம் போட்டு விடும்படி கூறியதும் அவனுக்குச் சப்பிட்டுப் போய் விட்டது.

ஆகவே அவன் தேங்காயை வேலிக்கு அந்தப்புறம் வீசி எறிந்து விட்டு அவளைத் திரும்பிப் பார்த்தபடியே அந்த இடத்தை விட்டு விரைவாக அகன்றான்.

மேலே கூறிய சம்பவம் நடந்த இரண்டாம் நாள் மாலையும் அவன் கிணற்றடிக்கு வந்த போதும், ஒரு தேங்காய் அடுத்த வீட்டுப் புழக்கடையில் விழுந்தது.

காய் விழுந்த சத்தத்தைக் கேட்டு வெளியே வந்த அவன் அந்தத் தேங்காயைக் கையிலெடுத்தபடியே, ''ஏது, உங்கள் வீட்டுத் தேங்காய்க்கு வேலிக்கு இந்தப் பக்கம் விழவே பிரியம் போலிருக்கு!'' என்று சொல்லிச் சிரித்தபடியே அவளைப் பார்த்தான்.

அவளும் இப்போது இலேசாகச் சிரித்தபடியே, "காற்றடிக்கும் திசையில்தானே தேங்காய் விழும்? மேலும் இந்தத் தென்னை மரத்துத் தேங்காய்க்கு வேலிக்கு அந்தப்புறம் விழ மட்டும் விருப்பமில்லை; சில சமயங்களில் இந்தக் கிணற்றில் விழக்கூடப் பிரியம் ஏற்பட்டு விடுகிறது!" என்று கேலியாகப் பதிலளித்தபடியே ஒரு சிறு புன்னகையை உதிர்த்தாள்.

இப்போது அவளுடைய சிற்றன்னை பக்கத்துத் தெருவுக்குப் போயிருந்ததால்தான் அவளால் அவனுடன் அவ்வளவு தைரியமாகப் பேச முடிந்தது.

அவனும் போன தடவைக்கு இந்தத் தடவை அவள் கொஞ்சம் சகஜமாகப் பேசியதை அறிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமலேயே, "காயை அந்தப் பக்கம் போட்டு விடட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம்! இருங்கள், நானே வந்து வாங்கிக் கொள்கிறேன்!" என்று சொல்லியபடியே அவள் வேலியை நோக்கி அடி எடுத்து வைத்தாள்.

காயைக் கையில் வாங்கிய படியே, "ஆமாம், நீங்கள்தான் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்துக்குப் புதிதாக வந்துள்ள வாத்தியாரோ?" என்று ஒன்றும் அறியாதவள் போல் கேட்டு வைத்தாள்.

"ஆமாம், ஏன்? உங்கள் வீட்டில் யாராவது குழந்தைகள் படிக்கிறார்களா?" என்று ஆவலுடன் கேட்டான்.

அவனுடைய ஆவலான கேள்வி 'உன்னுடைய தம்பி தங்கைகள் யாராவது இருந்தால் தனிப்படக் கவனித்துக் கொள்கிறேன்!' என்று சொல்லாமல் சொல்லியது.

அவளும் சிரித்தபடியே "ஒருவருமில்லை!" என்று சொல்லியபடியே கிணற்றை நோக்கித் திரும்பினாள்.

அவனும் அவளுடன் பேசியதால் சற்று நடுக்கமுற்ற உடலுடனும் கிளர்ச்சியடைந்த உள்ளத்துடனும் வீட்டை நோக்கித் திரும்பினான். அப்போதுதான் ஆழம் தெரியாமல் காலை விடுவதாக அவன் உணர்ந்தான். இருந்தாலும் அவனால் அவளை ஒருகணமாவது நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அந்தத் தென்னை மரத்துக்கு என்னதான் அவ்வளவு அக்கறையோ, தெரியவில்லை. ஏறக்குறைய மூன்றுக்கு இரண்டு காய்களை வேலிக்கு அந்தப் பக்கமே உதிர்த்தது.



பத்தாவதாக விழுந்த ஒரு தேங்காய், 'அவன் ஒரு தாய் தகப்பனற்றவன்; பக்கத்து ஊரிலிருக்கும் ஒன்றுவிட்ட மாமாதான் அவனுக்கு இந்த உலகிலுள்ள ஒரே உறவினர்' என்று அவளிடம் எடுத்துச் சொல்லியது.

பதின்மூன்றாவதாக விழுந்த ஒரு தேங்காய், 'தாய் அற்ற அவள் கொடுமைக்காரச் சிற்றன்னையிடமும், அவளுடைய கைப்பம்பரமான முன்கோபக்கார முரட்டு அப்பாவிடமும் மாட்டிக்கொண்டு சாவதற்கு வழியறியாமல் விழிக்கிறாள்' என்பதை மிக நாசூக்காக அவனுக்குத் தெரிவித்தது.

பதினைந்தாவதாக விழுந்த தேங்காய், 'அடிக்கடி புறக்கடைப் பக்கம் வந்து அவளுடைய சிற்றன்னையின் சந்தேகத்தைக் கிளப்பிவிட வேண்டாம்' என்று அவனை எச்சரித்தது.

பத்தொன்பதாக விழுந்த ஒரு தேங்காய், 'அவளுக்குப் படிக்கத் தெரியும்; ஆகையால் நீ அவளுக்குக் கடிதம் எழுதலாம்' என்று ரகசியமாக அவனிடம் தெரிவித்தது.

பிறகு விழுந்த தேங்காய்கள் தங்கள் வேலைகளின் பெரும் பகுதியைக் கடிதங்களிடம் ஒப்படைத்து விட்டன.

கடிதங்கள் அந்த இரண்டு அநாதைகளையும் ராஜா—ராணியாக்க முயன்றன.

தென்னை மரத்திலிருந்து கடைசித் தேங்காய்க்கு மூந்தின காய் விழுந்த அன்று அவளுக்கு ஒரே கிலியாக இருந்தது. அவளும் தேடாத இடமில்லை. ஆனால் அன்று இரவு அவள் ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக எழுதி வைத்திருந்த அந்தக் கடிதத்தை மட்டும் காணவில்லை.

அந்தக் கடிதம் தன் தகப்பனாரிடமோ, சிற்றன்னையிடமோ கிடைத்து விட்டால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்த்தபோது அவளுக்கு இருதயமே நின்று போவது போல் இருந்தது.

கடிதம் சிற்றன்னையிடம் கிடைத்திருப்பதற்கான அறிகுறி ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் காலையிலிருந்து தன் தகப்பனார் வழக்கத்துக்கு மாறாக 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்ததைக் கண்டபோது கடிதம் அப்பாவிடம் கிடைத்திருக்கலாம் என்ற சந்தேகம் உறுதிப் பட்டது. 'காலையில் தன்னை எழுப்பத் தன் அறைக்கு வந்த அப்பாவுக்குத் தன் இடுப்பிலிருந்து நழுவிய கடிதம் கண்ணில் பட்டிருக்குமோ' என்று எண்ணம் எழுந்தபோது அவளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

அந்தக் கடிதத்தில் முதல் முதலாக அன்றுதான் அவள் தனக்குத் தெரிந்த சில காதல் வார்த்தைகளை நுழைத்திருந்தாள். அவனால்தான், தான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாள். இதை அப்பா படிக்க

நேரிட்டால் முன் கோபத்தில் அவர் என்ன செய்வார் என்று யார்தான் சொல்ல முடியும்?

காலையில் வெட்டரிவாளை எடுத்துத் தன்னுடைய அப்பா வழக்கமில்லா வழக்கமாகக் கிணற்றடியில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி பக்கத்து வீட்டைப் பார்த்தபடியே தீட்டிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவளுக்குப் 'பகீ'ரென்றது. அவளுடைய சந்தேகம் மேலும் உறுதிப் பட்டது.

"ஐயோ, நான் அவருடைய உயிருக்கு உலை வைத்து விட்டேனே! அவரிடம் இதை எப்படித் தெரிவிப்பது?" என்று தவித்தபடியே நெருப்பின்மேல் இருப்பவளைப்போல் ஒவ்வொரு விநாடியும் தவித்தாள். கடைசியில் அவளுடைய தகப்பன் கொலைகாரப் பார்வையுடன் அவளைப் பார்த்தபடியே வீட்டைவிட்டு வெளியேறியதைக் காண அவளுக்குத் தன்னுடைய உயிரே உறைந்து விட்டது போல் பிரமை தோன்றியது.

அன்று மாலை அவளுடைய சிற்றன்னை பக்கத்து வீட்டுப் பாட்டியுடன் கோவிலுக்குச் சென்றபோது அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சிற்றன்னை கோவிலிலிருந்து திரும்புவதற்குள் இதை அவனிடம் சொல்லி எச்சரித்து விடலா மல்லவா?

விழி மேல் விழி வைத்து அவன் வரும் தெருவையே பரபரப்புடன் பார்த்துக்கொண்டிருந்த அவளுக்கு 'எங்கே அதற்குள் அப்பா வீட்டுக்கு வந்து விடுகிறாரோ?' என்று ஒரே கலவரமாக இருந்தது.

பள்ளி முடிந்து அவனும் வந்தான். ஆனால் வழக்கமான புன்னகையை அவனுடைய முகத்தில் அன்று காணவில்லை. அதற்குப் பதில் கலவரம் நிரம்பி யிருந்தது. 'சரிதான், அப்பா அவரை ஏதோ மிரட்டி யிருக்கிறார் போலிருக்கிறது' என்று கலவரமடைந்தபடியே வாசல் கதவை நன்றாகத் தாளிட்டு விட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டு புழக்கடையை நோக்கி ஓடினாள்.

அந்த இரண்டு வீடுகளும் ஊர்க்கோடியில் இருந்ததால் புழக்கடையில் என்ன நடந்தாலும் ஒருவருக்கும் தெரியாது. இருந்தபோதிலும் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றிப் பார்த்து விட்டு இடுப்பிலிருந்த குடத்தைக் கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மீது வைத்து விட்டு வேலிப் பக்கம் போய் நின்று, "வாத்தியாரய்யா! வாத்தியாரய்யா!" என்று பரபரப்புடன் தணிந்த குரலில் அவன் கூப்பிட்டாள்.

"ஏன், வீட்டில் ஒருவருமில்லையா?" என்று நடுக்கத்துடன் கேட்டபடியே வேலியை நோக்கி வந்து கொண்டிருந்த அவனுடைய முகம் பயத்தால் இருளடைந்து கிடந்தது.

"சின்னம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. அப்பா காலையில் வீட்டை விட்டுப் போனவரை இன்னும் காணோம்!" என்று பதற்றத்துடன் சொன்னாள்.

அவன் 'அப்பா!' என்று சொன்னபோது அவனுடைய முகத்தில் முன்னிலும் அதிகமாகப் பயம் குடி கொண்டிருப்பதை அவள் கண்டாள்.



பிறகு பரபரப்புடன், "குடி முழுகிப் போச்சு!" என்றாள்.

அவனும் "ஆமாம்!" என்றான்.

இதைக் கேட்டதும் அவள் முன்னிலும் அதிகமாகத் திடுக்கிட்டு, "ஏன், அப்பா ஏதாவது சொன்னாரா?" என்றாள்.

"சொன்னாரா?—ஊர், பெயர், யார் மகன் என்றெல்லாம் கேட்டு விட்டுத் 'தம்பி உனக்கு உயிரோடு இருக்கப் பிரியமில்லையா?' என்றார்.

"நான் திடுக்கிட்டுப் போய் 'ஏன்?' என்றேன்.

"'எல்லாம் தானாகத் தெரியும்!' என்று மிரட்டி விட்டு விர்ரென்று போய் விட்டார். ஆமாம் அவருக்கு நம் விஷயம் எப்படித் தெரிந்தது?" இதைச் சொல்லும்போது அவனுடைய உடம்பெல்லாம் நடுங்கியதை அவள் கண்டாள்.

அவளுக்கு இப்போது அந்தக் கடிதம் அப்பாவிடம் கிடைத்ததைப் பற்றி எள்ளளவும் சந்தேகமே யில்லை.

"ஐயோ! அநியாயமாக உங்கள் தலைக்குக் கல் கொண்டு வந்து விட்டேனே! நான் உங்களுக்கு எழுதி வைத்திருந்த கடிதம் அப்பாவிடம் கிடைத்து விட்டது."

"ஆ!......அப்படியா?"

"எப்படியோ தவறினது தவறியாச்சு. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேறு வழி



SIMCO LIGHT
THE SOUTHERN INDIA MATCH COMPANY
கீழ்க்கண்ட இடங்களில்
டிப்போக்கள் உள்ளன
சேலம்
மதுரை
மாயூரம்
மங்களூர்
திருவாரூர்
கொல்லம்
தலைச்சேரி
காயங்குளம்
கண்ணனூர்
கோயமுத்தூர்
கும்பகோணம்
திருச்சிராப்பள்ளி
கள்ளிக்கோட்டை
உடுமலைப் பேட்டை

யில்லையா?" என்று கேட்ட அவன் குரல் மிகவும் பரிதாபமாக ஒலித்தது.

"வேறு வழியா?......ஒரே ஒரு வழிதான் இருக்கு. நான் இந்த ஊரை விட்டு ஓட வேண்டியதுதான். ஏன், உனக்குச் சம்மதமானால் நீயும் என்னுடன் ஓடிவர வேண்டியதுதான்!"—இதைச் சொல்லி அவன் வாய் மூடவில்லை. அதற்குள் அவர்களுக்குப் பின்னாலிருந்த கிணற்றில் 'களீல்' என்ற சத்தத்தைத் தொடர்ந்து என்னவோ விழுந்த சத்தம் கேட்டது. அதைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

அப்போது காற்று வீசிக்கொண்டிருந்தது. கிணற்றின் கைப்பிடிச் சுவர் மீது வைத்திருந்த பித்தளைக் குடத்தைக் காணவில்லை. அவள் "ஐயோ! குடம் போச்சே!" என்று பீதி நிறைந்த குரலில் சொல்லிக்கொண்டே கிணற்றை நோக்கிப் பாய்ந்தோடினாள்.

அந்தக் குடம் அவளுடைய சிற்றன்னை சீதனமாகக் கொண்டு வந்தது. வேறு குடமாயிருந்தாலே சிற்றன்னையிடமிருந்து வசவுக்குக் கேட்க வேண்டியதில்லை. அப்படியிருக்க, சீதனமாகக் கொண்டு வந்த இந்தக் குடம் கிணற்றில் விழுந்துவிட்டால்-அதுவும் இந்த நிலையில் கேட்கவா வேண்டும்? இதை எண்ணியபோது அவளுக்குப் பயத்தால் நெஞ்சை யடைத்துக் கொண்டது. துடிக்கும் உள்ளத்துடன் கிணற்றை எட்டிப் பார்த்தாள். நல்ல வேளையாகக் குடம் கிணற்றில் குப்புற மிதந்து கொண்டிருந்தது.

தன்னுடைய சிற்றன்னை கோவிலிலிருந்து திரும்பும் நேரம் நெருங்கி விட்டதால் அவள் திகிலுடன் அவனைப் பார்த்தாள். அவனும் என்ன செய்வதென்று அறியாமல் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஐயோ, நான் என்ன செய்யட்டும்!" என்று துடித்தபடியே அவள் இங்கு ஓடினாள், அங்கு ஓடினாள். ஆனால் குடத்தை மேலே எடுக்க மட்டும் ஒரு வழியும் புலப்படவில்லை.

ஆனால் கிணற்றுக்குள் மிதந்து கொண்டிருந்த குடத்தைப் பார்த்தபடியே இருந்த அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் உருளையிலிருந்த தாம்புக் கயிற்றை எடுத்து உருளை தொங்கும் விட்டத்தைத் தாங்கிக் கொண்டிருந்த கல் தூணில் ஒரு நுனியைக் கட்டி மறு நுனியைக் கிணற்றுக்குள் விட்டான்.

அவனுடைய இந்தத் திடீர்ச் செய்கையைக் கண்டதும் அவள் மேலும் குழப்பமடைந்து போனாள். அவள் என்ன சொல்வது என்று யோசிப்பதற்குள்ளாகவே அவன் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் இறங்க ஆரம்பித்து விட்டான். ஆகவே, முதலில் "வேண்டாம்! வேண்டாம்!" என்று பதறிய அவளுடைய வாய் பிறகு "மெதுவாக! மெதுவாக!" என்றது.

அவன் கிணற்றின் தண்ணீர் மட்டத்தில் காலை வைத்திருப்பான். அப்போது வாசல் கதவைத் தட்டியபடியே தன்னுடைய சிற்றன்னை கூக்குரலிட்டதைக் கேட்டபோது அவளுக்குத் தன் தலையில் இரட்டை இடி விழுந்தாற்போல் இருந்தது.

"ஐயையோ! சின்னம்மா வந்தாச்சு! குடம் கிடக்கட்டும். சீக்கிரம் மேலே ஏறி வாருங்கள்!" என்று பதறியபடியே கிணற்றுக்குள் குனிந்து சொல்லிவிட்டு நிமிர்ந்தாள். அப்போது அவளுடைய காதுக்கு அருகில் 'சொய்ய்!' என்று ஏதோ ஒரு பொருள் காற்றை விலக்கிக் கொண்டு வெகு வேகமாகச் செல்லும் சத்தமும், அடுத்த வினாடி கிணற்றுக்குள் 'களீ'ரென்ற சத்தத்தைத் தொடர்ந்து 'ஐயோ!' என்ற உருத் தெரியாத ஒரு பயங்கரச் சத்தமும் கேட்டன.

அவள் கீழே கிணற்றைப் பார்த்தாள்! கிணற்று நீரின் மேல் பரப்பில் அவனைக் காணவில்லை! மேலே தென்னை மரத்தை அண்ணாந்து பார்த்தாள்! அந்தத் தென்னை மரத்தில் சற்று முன் தொங்கிய அந்தக் கடைசித் தேங்காயைக் காணவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தாள். கையையும் காலையும் உதறினாள்! 'ஓ'என்று கூச்சல் போட வேண்டும்போல் தோன்றியது. ஆயினும் முடியவில்லை. கடைசியில் ஒரு முறை கிணற்றில் எட்டிப் பார்த்தாள். அப்போதுதான் வாத்தியாரய்யா தலையைத் தண்ணீருக்குள்ளேயிருந்து வெளியே நீட்டினார்.

அப்போதுதான் அவளுக்குப் போன உயிர் திரும்பியது. முகத்தில் புன்னகை மலர்ந்தது.

அதைப் பார்த்த வாத்தியாரய்யா, "இந்தக் கடைசி தேங்காய் உன்னிடம் என்ன கூறியது?" என்று கேட்டான்.

அவனுடைய பயங்கரமான அலறலைக் கேட்டு ஓடிவந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் கிணற்றைச் சூழ்ந்து கொண்டிருந்தபோது அவனுடைய தகப்பனார் ஊர்க் கோடியில் ஒரு கிழவருடன் பேசிக் கொண்டு வந்தார்.

"குட்டியப்பா! எங்கே போயிட்டு வருகிறீங்க?" என்றார் கிழவர்.

"பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்து விட்டு வருகிறேன், தாத்தா!"

"ஓகோ? மாப்பிள்ளை எந்த ஊர்?"


"எல்லாம் பக்கத்து ஊர்தானுங்க!"


"என்ன, சொந்தமா, பிறத்தி இடமா?"

"எல்லாம் சொந்தந்தான். நானுங்கூட முதலில் மாப்பிள்ளைப் பையன் யாரோன்னு இருந்தேன். பிறகு விசாரிக்கும்போது பையன் நமக்கு நெருங்கிய சொந்தம்!"

"அப்படியா? மாப்பிள்ளை பேரு?"

"ராமசாமி! நம்ம வீட்டுக்குப் பக்கத்துவீட்டில் இருக்கிறானல்ல ஒரு பையன், வாத்தியார் வேலை பார்த்துக்கிட்டு, 'அந்தப் பையன் தானுங்க!" என்றார் குட்டியப்பத் தேவர்.




ஸிங்கர் 206 K
தையல் இயந்திரம்
பலவித அலங்காரத்
தையல்கள்
செய்ய
SINGER
தேனி வட்டத்தில் அமைந்திருக்கும் இருவிசைகள் தையல் இயக்கத்தை நிதானித்து, வேலை செய்பவர் சாதாரணத் தையல் வேலையிலிருந்து அதிக உபயோகமானதும், அலங்கார வேலைப் பாடுமுள்ள தேனி தையல் வேலைகளுக்கு எளிதில் மாற்றிக் கொள்ள உதவுகிறது.
அதிகப்படியான உபகரணங்களற்றது
இந்த ஆச்சரியகரமானதும், எவ்வித வேலைக்கும், எளிதில் மாற்றிக் கொள்ளக் கூடிய தையல் இயந்திரம் வரையற்ற அலங்காரத் தையல்களை, ப்ரத்யேக உபகரணங்களின்றியே, எளிதில் நன்கு முடித்துக்கொடுக்கும் இதைக்கொண்டும், தையல் தொழில் காரர்களைப்போலவே: பித்தான் துளையிடுதல், பித்தான் தைத்தல் ஒட்டு வேலைகள், சரிகை பொருத்தல், கரை தைத்தல், இழை கூட்டல் முதலிய வேலைகளை நீங்களே கச்சிதமாகச் செய்யக்கூடியதோடு, புதுப்புதும் பாஷன்கள் உண்டாக்கவும் கூடும்.
ஸிங்கர்* உலகெங்கும் விரும்பப்படுவது...
ஸிங்கர் ஸூயிங் மெஷின் கம்பெனி.
வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்க ஐக்ய நாடுகளில் இணைக்கப்பட்டது
*ஸிங்கர் மான்யுபாக்சரிங் கம்பெனியின் டிரேட் மார்க்.



10. யாருக்குக் கல்யாணம்?

ஜகதீஷின் தலையைப் பிடித்து விடுவதைக் கோகிலா நிறுத்தவில்லை; அவள் அந்தக் காரியத்தைத் தொடர்ந்தே செய்து வந்தாள். இருந்தாலும் அவளை என்னவோ வெட்கம் பிடுங்கித் தின்றது. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் பழைய காலத்துப் பழக்க வழக்கங்கள் அவளிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்தன. அதனால் அவள் கொஞ்சம் பழைய காலத்து மனுஷியாகவே தான் திகழ்ந்தாள். அவள் எந்த ஆங்கிலப் பள்ளியிலும் கல்வி பயிலவில்லை. ஆயினும் நாளடைவில் அவளுக்குப் பத்திரிகை, தந்தி முதலியவை படிக்கக் கூடிய ஆங்கில அறிவு தானாகப் பழக்கத்திலேயே வந்து விட்டது. பள்ளியில் சேர்ந்து படிக்காததனால் பள்ளிப் படிப்பின் பழக்கத்தில் படிந்து வரும் அச்சமின்மையும் சங்கோசமின்மையும் அவளைச் சிறிதும் ஆட்கொள்ளவில்லை.

கணவனைக் கை ஜாடை காட்டிக் கூப்பிடுதல், கணவன் உட்கார்ந்ததும் அவனருகில் ஜம் என்று சிறிதும் சங்கோசமின்றிப் போய் உட்காருதல், கணவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது ஒரு புறம் இருக்கட்டும், 'டியர்' என்று அலட்சியமாக ஆங்கிலப் பதத்தை உபயோகித்து ஏக வசனத்தில் அழைத்தல், அடிக்கொரு தடவை கணவனை இனிமையாகவும் அதோடு குத்தலாகவும் கடிந்து கொள்ளுதல், கோபித்துக் கொண்டு கணவனோடு பேசாமல் இருத்தல், தகராறு செய்து கொண்டு நவக்கிரஹமாக உம்மென்று முகத்தைத் திருப்பி வைத்துக் கொள்ளுதல், அப்புறம் அதே கையோடு கையாகக் கோபித்துக் கொண்டிருக்கும் தன் கணவனைக் கலகலவென்று சிரித்துப் பேசிச் சரி செய்து கொள்ளப் பார்த்தல்—இவை போன்ற தற்காலத்து நவ நாகரிகச் செயல்கள் அதுகாறும் அவளிடம் தலை காட்டவே இல்லை.

அப்படியிருந்தும் அவள் அன்று கணவனின் கண்களை முத்தமிடும் பொழுதல்லவா திருடி போலப் பிடிக்கப்பட்டாள்! அதனால் வெட்கம் அவளைத் தலை நிமிர விடவில்லை. குனிந்த தலை நிமிராமலே அவள் தன் கணவனின் தலையைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள்.

“அண்ணாவுக்கு என்ன ஏற்பட்டு விட்டது?” என்று அருகில் வந்த ராதா மெதுவான குரலில் கேட்டாள். தனக்கும் ஜகதீஷுக்கும் உள்ள நடைமுறை உறவை அத்தனை சீக்கிரத்தில் ராதா ஒரு விதமாகத் தீர்மானித்துக் கொண்டு விட்டாள். 'வசுதைவ குடும்பகம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாக்கிச் சொந்தம் பாராட்டி ஒரு உறவைப் பரப்ப விரும்பும் தற்காலத்துச் சீர்திருத்தவாதிகள் பாரத நாட்டைப் பார்க்க வேண்டும். பண்டைய காலந் தொட்டே பாரத நாடு எப்படியெல்லாம் அற்புதமாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டாடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்தால் நன்கு தெரிய வரும். ஒரே உலகமாக்க வேண்டும் என்று இந்த உலகத்தைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்குப் பாரத நாடு பன்னெடுங் காலத்துக்கு முந்தியே வழிகாட்டியாக அமைந்து விட்டது என்பது தெள்ளென விளங்கும். நம் நாட்டில் ஒருவனை அண்ணன் என்று சொல்லி விட்டால், அப்புறம் அவன் உண்மையிலேயே அண்ணனாகி விடுகிறான். இதற்குச் சரித்திரமே சாட்சி. சித்தூர் அரசரின் தாயார் அனுப்பிய ரக்ஷாபந்தனச் சரட்டை ஏற்றுக் கொண்ட ஹுமாயூன் தன் முழுப் படையுடனும் அவளுக்கு உதவி செய்யப் போகவில்லையா? அவன் அப்படிச் செய்தது எதற்காக? அண்ணா என்று அரசரின் அன்னை தன்னை அழைத்து ரக்ஷாபந்தனச் சரட்டைத் தனக்கு அனுப்பி வைத்து உதவி கோரியதனால்தானே?

கிராமத்தில் பிறந்து கிராமத்தில் வளர்ந்து வரும் ஒரு பெண் கிராமம் முழுவதுக்குமே கூடச் சொந்தப் பெண்ணாய், மகளாய்த் திகழ்ந்து வருவது பாரத நாட்டின் பிரதானமான பண்புகளில் ஒன்றாகும். அவளுடைய தந்தையின் வயதை ஒத்தவர்கள் அனைவரும்

அந்தப் பெண்ணைத் தங்கள் பெண்ணாகவே தான் மதித்து வருவார்கள். அவளுக்கு அண்ணனாக இருக்கத் தகுந்த வயதை உடைய கிராமத்து வாலிபர்கள் அனைவரும், அவளைச் சகோதரியாகவேதான் பாவிப் பார்கள். அது மட்டுமா? தங்களுடைய அந்தத் தங்கைக்குப் பிறக்கும் குழந்தை களைத் தங்கள் மருமான்களாகவும் மருமான் களாகவுமே மதித்துப் பழகுவார்கள்.

அப்படி மகளாகவும் சகோதரியாகவும் பாவிக்கப்படும் பெண் எந்தக் கிராமத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தாலும், அந்தக் கிரா மத்துக்கு அவள் தந்தையின் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் போக நேர்ந்தால், அந்தப் பெண்ணைத் தகப்பனையும் தமையனையும் போல் போய்ப் பார்த்து வரத் தவற மாட் டார்கள். தங்களால் இயன்றதை அவளுக்கு அன்புப் பரிசாக அளித்து அவளது நலன்களை விசாரித்து வரவும் அவர்கள் தவறுவதில்லை.

கிராமத்தில் பிறந்து, கிராமத்தில் வளர்ந்து கிராமத்தில் வாழ்ந்து வந்த ராதா தன்னைக் காத்து ரட்சிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டவனைத் தனது சகோதரனாகவும் தன்னை அவன் சகோதரியாகவும் ஆக்கிக் கொண்டு விட்டாள் என்றால், அதில் ஆச் சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது?

"ஜுரம் வந்து விட்டது. ரொம்பத் தலையை வலிக்கிறதாம்!" என்று ராதாவின் கேள்விக்குப் பதில் சொன்னாள் கோகிலா.

"அட!" என்ற சொல் விஜயலக்ஷ்மியின் வாயிலிருந்து வெகு ஆதுரத்துடன் வெளி வந்தது. "எனக்கு ஒன்றும் முக்கியமான வேலை யில்லை. இப்படி உன்னைக் கண்டு சிறிது நேரம் ஏதாவது பேசி விட்டுப் போகலாமே என்றுதான் வந்தேன். ஆமாம், ஜுரம் எப்பொழுதி லிருந்து வந்திருக்கிறது? காலை யில் உடம்பு சரியாகத்தானே இருந் தது?" என்று கேட்டாள்.


"ஜுரம் உள்ளூற முன்னாடியே இருந்திருக்கணும். இப்பொழுது அதிகமாகப் போன பின்தான் நமக்குத் தெரிந்திருக்கிறது!" என் றாள் கோகிலா.

"டாக்டரைக் கூப்பிடுவது தானே?" என்றாள் விஜயலக்ஷ்மி. பணக்காரர்களுக்கு என்ன? இதுபோன்ற ஆலோசனையை வெகு சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள். அவர் களுக்குத் தங்கள் நிலைமை தெரியுமே தவிர, மற்றவர்கள் நிலைமை எங்கே தெரியும்?

"நானும் அதைத்தான் நினைத்தேன். ஆனால் டாக்டரை அழைத்து வர யாரை அனுப்புவது என்றுதான் புரியவில்லை. யோசித்துக்கொண் டிருக்கிறேன்!" என்றாள்.

"இதற்காக யோசிப்பானேன்? நாங்கள் என்ன தொலைவில் இருக்கிறோமா? பக்கத்தில் தானே இருக்கிறோம்? சமயா சமயத்துக்கு எங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் போய்ச் சொல்லுவாய்?"-வெகு கெட்டிக் காரத்தனமாக இந்த வார்த்தைகளைச் சொன்ன விஜயலக்ஷ்மி சட்டென்று எழுந்து மொட்டை மாடிப் பக்கம் வந்தாள். அவள் வீட்டு இரண்டொரு வேலைக்காரர்கள் கீழே வராந்தாவில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். விஜயலக்ஷ்மி கைதட்டி அவர்களை மேலே அழைத்தாள். எசமானி யம்மாள் கூப்பிடவே அவர்கள் நான் முந்தி, நீ முந்தி என்று எழுந்து ஓடி வந்தார்கள். அவர்களில் ஒருவனைப் பார்த்து, "சட் டென்று கையோடு வண்டியை எடுத்துக் கொண்டு போய் நம் டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டு வா!" என்று கட்டளை யிட்டாள். அதைக் கேட்டதும் அவன் அவசரம் அவசர மாகக் கீழே இறங்கி ஓடினான். பிறகு இன்னொரு வேலையாளைப் பார்த்து "இதோ பார்! என்னுடைய சிறந்த சின்னப் பெட்டி இருக்கிறதே, தெரியும் அல்லவா? அதில் ஜுரமானியும் ரோஜா அத்தரும் இருக்கின் றன. அதைப் போய்ப் போனதும் வந்தது மாக எடுத்து வா!" என்று உத்தரவிட்டாள்.

அதையெல்லாம் கண்ட கோகிலாவுக்குத் தாங்க முடியாத நன்றிச் சுமை தன்னை ஒரேயடியாக அழுத்துவதாகப் பட்டது. பணக்காரர்கள் மூலம் ஏழைகளுக்குக் கிடைக் கும் இத்தகைய உதவி ஏழைகளை இன்னும்



ஏழைமையில் ஆழ்த்தி விடுகிறது; தாங்கள் பரம ஏழைகள் என்பதை இன்னும் அழுத்தந் திருத்தமாக உணரும்படி செய்து விடுகிறது.

"விஜயா! எதற்காக நீ இவ்வளவு சிரமப் படுகிறாய்?" என்று நன்றிக் கடன் பட்ட குரலில் கேட்டாள் கோகிலா.

"இது என்ன, ஒரு பிரமாத சிரமமா?" என்று மறுமொழி அளித்தாள் விஜயலக்ஷ்மி.

அப்பொழுது அவள் பேச்சில், தான் பணக்காரி என்ற செருக்கு தொனிக்க வில்லை. ஏழைகளிடம் செல்வந்தர்கள் காட்டும் இரக்க உணர்ச்சியும் தென்பட வில்லை. மனிதனுக்கு மனிதன் செய்யும் மாண்பு மிக்க கடமை உணர்ச்சிதான் காட்சி அளித்தது.

ஜகதீஷின் கண்களில் முத்தமிடும்பொழுது விஜயலக்ஷ்மி பார்த்து விட்டதனால் கோகிலாவுக்கு ஏற்பட்ட நாணமும், நாணம் கலந்த அந்த நேரத்தில் அவள் அதை மறைக்க முயன்றவாறே ஜகதீஷின் தலையைப் பிடித்து விடும் காட்சியும் விஜயலக்ஷ்மியை வெகுவாகக் கவர்ந்து விட்டன. அந்த இனிய காட்சி இணையற்ற இன்ப லோகக் காட்சியாகவே அவள் மனத் திரையில் பதிந்து விட்டது. அப்படி மனத் திரையில் பதிந்த அந்தக் காட்சி சும்மா இருக்கக் கூடாதா? மனத்தில் முளைக்காத சிந்தனைகளை யெல்லாம் கிளப்பி விடவேண்டுமா?



விஜயலக்ஷ்மியிடம் மிக மிக நேர்த்தி வாய்ந்த நகை நட்டுகளும் துணிமணிகளும் போர் போலக் குவிந்திருந்தன. ஆடை அலங்காரத்தில் அதிகக் கவனம் செலுத்தி வந்த விஜயலக்ஷ்மிக்கு அந்த இன்ப லோகக் காட்சிக் கெதிரே தனது சிங்காரங்கள் அனைத்தும் சப்பென்று கொஞ்சங்கூட சிறக்காதவை போலவே தோற்றமளித்தன.

விஜயலக்ஷ்மி நல்ல அழகானவள். ஆடை அலங்காரங்களில் ஆர்வங் கொண்டவள். ஒய்யாரமான நடை, உடை, பாவனைகளில் ஒரு வித மோகம் கொண்டவள். நாலு பேருக்கெதிரே நாகரிகமாகப் பழக வேண்டும் என்ற நோக்கமும் கொண்டவள். எவ்விஷயத்திலும் ஆர்வம் காட்டும் சுபாவம் அவளிடம் நன்கு படிந்திருந்தது.

தாய் மொழிப் புத்தகங்களைப் படித்த பின் மற்ற மொழிப் புத்தகங்களையும் படித்து ரசிக்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்தில் எல்லையில்லாமல் அதிகரித்து விட்டது. அதனால் அவள் ஆங்கிலக் கல்வியும் பயின்றாள். எத்தனைதான் ஆங்கிலக் கல்வியினிடமுள்ள மோகம் அதிகரித்தாலும், ரத்தத்தில் தொன்று தொட்ட காலமாக ஊறிவிட்ட நாட்டுப் பண்பு போய் விடுமா?

தாய் மொழியின் வளம் மிக்க பழமை இலக்கியங்களைச் சுவைப்பதில் மனத்தைப் பறி கொடுத்து விட்டோம் என்பதற்காக வளரும் புதுமை இலக்கியத்தைப் புறக்கணித்துவிட முடியுமா? புறக்கணிக்க முயன்றாலும் அது முடிந்த காரியமா? பழமையும் புதுமையும் கலந்து நாட்டில் ஒரு புதுக் கலவையைச் சிருஷ்டித்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கின்றன. இது நியதி.

அதே போலத்தான் இந் நாட்களில் நவநாகரிக ஆங்கிலக் கல்வியும், நாட்டுப் பண்பும் நன்கு கலந்து பெண்மையிலே ஒருவிதப் புதுமையை உருவாக்கியிருக்கின்றன. அதுவும் ஒரு அழகாகத்தான் இருக்கிறது. இத்தகைய கலவை நாகரிகத்தில் வளர்ந்த விஜயலக்ஷ்மிக்கு ஆனந்தமாக இன்ப போக வாழ்க்கை வாழ்வதற்கான சகலவித சௌகரியங்களும் சாதனங்களும் அவள் எண்ணியபடியெல்லாம் கிடைத்திருந்தன. ஆயினும் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று சொல்லுவது போல் பழமைக்கும் புதுமைக்கும் மத்தியில் தத்தளித்துக் கொண்டு நின்ற அவள் உள்ளத்துக்கு ஒரு திருப்தி ஏற்பட வில்லை. அதிருப்தி தான் ஏற்பட்டது. அதிருப்தி அதிகரிக்க அதிகரிக்கத் தீர்க்கதொரு பண்பில் தோயாத அவளது உள்ளம் பலவிதமாக அலை பாய்ந்து குமையத் தொடங்கியது. அந்தக் குமைவின் காரணமாக அவள் உள்ளத்தில் மாபெரும் போரே கூட நிகழத் தொடங்கி விட்டது.

விஜயலக்ஷ்மி தன் கரம் பற்றித் தனக்கு மணாளனாக வரப்போகும் கணவனைப் பற்றி அவன் எப்படி எப்படி யெல்லாம் இருக்க வேண்டும் என்று ஒரு கனவையே சிருஷ்டி செய்து வைத்திருந்தாள். தனக்கு வரப் போகும் கணவன் கருத்தைத் கவரும் காளைப் பருவத்தினனாக, ஆத்மாவை ஆனந்தத்தில் ஆழ்த்தும் ஆண் மகனாக இருக்க வேண்டும். பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமென்று தோன்ற வேண்டும். -அத்தகைய ஆணழகனாக, இருதயத்துக்கு இதம் தரும் இன்பக் கடலாகத் திகழ வேண்டும். தன் எழிலுக்குத் தகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுத்துத் தன்னை இருதய பீடத்தில் வைத்துப் பூஜிக்கக் கூடிய ரசிகர் தலைவனாக இருக்க வேண்டும். சுக போக வாழ்க்கையைச் சாரமற்றதாகச் செய்து விடக் கூடிய காம இச்சையில் மட்டிலுமே கருத்துக் கொண்டவனாக இருந்து விடக் கூடாது. பண்பும் படிப்பும் பாங்காக அமையப் பெற்றவனாக இருக்க வேண்டும். இப்படி யெல்லாம் அவள் கனவு கண்டு கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆனால் இந்த உலகத்தில் யாருடைய கனவுதான் சரிவரப் பலித்திருக்கிறது?

லால்ஜி ஸேட்டின் தமையனான கிரிதர ஸேட். கிராமத்தில் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வந்தார். குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பணம் கடன் கொடுத்துக் கடன் கொடுத்து அதற்கு வட்டி வசூலிப்பதிலேயே அவர் கொழுத்த பணக்காரராகி விட்டார். வட்டிப் பணமே அவரிடம் ஏராளமான பணத்தைக் கொண்டு வந்து குவித்து அவரைப் பெரும் பணக்காரராக்கி விட்டது.

லால்ஜி ஸேட் தமது தமையனார் கிரிதர ஸேட்டின் மேற்பார்வையில் தான் தமது தொழிலைக் கற்றுத் தேர்ந்தார்.

ஆனால் பணத்தைக் கடன் கொடுத்தால் அது இலேசில் திரும்பி வந்து விடுகிறதா? சண்டையும் சச்சரவும், போரும் பூசலும் நடந்துதானே கொடுத்த பணத்தை வாங்க முடிகிறது! அதை யெல்லாம் கண்ணால் கண்டு கலவரமுற்ற லால்ஜி கிராமத்தை விட்டு நகரம் சென்று குடியேறி விட்டார். லால்ஜி ஸேட் கிராமத்தை விட்டு நகரம் சென்று குடியேறியதும் கிரிதர ஸேட்டுக்கு ஒரு வகையில் மிக அநுகூலமாகவே முடிந்தது. குடியானவர்கள் தங்கள் கடனைத் தான்யமாகக் கொடுத்துத் தீர்ப்பார்கள். அந்தத் தான்யத்தை நகரத்துக்கு அனுப்பி வெளி நாட்டு வியாபாரிகளின் கையில் விற்பதற்கு அது மிகவும் வசதியாகப் போய் விட்டது. அதுவும் ஒரு வியாபாரமாகப் பெருகி நல்ல லாபம் தரத் தொடங்கியது. குறைச்சல் விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றால் லாபம் வராமல் வேறு என்ன செய்யும்? லால்ஜி ஸேட் வெகு சாதுரியமாக அந்த வியாபாரத்தைச் சமாளிக்கத் தொடங்கி விடவே, கிரிதர ஸேட்டுக்குத் தமது தம்பியிடத்தில் மதிப்பும் மரியாதையும் மட்டற்று உயர்ந்து விட்டன.

அதனால் அவ்விரு சகோதரர்களுக்கும் இடையே மிக நல்ல உறவே நிலவியது. கிரிதர ஸேட்டுக்குக் குழந்தை குட்டி கிடையாது. மனைவி இறந்து விடவே, பெரும்பாலான மனைவியிழந்தவர்களைப் போலவே, அவரும் மறு மணம் செய்து கொள்வதென்று தீர்மானித்தார். அவருடைய அந்தத் தீர்மானத்தைச் செயலாக்க எத்தனையோ பேர் 'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுக்க முன் வந்தனர்.

அந்த நாட்களில்தான் விஜயா தன் பள்ளிப் படிப்பை முடித்து விட்டுத் தனக்கு வாய்க்க வேண்டிய கணவனைப் பற்றிக் கனவு காண்பதில் மனத்தைச் செலுத்தியிருந்தாள். கிரிதர ஸேட்டின் பார்வை அவள் மீது விழுந்தது. தாய் தந்தையை இழந்த விஜயா தன் சிற்றப்பா சிற்றம்மையுடன் இருந்தாள். சிற்றம்மை விஜயாவை வெகு செல்லமாக வளர்த்து வந்தாள்; விஜயாவிடம் அவள் தன் உயிரையே கூட வைத்திருந்தாள். சிற்றப்பாவும் ஒன்றும் கெட்டவரில்லை. அவரும் அவளிடம் அன்பா

இங்கிலாந்து விஜயம்

உலகப் புகழ் பெற்ற வாட்டர்மன்ஸ் பேனா-இங்க் இவற்றின் பூரண விற்பனை ஏஜெண்டுகளான சென்னை டி. டி. கிருஷ்ணமாச்சாரி அண்டு கம்பெனியின் நிர்வாகஸ்தர் ஸ்ரீ டி. டி. வாசுதேவன் அவர்கள் மேற்படி வாட்டர்மன்ஸ் கம்பெனியாரின் தொழிற்சாலையைப் பார்க்கவும், அத்தொழிலின் நுணுக்கங்களை அறிந்து வரவும் இங்கிலாந்து சென்றிருக்கிறார். இவருடைய பிரயாணத்தை வாட்டர்மன்ஸ் கம்பெனியாரின் இந்திய ஏக போகச் சலுகையாளரான ரைட் எயிட்ஸ் (ஓரியண்ட்) லிமிடெட் கம்பெனியார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கிலாந்து சென்றிருக்கும் ஸ்ரீ வாசுதேவன் பாரத நாட்டுப் பேனா-இங்க் தொழில் உற்பத்திக்கு உதவும் அளவுக்குப் போதிய அனுபவமும் ஆற்றலும் பெற்றுத் திரும்புவார் என்று எதிர்பார்க்கிறோம்!




நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
புதிது!!
PROTEX
All-Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு

B.I.S.N. CO. LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 ஜூலை 31
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 ஆகஸ்டு 1

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

சென்னையிலிருந்து 31-7-54 : பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

நாகப்பட்டினத்திலிருந்து 1-8-54 : பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் காலை 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 31-7-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்தியபரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	மதுரா கம்பெனி லிமிடெட் முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அருவருப்பாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரித்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும், வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதளித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.

கத்தான் இருந்து வந்தார். ஆனால் அவர் செய்து வந்த வியாபாரத்தில் அடிக்கடி ஏற்பட்டு வந்த நஷ்டம் அவரைப் பற்பல விதமான சிரமத்துக்குட்படுத்தி ஆட்டி வைத்து விட்டது. சிற்சில சமயம் விஜயாவை வைத்துப் பராமரிப்பதே கூட அவருக்குச் சிரமமாகப் போய் விடும் போலத் தோன்றியது. அதனால் இத்தனை கஷ்டங்களிலும் எதிர் நீச்சு நீந்த முடியாத காரணத்தினால் அவர் விஜயாவைக் கிரிதர ஸேட்டுக்கு மணம் செய்து வைக்க அரை மனதாகவோ, முழு மனதாகவோ சம்மதித்து விட்டார்.

ஆனால் லால்ஜி ஸேட் அந்த மணத்தைத் தீவிரமாக எதிர்க்கத் தொடங்கி விட்டார். லால்ஜி ஸேட்டின் வாதங்கள் அனைத்தும் கிரிதர ஸேட்டுக்கு ஆதாரமற்றவையாகத் தோன்றின. லால்ஜி ஸேட் தன்னலம் காரணமாகவே அப்படியெல்லாம் பேசுகிறார் என்று பட்டது. லால்ஜி ஸேட் சொன்னால் ஆயிற்றா? கிரிதர ஸேட் தம்மை ஒரு நிமிஷம் கூட 'வயதானவர், கிழவர்' என்று ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. குடும்ப வாழ்க்கையில் பற்றுக் கொண்ட யாருமே 'வயதானவர், கிழவர்' என்ற சொற்களை ஏற்றுக் கொள்ள இலகுவில் ஒப்புவதில்லை. ஆனால் முப்பத்தைந்து அல்லது நாற்பது வயதாகிவிட்டால் ஒவ்வொருவரும் இந்தச் சொற்களுக்கு இலக்காகத்தான் வேண்டியிருக்கிறது; கிழடு என்ற பேச்சுக்கு இலக்காகி விட்டால் என்ன ஆவது என்று பயப்படத்தான் வேண்டியிருக்கிறது. அங்கிலையில் கிரிதர ஸேட் மட்டும் அதற்கு விதிவிலக்காக எப்படி இருக்க முடியும்?

ஒரே சொல்லுக்கு இடத்துக்கு ஏற்றவாறு பொருள் வேறு படுகிறது என்பது யாவரும் உணர்ந்த விஷயம். கிழவர், வயதானவர், முதிர்ந்த பிராயத்தினர் என்பது போன்ற சொற்கள் பிறரைக் குறித்து உபயோகிக்கப்படும் பொழுது அதில் நமக்குக் கேலியும் பரிகாசமும் தொனிக்கின்றன. ஆனால் அதே சொற்கள் நமக்கு உபயோகிக்கப் பட்டால் அதன் பயங்கரத் தன்மை நம் கண்களெதிரே தாண்டவமாடத் தொடங்குகின்றன; நம்மைக் கதி கலங்கச் செய்து விடுகின்றன. ஒருவன் குற்றம் புரியாமல் இருக்கும் பொழுதே குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனையும் பெறுவானாகில் அவனுக்கு அது அப்பொழுது எவ்வளவு பொறுக்க முடியாத வேதனையை அளிக்கும்? சகிக்க முடியாத அநியாயமாகத் தோற்றமளிக்கும்? அதே போலத்தான் சொந்த விஷயத்தில் மேற்கூறிய சொற்கள் உபயோகப் படுமானால் ஒவ்வொருவருக்கும் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் தனக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்ற கொள்கையைக் கடைப் பிடிக்காதவர்கள் இந்த உலகத்திலேயே கிடையாது என்று தீர்மானமாகச் சொல்லி விடலாம்.




ஜூலை மாதம் ஏழாம் தேதி சென்னை சரஸ்வதி டாக்கீஸின் மானேஜர் திரு பி. பாலுஷா முதலியார் அவர்களின் புதல்வி திருநிறைச் செல்வி வசந்தாபாய் அம்மாளுக்கும் காஞ்சீபுரம் திரு டி. திருவேங்கட முதலியார் அவர்களின் செல்வப் புதல்வன் டி. சுந்தர முதலியாருக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் சென்னை திருவொற்றியூரில் நடந்தேறியது.

வாழ்க. மணமக்கள்!

ஆனால் அதற்காகச் சமூகம் பயப்பட்டால் கட்டி வருமா? அது யாருடைய எதிர்ப்பையும் என்னுக்கூட இலட்சியம் செய்வதில்லை. எந்தச் சமயத்தில் யாருக்கு எப்படி இந்தச் சொற்களை உபயோகிக்க வேண்டும் என்று தருணம் பார்த்திருந்து தைரியமாக உபயோகித்து விடுகிறது. இந்தச் சொற்களை உபயோகிக்கும் விஷயத்தில் நியாய அநியாயப் பேச்சு எழுந்து விடுவதனால், நியாயத்தின் பெயரைக் காப்பாற்ற வேண்டிச் சமூகம் அந்தச் சொற்களைக் கையாளும் பொழுது எத்தனை கெட்டிக்காரத் தனமாகச் சமய சந்தர்ப்பத்தைத் தேர்ந்தெடுக்கிறது என்பதைக் கட்டாயம் நாம் மெச்சியே ஆகவேண்டும்.

கல்யாணம் செய்து கொள்ளும் பொழுது கிழவன் என்று தீர்மானிக்கப் படுபவனைத் தொழில் துறை, வியாபாரத் துறை என்று வந்து விட்டால் சமூகம் கிழவன் என்று கூறிக் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க விடுவதில்லை. கல்யாணத்துக்கு அவன் கிழவனாயிருக்கலாம். ஆனால் வியாபாரத்துக்கு அவன் வயோதிகன் அல்ல; வாலிபன் தான்! எனவே, ஒரே சொல் இடம், பொருள், ஏவலுக்கேற்றவாறு சமூகத்தில் எவ்வளவு அழகாக வியாக்கியானம் பெறுகிறது என்பது விளங்குகிறதல்லவா? லால்ஜி ஸேட் கல்யாண விஷயத்தில்தான் கிரிதர ஸேட்டைக் கிழவன் என்று கூறினாரே ஒழியத் தொழில் துறையில் கூறவில்லை.

லால்ஜி ஸேட்டின் அந்த எதிர்ப்பில் கிரிதர ஸேட்டுக்குத் தம்பியின் பொறாமையும், சொத்து துண்டாடப் பட்டு விட்டால் என்ன ஆவது என்ற பயமும் தன்னலக்கார



மேட்டூர் மராமத்து இலாகாவைச் சேர்ந்த திரு என். கோதண்டராம ஐயரின் குமாரத்தி செல்வி சூடாமணிக்கும் ஓய்வு பெற்ற பேராசிரியர் ஸ்ரீ தியாகராஜ ஐயரின் குமாரன் செல்வன் சுவாமிநாதனுக்கும் மேட்டூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

எண்ணமும் தலைவிரித்தாடுவதாகத் தோன்றியது. அதில் எவ்வளவு தூரம் உண்மை பொதிந்திருக்கக் கூடும் என்பது உணர்ந்து கூற முடியாத விஷயம்.

ஆனால் ஒரு உண்மை என்னவெனில் விஜயாவின் சிற்றப்பாவுக்கு அவர் செய்து வந்த வியாபாரத்தில் யாரோ கை கொடுத்து உதவத் தொடங்கி விட்டார்கள். எனவே, அவர் விஜயா-கிரிதர ஸேட் இவர்களின் திருமணத்தைக் கால வரையறையின்றித் தள்ளிப் போட்டுக் கொண்டே வரலானார். யாருமே வேண்டுமென்று வயதானவர்களின் கழுத்தில் இளம் பெண்களைக் கொண்டு போய்க் கட்டத் துணிவார்களா? அதன் காரணமாகத்தான் அக் கல்யாணம் தள்ளிப் போயிற்று.

இவ்விஷயத்தில் தமது தவறு ஒன்றும் இல்லை என்பதைச் சொல்லிப் போவதற்காக லால்ஜி ஸேட் நகரத்திலிருந்து கிராமத்துக்குத் தம் சகோதரரின் வீட்டுக்கு வந்திருந்தார்.

அன்று மாலை சகோதரர்கள் இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களிடம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொண்டிருந்த ஒரு குடியானவன் அங்கே வந்து சேர்ந்தான். பேச்சு வாக்கில் அவர்களிடையே வார்த்தை தடித்து விட்டது. கோபம் மூண்டு விட்ட அந்த ஆசாமி கிரிதர ஸேட்டின் தலையைத் தன் தடிக்கு இலக்காக்க முயன்றான். நல்ல வேளையாக அவன் குறி தவறி விட்டது. ஆயினும் அந்த அடிக்குப் பயந்த கிரிதர ஸேட் கதிகலங்கி விட்டார். அவர் மூளை சிதறிவிட்டது. அரைப் பைத்தியமானார்.

அரைப் பைத்தியமாகி விட்டவர்களை முழு முட்டாள்களாக்குவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? வெகு சுலபமான காரியத்துக்குக் கண் இமைக்கும் நேரம் தானே வேண்டும்? லால்ஜி ஸேட் தமது சகோதரரின் மேற்பார்வையை ஏற்றுப் பங்கு எடுத்துக் கொண்ட விதம் கிரிதர ஸேட்டுக்குப் பைத்தியமே பிடித்து விட்டது என்றும் சொல்லும்படியாக அமைந்து விட்டது. இதே சமயத்தில்தான் லால்ஜி ஸேட்டின் இரண்டாவது மனைவி காலமானாள். எனவே, அவர் எவ்வித இடையூறுமின்றி ஆட்சேப-சமாதானத்துக்கு இடமின்றி விஜயாவின் கரம் பற்றி மணம் புரிந்து கொண்டார். அது மட்டுமா? கிழக் கல்யாணம் என்ற அவச் சொல்லிலிருந்தும் அவளைக் காப்பாற்றி விட்டார். இரு சகோதரர்களுக்கும் இடையே வயதில் ஆறு ஏழு வருஷ வித்தியாசம் இருந்தது. அதனால் கிடைப்பதாக இருந்த வரனைக் காட்டிலும் கொஞ்சமாவது வயது குறைந்த கணவர் கிடைத்தாரே என்று விஜயா தன் பாக்கியத்தைத் தானே புகழ்ந்து கொள்ளும்படியாகி விட்டது. அதனால் அவ் விஷயத்தில் அவள் அதிர்ஷ்டசாலி தானே! (தொடரும்)

சிறுமியின் காணிக்கை

இரண்டு வாரங்களுக்கு முன் எங்கள் 'கான்வெண்டின்' தலைவி 'மதர்' வேகமாக நான் அமர்ந்திருந்த ஆறும் வகுப்பை நோக்கி வந்தார். "ஜமலா தேவி என்னும் குழந்தை யார்!" என்று கேட்டார். அச்சத்தால் வெருண்ட எட்டு வயதுச் சிறுமியாகிய நான் அவர் அருகே சென்றேன்.

"மகளே! சென்னை கவர்னர் இந்தக் கடிதம் அனுப்பியிருக்கிறார். உனக்கு கவர்னர் ஸ்ரீ பிரகாசா கடிதம் எழுதக் காரணம் என்ன!" என்று வினவினார். அப்பொழுதுதான் எனக்கு நினைவு வந்தது.

காந்தித் தாத்தாவை நான் பார்த்ததே இல்லை என்றாலும், அப்பெரியவர் நம் இந்திய நாட்டுக்கு அரிய பணிகள் செய்து தம் உயிரையே இழந்தார் என்று நான் படித்திருக்கிறேன். "கல்கி"யில் கவர்னர் ஸ்ரீ பிரகாசா காந்தி மண்டப நிதி பற்றிய கடிதமொன்று வெளியாகியிருந்தது. எனக்கு அளவில்லா மகிழ்ச்சி. நான் சேர்த்து வைத்திருந்த ஒரே ஒரு ரூபாயை என் அம்மாவுக்குக் கூடத் தெரியாமல் சென்னை கவர்னருக்கு அனுப்பி வைத்தேன்! அத்துடன் சிறியதொரு கடிதமும் வைத்திருந்தேன். "காந்தி நினைவு மண்டபத்துக்கு ஒரு சிறிய செங்கலுக்குக் கூட அந்த ஒரு ரூபாய் போதாது......" என்று எழுதியதாக நினைவு.

அக் கடிதத்தின் மறுமொழிதான் இக்கடிதம் என்ற வரலாற்றை எடுத்துச் சொன்னேன். பள்ளித் தலைவி என்னைப் பெரிதும் பாராட்டினார். வகுப்பில் உள்ள மற்ற தோழியர் எல்லாம் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அக்கடிதத்தை என் மேஜை மீது அருமையாக வைத்திருக்கிறேன். என்னையும் காந்தி நிதி ஜமலா என்று அழைக்க ஆரம்பித்து விட்டார்கள், என் தோழிகள்.

பெரியவர்களாகிய அப்பாவும் அம்மாவும் கொடுப்பார்கள் என்றாலும், என் போன்ற சிறுவரும் இயன்ற அளவு உதவினால், காந்தித் தாத்தாவின் நினைவு மண்டபம் விரைவில் எழும்பிவிடும்.

நாகர்கோவில்
2—7—54

எஸ். ஜமலா தேவி



என்னுடைய கண்கள் இரவில் ஒளியுடன் பிரகாசிக்கின்றன. ஏனெனில் எஸ்ட்ரெல்லாவிலிருக்கும் ஒளிச் சக்தி என்னிடமிருக்கிறது.
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
எஸ்ட்ரேலா பாட்டரீஸ்
எஸ்ட்ரெல்லா பாட்டரிகள் மிகப் பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுப்பவை, நீடித்து உழைப்பவை, குறைந்த விலையுள்ளவை.
எஸ்ட்ரெல்லா பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - டெல்லி - மதராஸ் - கான்பூர் - நாக்பூர் - கல்கத்தா.



பெர்ல் பார்லி என்று கூறுவதற்கு முன்பாக
ராபின்ஸன்ஸ்
என்று சொல்லிக் கேளுங்கள்
ROBINSON'S
PEARL
BARLEY
எல்லா உபயோகங்களுக்கும் சிறந்தது
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்.,
த. பெ. 664, கல்கத்தா.



தீக்குச்சியின் பிறப்பு

வி. ராஜாமணி

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் நெருப்பைக் கண்டு பிடித்துப் பின் அதன் அவசியத்தையும் உணர்ந்து அதை அக்னி பகவானுகக் கருதினன். அது அநேகமாய் ரிஷிகளிடமே இருந்து வந்தது. நெருப்பு தேவைப் பட்டவர்கள், துணி பஞ்சு போன்ற மிருதுவான சாமான்களைக் கொண்டு எடுத்து உபயோகப் படுத்தினர். நாகரிகத்தின் வளர்ச்சியாலும் விஞ்ஞான ஆராய்ச்சியாலும் இன்று நெருப்பு, நெருப்புப் பெட்டியாகிச் சட்டைப் பையில் கூடப் பத்திரமாக வைத்துக் கொள்ளக் கூடிய நிலையில் வந்து விட்டது.

இன்று, தீப் பெட்டிகள் முக்கிய ஸ்தானம் பெற்று விட்டன. இந்தத் தீக்குச்சியும், தீப்பெட்டிக்கான பெட்டிகளும் எப்படிப் பிறக்கின்றன தெரியுமா?

மரங்களில் 'குல' மரம், 'படு' மரம் என இரு வகைப்படும். தேக்கு, வீட்டி, வேங்கை, கோங்கு, இருள் மருது, பலா, மா போன்ற கடின மரங்களை மலைகளிலிருந்து வெட்டி, வீழ்த்தி நாட்டுக்குக் கொண்டு வந்து வீட்டு வேலைக்கு உபயோகப் படுத்தப் படுகின்றன. இவைதான் குல மரங்கள். பாலை, மட்டி, பூனை, இலவு, கம்பிளி, குங்கிலியம், முள பிளாச்சி, சவகாரி, உதி, உசில் தணக்கு, அகில், வெண் தேக்கு, அம்பாளம், மலை ஆதானை, ஆமத்தளை, வெளுவாகை போன்ற மரங்கள் படு மரங்கள் ஆகும். இந்த இனத்தைச் சேர்ந்த மரங்கள் தென்னிந்தியாவில் உள்ள மேற்கு மலைத் தொடரில் அபரிமிதமாகக் கிடைத்து வந்தன.

இந்தப் படு மரங்கள் நம் நாட்டில் ஐம்பது வருடங்களுக்கு முன், பெருவாரியாக உபயோகப் படுத்த வழி தெரியாமல் இருந்தன. அந்தக் காலங்களில் இந்தப் படு மரங்களைக் கொண்டு அகப்பை, சட்டுவம், விளையாட்டுப் பொம்மைகள், தற்காலிக மரப் பெட்டிகள் மட்டுமே செய்யப்பட்டு வந்தன.

நம் நாட்டில் ஜனப் பெருக்கம் அதிகரிக்கவே, காடுகளை அழித்து விவசாயம் செய்ய வேண்டிய நிலை வந்தது. வெளி நாட்டார் மலைகளின் மேலே யுள்ள மண் கண்டங்களில் உள்ள படு மரங்களை வெட்டி எரித்து, அந்த இடங்களில் காப்பி, தேயிலை, ரப்பர் முதலியவைகளைப் பயிர் செய்தனர். சிலர் இவைகளை வெட்டிக் குழிகளில் போட்டு மக்கிப் போக வைத்தனர். மலைச் சரிவுகளில் காலி செய்ய முடியாத மரங்களை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் குடியானவர்களுக்குப் பணம் கொடுத்துக் காலி செய்து கொண்டு போகச் செய்தனர்.

இந்த நிலையில் இருந்த படுமரங்களுக்கு உச்சநிலை ஏற்பட்டு விட்டது. அது மட்டும் அல்ல. முப்பது வருஷங்களுக்கு முன் கன அடியின் விலை நாலு அணுவாக இருந்தது. இன்று நாலு ரூபாய்க்குக் கூட மேற்படி மரங்கள் விலைக்குக் கிடைப்பதில்லை.

இன்று இந்தப் படுமரங்கள் தீப் பெட்டித் தொழிலுக்குக் காலிப் பெட்டிகள் உண்டாக்



கவும், ஒட்டுப் பலகைகள் தயாரிக்கவும் உபயோகப் பட்டு, கிலச்சுவான்தார்களுக்கும் சர்க்காருக்கும் நல்ல வரும்படியை அளிக்கின்றன.

தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மரம், மிருதுவாகவும், நேர் நரம்புகள் உள்ளதாகவும், மத்திய பாகத்தில் சோறு இல்லாமலும், சிறிது பலமுள்ளதாகவும் நிறம் வெண்மையாகவும் இருக்க வேண்டும். அநேகமாக, மலைச் சரிவுகளிலும், நிலக் காட்டிலும், வெய்யிலிலும் நிற்கும் மரங்கள் அநேகமாய் வெளுப்பாக இருப்பதில்லை. பொது ஜனங்கள் வெள்ளைக் குச்சிகளைத் தவிர, சிவப்பு, பழுப்பு, இளம்மஞ்சள், இளம் சிவப்புக் குச்சிகளைக் கொண்டு தீப் பெட்டி தயாரித்தால் வாங்குவதில்லை. வெளி நாட்டார், ஜப்பான், சுவீடன் முதலிய இடங்களிலிருந்து ஸைபீரியா காட்டு மரங்களைத் தடிகளாகப் பட்டை உரிக்காமல் கப்பல்கள் மூலம் கொண்டுவந்து வெள்ளைக் குச்சிகளாலான தீக்குச்சிகளைச் செய்தார்கள். இதனால் அவர்கள் வியாபாரம் ஓங்கியும், குடிசைத் தொழில் முறையில் செய்யும் தென்னிந்திய தீப் பெட்டித் தொழில்கள் 1930 ... 1935 வருஷங்களில் மிகவும் க்ஷீண திசை அடைந்தன.

எனவே, வெள்ளைக் குச்சிகளுக்காகச் சிலர் மலையுச்சிகளை யெல்லாம் தேடினர். கடைசியில், சோலைகளிலும் தண்ணீர்ப் பதம் இருக்கும் பள்ளத் தாக்குகளிலும் மேற்குமலைத் தொடர்களில் சில வெண்மை நிறமுள்ள, சிறிது பலமுள்ள மரங்களைக் கண்டு பிடித்து வெட்டிப் பார்த்தனர். இவை வெளி நாட்டு மரங்கள் போலில்லாமல் இருந்தாலும் இந்த மரங்களிலிருந்து செய்யப்பட்ட

1. தீக் குச்சிகள் தயாராகின்றன. 2. படு மரத்திலிருந்து அட்டைகள் தீப்பெட்டிக்காக உரிக்கப்படுகின்றன. 3. உரித்த அட்டைகள் உத்தரத்தில் உலர வைக்கப்படுகின்றன.

குச்சிகளை உபயோகித்த தீப்பெட்டிகளுக்குக் கிராக்கியும், நல்ல விலையும் கிடைத்தன.

இரண்டாவது மகா யுத்தம் ஏற்பட்ட பொழுது வெளி நாட்டிலிருந்து மரங்கள், இயந்திரங்கள், மருந்துகள் எல்லாம் இறக்குமதியாவது நின்றன. குடிசைத் தொழில்களும், இயந்திரங்களால் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் வெளி நாட்டார் கம்பெனிகளும் இந்தியாவில் உள்ள மரங்களையே பெருவாரியாக உபயோகப்படுத்த நேரிட்டது. மெதுவாக மக்கள் எல்லாத் தீப்பெட்டிகளையும் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்தனர்.

இதனால் குடிசைத் தொழில் முறையில் தீப்பெட்டி உற்பத்தி செய்து சீர்குலைந்து கிடந்த தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தலை தூக்கி நின்றன. புதிய உற்பத்தித் தொழிற்சாலைகள் பல உண்டாயின.

தீப்பெட்டிக்கு வேண்டிய குச்சிப் பெட்டிகளைத் தயார் செய்ய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று முழுவதும் கையினாலே, ரம்பங்களைக் கொண்டும் செய்தல்; மற்றொன்று முழுதும் இயந்திரங்களைக் கொண்டு செய்தல். முதல் முறை நடை முறையில் இருந்து வந்த போதிலும் 1925ம் வருஷத்துக்குப் பின் ஒரு சிலர் குச்சிப் பெட்டிகளுக்குக் கிராக்கி வருவதைக் கண்டு ஜப்பான், ஜெர்மனி, சுவீடன் தேசங்களிலிருந்து இயந்திரங்களைத் தருவித்துச் செய்ய ஆரம்பித்தனர்.

இத்தொழில் குடிசைத் தொழில் முறையில் விருத்தியாவதைக் கண்டு பொறாமை கொண்ட வெளி நாட்டுத் தீப்பெட்டி ஆலைக் கம்பெனியார், இயந்திரங்கள் செய்யும் எல்லா நாட்டுத் தொழில் ஸ்தாபனங்களுடனும் 'இந்தியாவுக்குத் தீக்குச்சிக்குப் பெட்டி செய்யும் இயந்திரங்கள் அனுப்பக் கூடாது' என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதனால் புதிய தீக்குச்சித் தொழிற்சாலைகள் உண்டாவது தடைப்பட்டு நின்றன. ஆனால் வியாபாரம் ஏறுமுகமாகவே யுத்த காலத்தில் இருந்தது. இந்திய தீப்பெட்டிகள் ஆப்பிரிக்கா, பர்மா, இங்கிலாந்து, ஈராக் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.

சில தொழில் அதிபர்கள் தீக் குச்சிப் பெட்டிகள் செய்யும் இயந்திரங்களைத் தென் இந்தியாவிலேயே செய்ய முயன்றனர். அதில் வெற்றியும் கண்டனர். மிகவும் குறைந்த விலையில் இயந்திரங்களைச் செய்து கொடுக்க அவர்கள் முன் வரவே தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நூற்றுக் கணக்கில் தோன்றின.

இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அநேகமாக மலையாளம், திருவாங்கூர், கொச்சி, கன்னடம் முதலிய மேற்குக் கரை தேசங்களிலேதான் அதிகமாக உண்டாயின. ஏனெனில் மேற்கு மலைத் தொடரில், மேல் பாகத்தில் தான் மழை அதிகமாகப் பெய்வதால் அங்கு இந்தப் படு மரங்கள் வெகு விரைவில் வளர்கின்றன.

இந்தப் படுமரங்கள் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வரப்பட்டு இயந்திரங்களால் தயார் செய்யப்படுகின்றன. இந்த மரங்கள் காய்ந்து போனால் நிறம் மாறி விடுகின்றன. அதோடு சில பூச்சிகள் அந்த மரங்களில் உண்டாகி மரங்களைத் துளைத்து விடுகின்றன. இந்த மரங்கள் பலமில்லாத ஜாதியாதலால் பெட்டிகளாகச் செய்து, காய வைத்துக் கட்டி வைத்தாலும் பூச்சிகள் அரித்துப் பொடியாக்கி விடுகின்றன. இதைத் தடுப்பதற்குச் சில மருந்துகள் உபயோகப் படுத்தப் படுகின்றன.

ஆகையால் தீப்பெட்டிக்குப் பச்சை மரங்களாகவே தேவையாயிருக்கிறது. தற்கால வாகன வசதிகளால் மரம் வெட்டப்பட்ட முப்பது நாட்களுக்குள் எந்த மலை உச்சியிலிருந்தும் கொண்டு வரப்படுகிறது. இவைகளை மேல் பட்டைகளுடனே கொண்டுவரப் படுவதால் காய்ச்சல் அதிகமாவதில்லை.

இந்த மரங்களை முதலாவதாகத் தொழிற்சாலைகளில், அதன் தோலை உரித்து எடுத்து ஒரு அடி அல்லது இரண்டு அடி துண்டுகளாக முறித்துக் கொள்கிறார்கள். பிறகு அவைகள் குச்சி உரிக்கும் இயந்திரத்தில் மாட்டப் படுகின்றன. இயந்திரத்தினால் அவை தீக்குச்சிகளின் கனத்துக்கு உரிக்கப்படுகின்றன. இப்படி உரிக்கப்பட்ட பட்டைகளை அதற்குரிய சட்டங்களில் பெண்களும், பையன்களும் ஆறு அங்குல உயரம் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்குகிறார்கள்.

இப்படி அடுக்கப்பட்ட மரப் பட்டைகள் குச்சிகள் வெட்டும் இயந்திரத்துக்குள் விடப்பட்டுக் குச்சிகளாக வெட்டப் படுகின்றன. வெட்டப்பட்ட குச்சிகள் களங்களில் பரவலாக விரித்து வெய்யிலில் காயப் போடப்படுகின்றன.

இதே மாதிரிதான் தீப் பெட்டிக்கான பெட்டிகள் செய்வதற்கும் பெட்டி உரிக்கும் இயந்திரங்களின் மூலம் தாள்போல் உரிக்கப் படுகின்றன. உரிக்கும் பொழுதே இதில் நான்கு கோடுகளும் போடப்பட்டு விடும். இப்படி உரித்த பட்டைகளை ஆறு அடி நீளத்தில் வைத்து முறித்துத் தொங்க விட்டுக் காயப் போடப் படுகின்றன. நம் நாட்டில் ஒரு சில தொழிற்சாலைகள் தவிர மற்றவை இயற்கைக் காற்றிலும், வெய்யிலிலும் காய வைத்து வருகின்றன. செயற்கை முறையில் காய வைப்பதில்லை. மழைக் காலங்களில் மட்டும் அடுப்புகள் வைத்து மர அட்டைகளை உலர வைக்கின்றனர்.

உலர்ந்த மர அட்டைகளை அளவு செய்யும் இயந்திரங்களைக் கொண்டு பெட்டியின் அகலத்துக்குத் தகுந்தபடி வெட்டி நூற்று நாற்பத்துநாலு அட்டைகளாகக் கட்டி மலையாளத்திலிருந்து தீப் பெட்டித் தொழிற்சாலைக்கு அனுப்பப் படுகின்றன. தீக் குச்சிகளும் தீப்பெட்டிக்கான அட்டைகளும் பிறக்கும் விதத்தைத் தெரிந்து கொண்டீர்களா?



பட்டாபியின் குடும்பத்தில் செல்வமும் சந்தோஷமும் சேர்ந்து கை கோத்து விளையாடின!

"பட்டாபிக்கு இரண்டு நாட்களாகக் கடுமையான ஜுரமாமே? நீங்கள் போய்ப் பார்க்கக் கூடாதா?" என்று கமலா என்னிடம் சொன்ன போது தான், "எந்தப் பட்டாபி?" என்று வாய் தவறிக் கேட்டு விட்டேன். காப்பியைக் குடித்துக் கொண்டே காலைப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த என் கவனம் ஜினிவாவிலும் இந்தோ சைனாவிலும் இருந்ததினால் எதிர்ப் புறத்திலிருந்த என் இள நண்பன் வீட்டை மறந்து விட்டிருந்தது. ஆனாலும் உடனே சமாளித்துக் கொண்டு என் மனைவியை ஆழ்ந்து நோக்கினேன். அந்தப் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்த கமலா, "நேற்று காலை அவர் வெளியூர் பிரயாணத்திலிருந்து வீடு திரும்பும் போதே உடம்பும் முகமும் பேயறைந்தாற் போலக் காணப்பட்டதாம். நல்ல ஜுரம். விடாமல் நூற்றிரண்டு டிகிரிக்கு மேலே அடிக்கிறதாம். காவேரி பாவம், சின்னக் குழந்தையை வைத்துக் கொண்டு தவிக்கிறாள்!" என்று எனக்கு விவரித்தாள்.

பட்டாபி எங்கள் காலனியில் என் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருப்பவன். சுமார் இருபத்தெட்டு வயதிருக்கும். சிவந்த மேனி. செல்வத்தில் வளர்ந்தவன். சுக புருஷன். ஒரு பிரபல சோப் கம்பெனியில் நல்ல வேலை. அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டிய வேலை அது. பட்டாபிக்கேற்ற மனைவி காவேரி. அழகும் அடக்கமும் ஒருங்கே பெற்ற அவளையடையப் பட்டாபி பாக்கியம் செய்தவன் என்று தான் சொல்ல வேண்டும். இருவருக்கும் மணமாகிச் சுமார் ஆறேழு வருஷங்கள் இருக்கும். அவர்களுக்கு மூன்று வயதில் ஒரு ஆண் குழந்தை. கணேஷ் என்று அதற்குப் பெயர்.

பட்டாபியின் பெற்றோர்கள் தங்கள் கிராமத்தில் நிலபுலன்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எப்போதாவது சென்னைக்கு வந்து தங்கள் தனயனுடன் சில வாரங்கள் தங்கி விட்டுச் செல்வார்கள். மூவரேயுள்ள

பட்டாபிக்கு என்னிடம் தனி மரியாதை; அனுபவத்திலும் வயதிலும் அவனை விடப் பெரியவன் என்ற காரணத்தினால். அன்பு என்றுகூடச் சொல்லலாம். ஒவ்வொரு தடவையும் வெளியூர் சென்று வீடு திரும்பியதும், சிறிது நேரத்துக்கெல்லாம் என்னிடம் வந்து தன் பிரயாண விவரத்தையும், அனுபவத்தையும் விளக்கிச் சொல்லிவிட்டுச் சென்றால்தான்

அவனுக்குத் திருப்தி. ஆனால் இந்தத் தடவை அவன் ஊர் திரும்பிய சங்கதியே காணாத தால், நானும் அவன் வெளியூரிலிருந்து இன்னும் திரும்பவில்லை யென்றே நினைத்துக் கொண்டிருந்தேன்.

அவசரமாக நான் சட்டையை மாட்டிக் கொண்டு எதிர் வீட்டுக்குச் சென்றபோது, காவேரி கதவைத் திறந்தாள். கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த பட்டாபி கண் களைத் திறந்து கொண்டிருந்தாலும் என்னைப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஜுர வேகம் என்று நினைத்தேன். களை பொருந்திய அவன் முகம் கறுத்து விட்டிருந்தது!

"வாருங்கள்!" என்றான் பட்டாபி.

"ஒன்றும் பயப்படாதே, பட்டாபி! சாதாரண ஜுரமாய்த்தானிருக்கும்! இரண்டு நாளில் சரியாய் விடும்!" என்று உலக வழக்கத்தை ஒட்டிச் சொன்னேன்.

"ஜுரத்துக்குப் பயப்பட வில்லை, சார்! அதற்கு டாக்டர் இருக்கிறார், மருந்து இருக் கிறது! ஆனால்......"

காவேரி கையில் காப்பியுடன் உள்ளே நுழைவதைக் கண்ட பட்டாபி 'சட்'டென்று நிறுத்தி விட்டான்.


எனக்குப் பட்டாபியின் இந்தப் புதுச் செய்கை புரிய வில்லை. மனைவியிடம் ஒளித்து வைக்கும்படியான விஷயம் என்ன இருக் கிறது பட்டாபியிடம்? அந்நியோந்நிய தம்பதிகளான அவர்கள் வாழ்க்கையில் அப்படித் திடீர் என்று என்ன சந்தேகப் பேய் தோன்றி விட்டது? அப்படி ஏதாவதிருந் தாலும் அதற்கும் பட்டாபியின் ஜுரத்துக்கும் என்ன சம்பந்தம்? சில வினாடிகள் என் மனம் அலை பாய்ந்தது! அதற்குள் காவேரி வீட்டினுள் திரும்பிப் போய் விட்டாள்.

"காப்பி உங்களுக்குத்தான்!" என்று கூறிய பட்டாபி நான் அதைக் குடித்து முடிக்கும் வரை என்னையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன பட்டாபி! நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே!" என்று தொடர்ந்தேன்.

சில நிமிடங்கள் பேசாதிருந்து என் பொறு மையைச் சோதித்தான் பட்டாபி. பிறகு தயங்கித் தயங்கி, "சார்! சொல்ல எனக்குப் பயமா யிருக்கிறது! வெட்கமாயு மிருக் கிறது! இந்தத் தடவை நான் மலபாருக்குப் போனபோது ஒரு சோதிடரிடம் சிக்கிக் கொண்டேன். யோகமுள்ள ஜாதகன் என்று என்னைப் பற்றி அபிப்பிராயம் கொண்டிருந்த நான் என் பிறந்த நாளையும் நேரத்தையும் அவரிடம் சொன்னேன். ஆனால் அவர் கணக் குப் போட்டுப் பார்த்து விட்டுச் சொன்ன விஷயம் என்னை ஒரு கலக்குக் கலக்கி விட்டது!" என்று கூறி நிறுத்தினான். அவன் உள்ளம் ஏதோ பயங்கர அவஸ்தையால் வேதனைப் பட்டது, அவன் முகத்தில் நன்று கத் தெரிந்தது! பட்டாபிக்கு ஏற்பட்டுள்ள வியாதி அவன் உள்ளத்தைப் பற்றியதுதான் என்றும் இப்போது தெரிந்து விட்டது!

"பயப்படாதே! சொல், பட்டாபி! நான் ஏதோவென்று பயந்து விட்டேன்! யாரோ



ஒருவன் கெடுதலாகச் சொன்னான் என்று அதையே எண்ணிப் பீதி யடையலாமா?" என்று தேற்றினேன்.

"இல்லை சார்! அவன் சொன்ன செய்தி என் உயிருக்கே உலைவைத்து விட்டிருக்கிறது, சார்!" என்று சொன்னபோது பட்டாபியின் கண்களில் கண்ணீர் பெருகியது. துன்பமும் துயரமும் என்னவென்றே யறியாத பட்டாபியின் தற்போதைய நிலையைக் கண்டதும் என் உள்ளமும் நெகிழ்ந்தது.

"சோதிடன் கணக்குப்படி அடுத்த அமாவாசையின் மறுநாளே என் ஆயுள்...என் ஆயுள்...!" தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டிருந்த பட்டாபி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். தன் அழுகையை அமுக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தபடியால் அவன் உடல் குலுக்கிக் குலுக்கிப் போட்டது!

பட்டாபி சொன்ன விஷயம் என் மனத்தில் சொல்லொணாத துயரத்தையும் கவலையையும் உண்டாக்கியது. இன்பக் கடலில் விளையாடிக் கொண்டிருந்த இச்சிறு குடும்பத்தை எப்பேர்ப்பட்ட கஷ்டம் வந்து சூழ இருக்கிறது! பட்டாபிக்குப் பிறகு காவேரி நிற்கும் அலங்கோல நிலைமை இப்போதே என் மனக்கண் முன் வந்து நின்றது. அப்பப்பா! என்னால் சகிக்க முடியவில்லை. எனக்கு அந்தச் சோதிடர் மேல் வந்த கோபத்தில் அவர் மட்டும் அப்போது என்னெதிரே யிருந்திருந்தால் அவரை என்ன செய்திருப்பேன் என்று சொல்ல முடியாது!

பட்டாபியின் விக்கல் மெதுவாகக் குறைந்து வந்து கொண்டிருந்தது. நான் மெதுவாக அவனைத் தொட்டு, "பட்டாபி! நீ பயப்படாதே! உண்மையான எந்தப் பெரிய சோதிடனும் நீ கேட்காமலிருக்கும் போதே முதலிலேயே உன் ஆயுளைப்பற்றிச் சொல்ல மாட்டார்! அதுவும்



அசுபமான விஷயத்தைச் சொல்லவே மாட்டார்! ஜனங்களின் மனநிலை அறியாமல் இம்மாதிரி சோதிடம் சொல்கிறவர்கள் உண்மையில் அரை குறைப் பேர்வழிகளே! அசட்டுத்தனமாக உன் மனத்தைத் தளர விடாதே. உன் ஜாதகத்தைக் கொடு. எனக்குத் தெரிந்த சோதிடரிடம் கேட்டுச் சொல்கிறேன்!" என்றேன்.

"வேண்டாம் சார்! எனக்குப் பயமாயிருக்கிறது! அவரும் அதையே ஊர்ஜிதப்படுத்தினால்..." பட்டாபியின் கண்கள் மிரண்டன!

எனக்கும் அது சரியாகப் பட்டது. ஆனாலும் நான் அம்மாதிரி காண்பித்துக் கொள்ளாமல், "பட்டாபி! நிச்சயமாய் அந்தச் சோதிடன் சொன்னது பொய்! அது உண்மையாயிருக்குமானால் உன் கல்யாணத்துக்குமுன் காவேரியின் பெற்றோர்கள் உன் ஜாதகத்தைப் பார்த்த போதே தெரிந்து கொண்டிருக்க மாட்டார்களா? அப்படிக் கெடுதல் ஏதாவதிருந்தால் உனக்கு அவர்கள் பெண்ணைக் கொடுத்திருப்பார்களா? இதையெல்லாம் நீ யோசனை செய்து பார்த்தால் நீ கவலைப்பட நியாயமில்லை. எழுந்திரு. எல்லாவற்றையும் மறந்து விடு!" என்று பரிவுடன் கடிந்து கொண்டு என் வீட்டுக்குத் திரும்பினேன்.

பட்டாபிக்கு என்ன தைரியத்தைச் சொன்ன போதிலும் என் மனத்திற்குள் ஒரு பயம் இருக்கத்தானிருந்தது. அவன் குறிப்பிட்ட அமாவாசை வர இன்னும் இரண்டு வாரங்களே யிருந்தன. பட்டாபிக்கு உடல் ஜுரம் மறைந்து விட்டாலும் உள்ளத்தில் ஹீனம் இருக்கத்தான் செய்தது. ஆபீஸுக்கு ஒரு மாத லீவு எழுதிப் போட்டு விட்டான். காலையிலும் மாலையிலும் தவறாமல் அவன் வீட்டுக்குச் சென்று ஏதாவது உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே, அவனைத் தேற்றிக் கொண்டே வருவேன். காவேரியிடம் இந்த விஷயத்தைப் பற்றி மூச்சுக் கூட விடக் கூடாது என்று நான் பட்டாபியைக் கண்டித்திருந்தது, அவனுக்கும் சரியென்று பட்டது. குழந்தை கணேசை அவன் எடுத்துக் கொஞ்சும் போதெல்லாம் பட்டாபியின் மனத்திலிருக்கும் வேதனையை யெல்லாம் நான் தெரிந்து கொண்டாலும் கவனியாதவன் போல இருந்துவிடுவேன்.

இப்படி ஒரு வாரம் சென்றது. பட்டாபியின் மன நிலை மெதுவாகப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறதென்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில் கதவை அவசரமாகத் திறந்த போது காவேரி கண்ணீரும் கம்பலையுமாகக் குழந்தை கணேசைத் தன் தோளின் மேல் போட்டுக் கொண்டு நின்றாள். "மாமா! அவருக்கு உடம்பை என்னமோ செய்கிறது! நல்ல ஜுரம்! டாக்டருக்கு ஆளை அனுப்பியிருக்

கிறேன்! எனக்குப் பயமாக இருக்கிறது! கொஞ்சம் நீங்களும் அவரும் எனக்குத் துணையாக வாருங்களேன்!" என்று பதறிக் கொண்டே சொன்னாள்.

டாக்டருக்குப் பட்டாபியின் நிலையும் ஜுரத்தின் காரணமும் விளங்கவில்லை. உடம்பில் ஒரு விதக் கோளாறுமில்லை. ஆனால் தெர்மா மீட்டர் நூற்று மூன்று டிகிரி காண்பித்தது. அவர் பட்டாபி தூங்குவதற்கு ஒரு இஞ்செக்ஷன் செய்து விட்டுச் சென்றார். அந்த இரவு முழுதும் நான் பட்டாபியின் அருகிலேயே இருந்தேன். என் மனைவி காவேரிக்குத் துணையாக அங்கேயே படுத்துக் கொண்டிருந்தாள்.

மறு நாள் விடியற்காலை பட்டாபி கண் திறந்த போது என்னைத்தான் முதலில் ஏறிட்டுப் பார்த்தான்.

"என்னப்பா! பட்டாபி! நீ தைரியசாலி என்று நினைத்தேன். ராத்திரி எங்களை யெல்லாம் நிலை கலங்க அடித்து விட்டாயே! காவேரிதான், பாவம், ரொம்ப அழுது விட்டாள்!" என்று சொன்னேன்.

"சார்! நீங்கள் சுலபமாகச் சொல்லி விடலாம்! பிறருக்கு உபதேசம் செய்வது சுலபம்! ஆனால் என் மனோ நிலையில் நீங்கள் இருந்திருந்து பார்த்தால்......"

என் முகத்தில் தோன்றும் கோபச் சாயலைக் கண்ட பட்டாபி பேச்சை மாற்றி, "கோபித்துக் கொள்ள வேண்டாம். என் மனக் குழப்பத்தில் ஏதோ பேசி விட்டேன். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது! நாங்கள் மூவரும் எங்கள் ஊருக்குப் போய் என் தாயார் தகப்பனாருடன் சில காலம் இருந்து விட்டு வருகிறோம். மற்ற உறவினர்களும் என் ஊருக்கு அருகே இருக்கிறார்கள். அங்கு போன பிறகு என் மனைவியிடம் சமயம் பார்த்து விஷயத்தைச் சொல்லி அவளைத் தேற்றி......" என்று இழுத்தான்.

"பட்டாபி! இப்போது தான் உன் அசட்டுத்தனம் எல்லையை மீறிப் போகிறது! நீ உன் மனைவியிடம் இருக்கப் போகாத விஷயத்தைச் சொல்லவும் வேண்டாம்! நடக்கப் போகாத விஷயத்துக்காக நீ முன்னேற்பாடு செய்யவும் வேண்டாம்! உன் தகப்பனாருக்கும் காவேரியின் தகப்பனாருக்கும் நேற்று இரவே தந்தி கொடுத்தாகி விட்டது. அவர்கள் இன்று சாயங்காலம் வந்து விடுவார்கள். உன்னைச் சேர்ந்தவர்களும் வருவார்கள். வந்ததும் உன் கவலைகள் தானாகவே மறைந்து விடும்!" என்று சொல்லி விட்டு வீடு திரும்பினேன்.

அன்று சாயங்காலமே பட்டாபியின் பெற்றோர்களும், காவேரியின் பெற்றோர்களும் வந்து சேர்ந்தார்கள். மறு நாள் காலை காவேரியின் சகோதரர்கள் இருவரும் தங்கள் மனைவிகளுடன் பட்டாபியைப் பார்க்க வந்து விட்டார்கள். உண்மை அறியாத காவேரி தன் கணவனின் திடீர் வியாதியைப் பயங்கரமாக வர்ணித்தவுடன் எல்லாரும் பயந்து பெரிய டாக்டர்களை வரவழைத்து யோசனை கேட்டார்கள். அவர்களும் அவனைப் பரிசோதித்துத் தங்கள் முடிவைப் பத்து தினங்களில் தெரிவிப்பதாகக் கூறிச் சென்றார்கள். அதற்கிடையில் அவன் ஊருக்குப் போக வேண்டிய அவசியமில்லை என்றும் அவன் படுக்கையை விட்டு நகரக் கூடாதென்றும் கூறி, அவனுக்காகப் பல மருந்து தினுசுகள் எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

பட்டாபியின் பெற்றோர்களும் சுற்றத்தார்களும் வந்து விட்டதால் என் பொறுப்பு நின்று விட்டது. ஆனாலும் அதற்கிடையில் ஒருநாள் காலை பட்டாபியைப் பார்க்கச் சென்றேன். பார்த்து விட்டுத் திரும்பும்போது அவன் குழந்தை கணேஷ் ஒரு மூலையில் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஏதோ எண்ணத்தினால் உந்தப்பட்டவனாய் மெதுவாகக் குழந்தையின் கன்னத்தில் கையை வைத்துப் பார்த்தேன். அச்சமயத்தில் அங்கு வந்த காவேரி, "கணேஷுக்கு வேறு இரண்டு நாளாக ஜுரம்! டாக்டர் மருந்து கொடுத்திருக்கிறார்!" என்றாள்.

* * *


குறிப்பிட்ட அமாவாசைக்கு மறுநாள் வந்து விட்டது! நானும் ஏதோ ஒரு பயத்தால் பட்டாபியை அன்று நேருக்கு நேராகப் பார்க்கலானேன். பட்டாபியைத் தன் மனைவியிடம் உண்மையைச் சொல்வதிலிருந்து நான் தடுத்தது ஒரு வேளை தவறான காரியமோ என்று எனக்குத் தோன்றியது! ஒரு வேளை சோதிடர் கூறினபடி நடந்து விட்டால்? அதற்கு முன் பட்டாபி தன் குடும்ப விவகாரங்களைப் பற்றி மனைவியிடம் என்னென்ன சொல்ல வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தானோ? அப்படியானால் அவைகளை எல்லாம் தடுத்த பாவமும் பழியும் என்னைத் தானே சேரும். ஏதாவது விபரீதம் நடந்தால்?...

இம்மாதிரியாக நான் மனம் குழம்பிக் கொண்டிருந்த போது திடீரென்று "ஐயோ, அப்பா!" என்று பல அழுகைக் குரல்கள் கேட்டன! அவற்றைத் தொடர்ந்து இரண்டு மூன்று ஸ்திரீகளின் ஓலங்கள் கேட்டன. எல்லாவற்றுக்கும் மேலாகக் காவேரியின் துயரக் குரல் வீறிட்டுக் கொண்டு வந்தது!


"ஐயோ! சோதிடன் வாக்கு பலித்து விட்டதே!" என்று கத்திக் கொண்டே மேல் துண்டை உதறிப் போட்டுக்கொண்டே எதிர் வீட்டை நோக்கி ஓடினேன். நான் சொன்னது விளங்காமல் "என்ன! என்ன!" என்று கேட்டுக் கொண்டே கமலா என்னைத் தொடர்ந்து ஓடி வந்தாள்.

"ஐயோ! மாமி! கணேஷ் எங்கள் வாயில் மண்ணைப் போட்டு விட்டுப் போய் விட்டானே!" என்று காவேரி என் மனைவியைப் பார்த்துக் கதறிய போது அவன் மடியில் துவண்டு கிடந்த குழந்தை கணேஷின் வெளிறிய முகம் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது!

நீங்கள் இன்று
உங்கள் பற்களை




மக்ளீன்
செய்தீர்களா?



ஆம், அதன் இரக சியம் இதுதான் ...

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.





க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-38-TAM.



தீப்பெட்டித் திருமகள்
1 தீப்பெட்டித் திருமகளை மணந்து நல் வாழ்வு வாழ்ந்து வந்தவர்?...
மின்சார மோகினியா? என்ன பிரகாசம்!?
??
தீப்பெட்டியை விரட்டி விட்டேன்! மின்சாரமே! இனிமேல் உன்னுடன்தான் வாழ்வேன்!
அடடா! மின்சாரமே! என்னை விட்டு விட்டுத் திடீரென்று போய்விட்டாயே! இருள் சூழ்ந்து விட்டதே! உன்னை நம்பித் தீப்பெட்டியைக் கைவிட்டேனே!
நம்பி மோசம் போனேன். தீப்பெட்டியே! திரும்பி என்னிடம் வந்து விடு!
என் இருளைப் போக்கினாய். நீ தான் என் வாழ்வின் ஜோதி!
சாமா

உங்களுக்குத் தேவை

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

இன்ஷ்யூரன்ஸ்களுக்கு

ஆஸ்திகள் சுமார் 1 கோடி ரூபாய்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயமுத்தூர், கொச்சி

வசீகரவனப்பிற்கு ஆப்கான் ஸ்னோ

ஆசியாவின் தலைசிறந்த அழகு இரகசியம்



ESP

Patanwala

for PERFUMES AND COSMETICS

BOMBAY-27

படான்வாலா - வாசனைத் திரவியங்களுக்கு

பொறுப்பு வந்தது

"பி. வி. ஆர்"

இரண்டு மூன்று தடவைகள் ஆத்திரத்துடன் கதவைப் பலமாகத் தட்டின பிறகு தான், உள்ளேயிருந்து விசாலம் கதவு திறக்க வரும் அரவம் கேட்டது.

அருணகிரி தன்னை மறந்து விட்டான். பொறுமை இழந்து விட்டான்.

"எத்தனை தடவைதான் கதவைத் தட்டுகிறது ... இதற்குள்ளாகவா தூக்கம்?"

"மணி பத்தரை அடிக்கப் போகிறது...... பெண்டாட்டி, வீடு என்ற லட்சியம் இல்லாமல் என்ன வேண்டியிருக்கு சினிமாவும் ஊர் சுற்றலும்?" விசாலம் தூக்கம் கலைந்த வெறியில் இரைந்தாள்.

ரேழிக்குள் நுழைகையிலேயே, "எனக்கு ஒன்றும் வேண்டாம்......நீ வேண்டுமானால் வயிற்றுப் பாட்டைத் தீர்த்துக் கொள்" என்று சொன்ன அவன், அவளுடைய பதிலுக்கும் காத்திராமல் தன்னுடைய அறைக்குள் விரைந்து சென்றான்.

விசாலத்துக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. மனைவிக்குரிய கடமைக்காக அவன் வரும் வரையில் வயிற்றைக் காயப் போட்டிருந்த அவளுக்கு அவன் சொன்னதைக் கேட்ட பிறகு பசி கூடப் பறந்து விட்டது. தடார் என்று கதவைத் தாளிட்டு விட்டு மீண்டும் படுக்கச் சென்றாள்.

மறுநாள் அருணகிரி மலர்ந்த முகத்துடன் இருப்பதைக் கண்டு, தினமும்போல விசாலம் பேச்சை ஆரம்பித்தாள்.

"தினம் தினம் ஊர் சுற்றுகிற நேரத்தில் இரண்டு மணி நேரம் காலை வேளையிலும் ராத்திரியிலும் படித்தால், அடுத்த வருஷம் இந்த நாளிலே 'சூப்பிரண்டு' உத்தியோகம் கிடைக்காதா?"

"எங்கள் ஆபீஸ் பரீட்சையைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது, விசாலம்" காப்பியை ரஸித்துக் குடித்துக் கொண்டே அவன் சொன்னான்.

"எதாக இருந்தாலும் பரீட்சைதானே? உங்களோடு சேர்ந்தவர்கள் எல்லாம் 'சூப்பிரண்டாக' உயர்ந்தாச்சு. நீங்கள் மட்டும்..."

"...குமாஸ்தாதான். கடைசி வரையிலும் குமாஸ்தாதான். நீ கொண்டு வந்த சீருக்கு அதுவே அதிகம்." அருணகிரியின் மலர்ச்சி எல்லாம் மறைந்து விட்டது.

"உங்கள் சிநேகிதர்களின் பெண்டாட்டிமார்கள் இங்கே வந்து பெருமை அடிச்சுக்கிற போது, அவமானமாயிருக்கிறதே! அப்பா வேறே வருஷா வருஷம் எழுதிக் கேட்கிறார், நீங்கள் பரீட்சை எழுதினீர்களா, என்று..." விசாலம் எப்படியாவது அவனை ஒரு வழிக்குக் கொண்டுவர முயன்றாள்.


"இதோ பார், விசாலம் இப்போ கிடைக்கிற மாதிரி உனக்குக் கிடைத்தால் போதும். உன் அப்பாவுக்காகவோ, உன் பெருமைக்காகவோ என்னால் படித்துப் பரீட்சை எழுதிப் பட்டம் கட்டிக்க முடியாது" என்று அருணகிரி சொல்லிவிட்டுக் கையில் பத்திரிகையுடன் எழுந்தான்.

"உம்; தானாகக் கனியாத காயைத் தடியால் அடித்தா கனிய வைக்க முடியும்? என் தலைவிதி! என்றைக்கும் ஒரே மாதிரியாய் அவலப்படவேண்டியிருக்கு! படிப்பும் புத்தியும் இருந்து என்ன பிரயோஜனம், முன்னுக்கு வரவேண்டும் என்கிற உற்சாகம் இல்லாத போது?" விசாலத்துக்கு ஆத்திரமும் வருத்தமும் ஒருங்கே தோன்றிய நிலையில் கண்களில் நீர் ததும்பியது.

•• •• ••

அருணகிரிக்குக் கல்யாணமாகி மூன்று வருஷங்களாகி விட்டன. அவன் நான்கு வருஷங்களாக வேலையில் இருக்கிறான். குடும்ப பாரமும், எதிர்காலத்தில் தோன்றக் கூடிய பிரச்னைகளும் இன்னும் அவன் மனக் கண்ணில் படவில்லை. கல்லூரி மாணவனைப் போலச் சினிமா என்றும் கச்சேரி என்றும் பணத்தைச் செலவழிப்பதோடு அல்லாமல் வீட்டைப் பற்றியும் அக்கறை கொள்ளாமல் இருந்து வந்தான்.

தான் செய்துகொண்டு வருவது சரியல்ல; இந்தமாதிரியே வண்டி ஓடினால் நிலைக்காது என்றெல்லாம் அருணகிரிக்குத் தெரியும். ஆனாலும் அவனால் எதையும் நிச்சயப்படுத்



சென்னை மயிலாப்பூர் திரு டி. எம். ஆறுமுக ஆச்சாரியார் அவர்களின் குமாரத்தி செல்வி தனத்துக்கும் திருப்பத்தூர் ஸ்ரீ பி. வி. அய்யாக்கண்ணு ஆச்சாரியார் அவர்களின் குமாரன் செல்வன் கோவிந்தராஜுலுக்கும் சென்ற ஜூலை மீ 4-ல சென்னை திருவல்லிக்கேணியில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

திக்கொண்டு செய்ய முடியவில்லை. அவனுடைய காரியாலயத்தில் பரீட்சை எழுதி வெற்றி பெற்று விட்டால் எவனும் அவன் 'சூப்பிரண்டண்டு' பதவி பெறுவதைத் தடுக்க முடியாது. அது இல்லை என்றால் எவன் மனது வைத்தாலும் அப்பதவி கிடைக்கவே கிடைக்காது.

"இருபத்தேழு வயதில் குமாஸ்தா, நாற்பது வயதிலும் குமாஸ்தாதானா?" இந்தக் கேள்வி எழும்போது மட்டும் அவனுக்கு உடம்பு ஏனோ ஒரு கணம் சிலிர்க்கும். அந்த ஒரு கணத்தில் வைராக்கியம் தலைக்கு ஏற, அவன் வீர விரதம்கூட எடுத்துக் கொள்வான், பரீட்சை எழுதிப் பதவி பெற. ஆனால் அடுத்த விநாடியே புத்திமாறி. ஒரு சினிமாக் கொட்டகைக்குள் நுழைவான்.

தனக்கு நிரந்தர புத்தி இல்லை; அடிக்கடி முன் கோபமும் ஆத்திரமும் வருகின்றன என்றெல்லாம் அவன் உணர்ந்துதான் இருந்தான். எதையாவது செய்யத் தோன்றினாலும் சோம்பலும். லேசாக ஒதுங்கும் தன்மையும் அவனை இழுத்துக்கொண்டு போய் விடும்.

மற்றவர்கள் புத்திமதி சொல்லும்போது நெஞ்சில் தைத்தாலும் ஆணவம் தலை சிமிராமல், கோபம்தான் தலையெடுக்கும். "எனக்கு வயசாக வில்லையா? எனக்குத் தெரியும்!" என்ற ரீதியில் பதிலளித்து விடுவான்.

அவன் காரியாலயத்தில் சேர்ந்த போதே பலர் சொன்னார்கள், "நீ அதிர்ஷ்டசாலிதான்! மூன்று வருஷங்களானதும் சூட்டோடு சூடாகப் பரீட்சை எழுதி விடு. அப்புறம் கவலை யில்லை" என்று. அப்போது அவனுக்கு அதில் அக்கறை உண்டாக வில்லை, தகப்பனார் சம்பாதித்துக் கொண்டிருந்த நிலையில், "எனக்கு வேண்டியது என் செலவுக்குத்தானே! அது கிடைத்துக் கொண்டிருந்தால் போதும்" என்ற அசட்டிய மனப்பான்மையில் இருந்து வந்தான்.

குடும்பத்தின் நிலைமை மாறியது. நித்யங்களே அநித்யங்களாக மாறும் காலத்தில் அநித்யங்களைப் பற்றிக் கேட்பானேன்? மூன்று பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்த பெருமையுடன் கடனை வைத்து விட்டு அருணகிரியின் தகப்பனார் காலமானார். வீட்டை விற்றுக் கடனை அடைத்த போது கையில் மனைவிக்கு நான்கு பட்டுப் புடவை வாங்கக் கூடப் பணம் மிஞ்சவில்லை. அந்நிலையிலும் தான் உயர வேண்டும்: வீட்டைப் பிடிக்க வேண்டும் என்ற வைராக்கிய உணர்ச்சி அவனுள் நிலைக்கவில்லை.

விசாலம் கடந்த ஒரு வருஷமாகத் தினம் தினம் கோவில் மணி அடிப்பது போல, அவன் காதுகளில் ஜபித்துக் கொண்டு வந்தான். அவனும் தினம் தினம் அன்று அன்றைய குணத்துக்குத் தகுந்தாற் போல பதில் சொல்லி வந்தான்.


திடீரென்று ஒரு நாள், "இது எதில், முடியப் போகிறதோ?" என்று எண்ணினான்.

அவன் மனக் கண் முன் ஒரே நிழலாட்டம். பரீட்சை எழுதி, சூப்பிரண்டு உத்தியோகம் ஆகி விட்டது. மாதம் முந்நூறு ரூபாய். ஐந்தாறு வருஷங்களுக்குப் பின் 'ஆபீஸர்' பிரமோஷன்; அறுநூறு! இன்னும் மேலே மேலே. 'மிஸ்டர் அருணகிரிக்குச் சம்பளம் ஆயிரம்' என்று பலர் சொல்லும் வார்த்தைகள். சொந்த வீடு, கார், வேலையாட்கள், குடும்பத்தின் நிறைவு......

அடுத்த கணமே, "எல்லாம் பாலைவனச் சோலைதான். நானாவது இப்படி யெல்லாம் வருவதாவது!" என்ற எண்ணம் எழுந்தது. தோல்வி மனப்பான்மை வேறு அவனைச் சிந்திக்க வொட்டாமல் அழுத்தியது.

பத்திரிகையில் அவன் மனம் செல்லவில்லை.

தான் முன்னுக்கு வர முயலவில்லையானால் அவன் குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமைதான் என்ன? என்றென்றைக்கும் சினிமாவும் கச்சேரியும் தானா? அவற்றை ஆறு மாதங்களுக்கு, பாம்பைப் பெட்டிக்குள் அடைப்பது போல அடைத்து வைத்தால், பிறகு அறுபது வருஷங்களுக்கு அனுபவிக்கலாமே. சில சிறிய இன்பங்களைப் பெரிய இன்பங்களுக்காக ஏன் பணயம் வைக்கக் கூடாது? அவனுடன் இப்போது கேளிக்கை ஆடும் நண்பர்கள் அவனைவிட உயர்ந்த நிலையில்தானே இருக்கிறார்கள்? 'எனக்கு இதே போதும்' என்று அவன் சொல்லிக் கொண்டு வருவதில் தன்னடக்கமா இருக்கிறது? மற்ற


ஆனந்தமளிப்பது
பார்ப்பதற்கும்!
கேட்பதற்கும்!
புது
ஜீ. ஈ. உலர்ந்த பாட்டரி ரேடியோ
மாடல் டபிள்யூ-பி-53
புதிய உருவம், மெருகுபெற்ற மரக்கூடு, கம்பீரமான ஒலி. மற்றும் பல உயரிய ஜிஇ அம்சங்களும்கூடி, எல்லா அலைகளுக்குமுகந்த இந்த 6-வால்வ், 3 பட்டை உயர்ந்த பாட்டரி ரேடியோ வாங்க தகுதிபெற்றது- ரு. 375/-
பத்து ஆண்டுகளில்
இதுவே குறைந்த விலை!
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:
இண்டர்நேஷனல் ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
193, மவுண்ட் ரோடு, சென்னை :: ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பெங்களூர்
நடராஜன் சன்ஸ், மெயின் ரோடு, திருவனந்தபுரம்

வர்கள் அதைக் கோழைத்தனம் என்று சொல்லுவார்களே, என்ன செய்வது?

'நீ ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற போது. உன்னுடைய எளிய முறையை உலகத்துக்குக் காட்டேன்' என்றது மனம்.

விசாலம் கிளப்பிவிட்ட சிந்தனை அலையிலிருந்து அவன் கரை யேறுவதற்குள் மூச்சு வாங்கி விட்டது. பொறுமை இழந்து பத்திரிகையைத் தூக்கி எறிந்து விட்டு, ஸ்நானத்துக்குப் புறப்பட்டான்.

'ஜிலு' 'ஜிலு' வென்று தண்ணீர் உடம்பில் பட்டபோதும் அருணகிரியின் உள்ளத்தில் உஷ்ணம் தணியவில்லை.

"அது தணிய நீதான் முயல வேண்டும்... உன் கையில்தான் சக்தி இருக்கிறது" என்று உள்ளுணர்வு அடித்துக் கொண்டபோது அவன் தலை தானாகவே தரையை நோக்கியது.

** ** **

நாட்கள் சென்றன.

கடைசிப் பரீட்சை முடிவுகள் அன்று காரியாலயத்தில் வெளியாயின.

பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள்.

"டேய், அவன் வந்து இரண்டே முக்கால் வருஷம்தான் ஆகிறது. விசேஷ சலுகை வாங்கி எழுதிப் பாஸாகி விட்டான்."

"என்ன, முட்டாள் சங்கரன்கூடப் பாஸ் பண்ணி விட்டாண்டா! ஒரு முழம் கயிறு தான் எனக்குப் பாக்கி" என்றான் ஒருவன்.

அருணகிரியைப் பார்த்து, பல நாள் பழகிய நண்பன் ஒருவன், "ஏண்டா, உனக்குப் பிறகு வந்தவனெல்லாம் உனக்கு சூப்பிரண்டண்டாக வந்து விடுவான் போலிருக்கு. நீ அடுத்த பரீட்சை எழுதேண்டா! உனக்கு என்ன இல்லை, படிப்பா, புத்தியா, திறமையா?" என்றான்.

அருணகிரி இருந்த பகுதியில் ரமணி 'பாஸ்' பண்ணி விட்டான். அவனைக் கண்டாலே அருணகிரிக்குப் பிடிக்காது. காரியாலயத்துக்கு வந்த நாளிலிருந்தே அவன் காரியாலயப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டு வருவதைக் கண்டு கேலி செய்த தன்னைப் பார்த்து அவன் பரிகசிப்பதாகத் தோன்றியது, அருணகிரிக்கு.

அதற்கு ஏற்றாற்போலக் காரியாலயத்தில் அவன் இலாகாத் தலைமை அதிகாரியும் "என்ன அருணகிரி! ஆறு மாதத்துக்கு ஒருதரம் வெள்ளம் வருவது மாதிரி பரீட்சை வந்து போகிறது. நீ சயனத்திலிருந்து இன்னும் எழுந்திருக்க வில்லை..." என்று சிரித்துக் கொண்டே கூறினார். மற்றவர்களெல்லாம் 'கொல்'லென்று சிரித்தார்கள். முக்கியமாக, ரமணி சிரித்த சிரிப்பு அவனுள் வேலாகப் பாய்ந்து வைராக்கிய இரத்தத்தை ஊற்றெடுக்கச் செய்து விட்டது.

அவனுடைய இருதயம் கசிந்த கசிவுக்கு முத்தாய்ப்பாக, வீட்டை அடைந்ததும் விசாலம், "என் அண்ணா பரீட்சையில் தேறி விட்டானாம். பம்பாயிலிருந்து எழுதி யிருக்கிறான். உங்களை விட இரண்டு வயசு சின்னவன்..." என்று மூச்சு விடாமல் கூறினாள்.

செய்தியை விட, 'உங்களை விட அவன் இரண்டு வயசு சின்னவன்' என்ற வார்த்தைகளைத் தான் அருணகிரியால் தாங்க முடியவில்லை. அவனுடைய முன்கோபத்தையும் மீறிச் சென்ற வார்த்தைகளின் உஷ்ணம் அவனையே தகித்த போது, அவனுக்கு வாய் அடைத்தது. என்ன பதில் சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? உள்ளம் முழுதும் குறைகள் கூத்தாடுகையில் தலை நிமிர்ந்து பேச ஏது இரத்தம் தலையில்?

அன்று இரவு முழுதும் அவனுக்கு உறக்கம் கொள்ள வில்லை. பல மாதங்களாகப் படித்துப் பரீட்சை எழுதித் தோல்வி அடைந்தவனைப் போல இருதயம் நழுவிக் கொண்டிருந்தது. பரீட்சை எழுதாமலே அடைந்த தோல்வி அவனை வாட்டின நிலையில், தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான்.

எத்தனை நேரம் தான் அவன் படுக்கையில் புரண்டானோ அவனுக்கே தெரியாது.

காலையில் எழுந்ததும், அருணகிரி வழக்கம் போல் குழாயடிக்குப் போனான். அங்கே அவன் கண்ட காட்சி வேதனையைத் தந்தது.

விசாலம் கைச் செம்பைத் தடார் என்று கீழே போட்டு விட்டுத் தலையை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு கீழே உட்கார்ந்தாள். அருணகிரி பாய்ந்து ஓடி அவளைத்

தாங்கிக் கொண்டான். அந்த அரவணைப்பு விசாலத்துக்கு மிகவும் இதமாயிருந்தது.

"விசாலம், என்ன உனக்கு......மயக்கம் வந்ததா?" என்று ஆதரத்துடன் கேட்டான்.

விசாலம் மெதுவாக, "...உங்களுக்கு அப்பா எழுதியிருந்தாரே...என்னை அடுத்த மாதம் ஊருக்கு அனுப்பச் சொல்லி...! நான் நாலைந்து மாதங்களாக..." என்றாள்.

பாவம், அருணகிரிக்கு இப்பொழுதுதான் ஒருமாதிரி விஷயம் புரிந்தது.

விசாலம் சந்தர்ப்பத்தை விட்டு விடாமல், "உங்களுக்குத் தான் குடும்பப் பற்றே இல்லையே!" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

அவளது குறும்புச் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட கணத்திலேயே இரு ஜீவன்கள் பிறந்து விட்டதான பிரமை உண்டாயிற்று அவனுக்கு. அவள் வயிற்றுள் வளரப் போகும் ஜீவனும், தன்னுள் பிறந்து விட்ட புது ஒளியும் ஒன்றாக வளருமானால் அதற்குப் பிறகு அவனுக்கு ஏது சஞ்சலம், தோல்வி மனப்பான்மை? விசாலம் வைராக்கியத்துடன், தாய்மை மலர்ச்சியுடன் பத்து மாதம், எதிர்காலப் பசுமையைக் கருதி, தாங்குவாளானால் அவன் ஏன் இந்தத் துரும்பைத் தாங்கி வெற்றி பெற முடியாது?

விசாலத்தின் கையைப் பிடித்து, உள்ளே கொண்டு போய் விட்டான். அவனுக்கே ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அன்று மாலை அருணகிரி ஆபீஸிலிருந்து வந்ததும் "விசாலம், நாலு மாதம் லீவு போட்டிருக்கிறேன்! நீயும் நானுமாக அடுத்த வாரம் ஊருக்குப் போகிறோம்!" என்றான், கையிலிருந்த பெரிய பையை மெதுவாகக் கீழே வைத்துக் கொண்டே.

அவன் கூறியதைக் கேட்டதுமே பிரமித்துப் போன விசாலம், அவனையும் பையையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளுடைய பார்வையே கேள்வியை உதிர்த்தது. அருணகிரி, "பையிலே பரீட்சைப் புஸ்தகங்கள், விசாலம்! மயக்கம் போட்டு விழுந்து விடாதே!" என்றான் சிரித்துக் கொண்டே.

அடுத்த வாரம் ரயிலேறுகையில், இத்தனை நாளாக விரயம் செய்த நாட்களை எண்ணி வருத்தமுற்ற நிலையிலும் அருணகிரிக்கு, இப்போதாவது இந்தக் குலையாத உறுதி பிறந்ததே என்ற சமாதானம் உண்டாயிற்று.

சிபாரிசுக் கூடங்கள்!

ஜூலை மீ 4உ கல்கி இதழில் "துயர் தீருமா!" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட கடிதத்தைப் படித்தேன். திரு கணபதி கல்விக் கூடங்களைக் கலாசாரம் போதிக்கு மிடங்களாக உயர்த்திக் கூறுகிறார். கேளுங்கள், இச் சிறுவனின் சோகக் கதையை. 'நான் செய்த குற்றம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் 600க்கு 319 அதாவது 50 சதவீதத்துக்கு மேலாக மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி யுற்றதுதான். தமிழ் நாட்டில் சமீப காலத்தில் ஸ்தாபிக்கப் பட்டதும் தற்பொழுது மந்திரிகளும் தந்திரிகளும் வருவதால் பிரபலமடையும் ஒரு கல்லூரியில் என் போன்ற மாணவர்களுக்குச் சுலபமாக இடம் கிடைக்கும் என்று கேள்விப்பட்டேன். மூன்று ரூபாய் காணிக்கையும் செலுத்தி மனுப் போட்டேன். யாதொரு தகவலும் கிடைக்காததால் ஜூன் மாதம் 25-ம் தேதி கல்லூரிப் பிரதமரை நேரே போய்ப் பார்த்தேன். "நீ ஏன் பதினைந்தாம் தேதியே வரவில்லை! அப்பொழுது சுலபமாக இடம் கொடுத்திருப்பேனே! இப்பொழுது இடம் காலியில்லை" என்று கூறினார். ஆனால் அன்றைய தினமே 600-க்கு 250 மார்க்குகளுக்கும் குறைவாக வாங்கின இரண்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். காரணம், அவர்களுக்குச் சிபாரிசு செய்ய ஆட்களிருந்தனர். இதற்கிடையில் எனக்கு நம்பத் தகுந்த வட்டாரத்திலிருந்து இக்கல்லூரியில் இன்னும் இரண்டு இடங்கள் பெரிய மனிதர்களின் சிபாரிசு பெற்று வரும் மாணவர்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கின்றன என்று மற்றொரு தகவலும் கிடைத்திருக்கிறது. கண்ணியம், நேர்மை, நியாயம் அற்ற இம்மாதிரியான கல்விக் கூடங்கள் இந்தியாவின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்கி வருவதாகப் பிதற்றுகின்றோம் நாம். சிற்பக் கூடங்களல்ல இவை; சிபாரிசுக் கூடங்களாகும்.

மதுரை
7—7—54

பாலசுப்பிரமணியன்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.



REGISTERED No. M. 4392
Registered as a news paper in Ceylon